தமிழரசு

மலர்-4 1-4-1974 இதழ்-19

முதல்வர் கலைஞர் உரை

நீர் வசதி மின் வசதி பெருக்கிட
நிலையான திட்டங்கள்

தொழுநோய்ப் பிச்சைக்காரர்
மறுவாழ்வு இல்லங்கள்

காவல் துறையில் கன்னியர்

திருவாளர் தெருவாழ்வு (கவிதை)

மகளிர் நலங்காக்கும்
மாபெரும் பணி இல்லம்

தென்மண்டலம் தேடிய வெற்றி

கேளுங்கள்—கொடுக்கப்படும்

காணி நிலம் வேண்டும்
—தொடர் கதை

வெண்பாப் போட்டி

வெளிநாட்டுச் செலாவணி தரும்
குளிர்மணச் சந்தனம்

காசுகள் சேர்த்திடக்
கம்பு பயிரிடுவீர் !

மற்றும் பல

'முன்னேற்றப் பாதையில் பிற்பட்ட வகுப்பினர்'

தமிழரசு
16-4-74 இதழுடன்

இலவச இணைப்பு

கல்வி, தொழில், வேலைவாய்ப்பு
இவற்றில் அரசு அளிக்கும் உதவிகள்
சலுகைகள் பற்றி விளக்கும் வெளியீடு !

முதியோர்க்கு உதவித் தொகை

முதல்வர் கலைஞர் அறிவிப்பு

முதியோருக்கு உதவித் தொகை வழங்கிட தனிப்பட்ட பொது நிறுவனங்கள் முன்வந்தால் அவைகளுக்குத் தமிழக அரசு சார்பில் தார்மீக உதவி அளிக்கும்.

முதியோர் உதவித் திட்டத்தின்படி 1967 ஜனவரியில் 43121 பேருக்கு உதவித் தொகை வழங்கப்பட்டது. 22—11—73 வரை 44,505 பேருக்கு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி 1962-ல் தான் அதிக அளவில் கொடுக்கப்பட்டது. இதனை மேலும் விரிவுபடுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை. உடல் ஊனமுற்றோருக்கு உதவும் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படவிருக்கிறது. இதன்படி 60 வயதுக்கு மேலும் அதற்கு குறைவாகவும் உள்ளவர்கள் பயன்பெற வாய்ப்பு இருக்கிறது.

இத்திட்டத்தின்கீழ் விதவைகளுக்கும் உதவுவது பற்றி பரிசீலிக்கலாம். அறுபத்தைந்துக்கு மேற்பட்டவர்களில் ஆதரவற்ற நிலையில் இருப்பவர்களும் 60 வயதுக்கு மேற்பட்ட பார்வை இழந்தோர், உடல் ஊனமுற்றோர் இத்திட்டத்தின்கீழ் உதவித்தொகை பெறத் தகுதி படைத்தவர்களாவார்கள்.

இத்திட்டத்தின்படி உதவித் தொகை வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதை கூடுமானவரை தவிர்க்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

பல முதியவர்கள் உறவினர்கள் இருந்தும் அவர்கள் கல்மனத்துடன் ஆதரிக்காமல் விடுவதால் அவர்கள், அவதிப்பட நேரிடுவதாக, இங்கே கூறப்பட்டது. அத்தகைய கல்மனமில்லாமல் நல்மனம் கொள்ளவேண்டும் என்று அவர்களது உறவினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட ஆதரவற்ற முதியோரின் அல்லல் அகற்றப்பட சில பொது நிறுவனங்கள்—மத நிறுவனங்கள் உதவிட முன்வந்தால் அதற்கு அரசும் தனது தார்மீக உதவியைத் தரும்.

ஆசிரியர்களுக்குப் புதிய சலுகை !

ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்களுக்குத் தற்போது அகவிலைப்படி ரூ. 15 என்றிருப்பது 1—4—74 முதல் ரூ. 20ஆக உயர்த்தப்படும்.

ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்களுக்குத் தற்போது அக்கவுண்டண்ட் ஜெனரல் உத்தாவு கிடைத்த பிறகுதான் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இதனால், காலதாமதம் ஏற்படுகிறது. ஓய்வூதியம் பெறும் அரசு அலுவலர்களுக்கு அந்தந்த அலுவலகத் தலைமை அதிகாரியே 80 சதவிகிதம் வரை தற்காலிகமாக ஓய்வூதியம் வழங்கலாம் என்று முடிவு செய்து கடந்த இரண்டாண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது.

இந்தச் சலுகையை ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தி, ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்டக் கல்வி அதிகாரியே ஆசிரியர்களுக்கு 80 சதவிகிதம் வரை தற்காலிகமாக ஓய்வூதியம் கொடுக்கலாம் என முடிவெடுக்கப்படுகிறது.



கட்டபொம்மனுக்கு நினைவுச் சின்னம்

முதல்வர் கலைஞர்

பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனுக்கு ரூ. 5 இலட்சம் செலவில் நினைவுச் சின்னமெழுப்ப அரசு ஆணையிட்டிருக்கிறது.

அந்த மாவீரன் உலவிய இடமும் கொலுவீற்றிருந்த இடமும் பாஞ்சாலங்குறிச்சி என்பதாலும், அதற்கு அருகாமையில்தான் அவன் தூக்கிலிடப்பட்டான் என்ற காரணத்தாலும், நெல்லைச் சீமையிலே அந்த நினைவுச் சின்னம் அமைவது மிகவும் பொருத்தம் உடையதாகும்.

கட்டபொம்மன் காலத்தில் கட்டப்பட்ட அந்தக் கோட்டை அவனுடைய மறைவுக்குப் பிறகு ஊமைத்துரை காலத்திலும் பாதுகாக்கப்பட்டு ஆனால், அன்னியருடைய பேரெதிர்ப்பின் காரணமாக ஊமைத்துரையும் மறைந்த பிறகு, அந்தக் கோட்டை உழுது போடப்பட்டது என்ற சரித்திரத்திற்கு அடையாளமாயிற்று. அதற்குப் பிறகு, அந்தக் கோட்டை இருந்த தடமே மண்மேடிட்டிருந்தது. நம்முடைய ஆட்சிக்காலத்தில் அதை அகழ்ந்து பார்க்க வேண்டும் என்று ஆணையிடப்பட்டு, அது அகழ்ந்து பார்க்கப்பட்டது. அப்படி அகழ்ந்து ஆய்ந்ததில், அன்னியர்கள் இரும்பு பீரங்கிக் குண்டுகள், வண்ணம் பூசப்பட்ட சுதைப் பீங்கான்கள், கட்டபொம்மன் காலத்தில் பயன்படுத்தப்பட்ட தட்டுகள் இவைகளெல்லாம் கண்டுபிடிக்கப்பட்டன. அகழ்வாய்வின் பயனாகக் கட்டபொம்மனுடைய ஆலோசனை மாளிகை, திருமண மண்டபப் பகுதி, இன்னும் சில பகுதிகள் வெளிக் கொணரப்பட்டன. இவற்றின் அடித் தளங்கள் அனைத்தும் அகழ்வாராய்ச்சியிலே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 33 ஏக்கரா பரப்புள்ள அந்த நிலம் அகழ்வாய்விலே கண்டுபிடிக்கப் பட்டது.

இதனால், தனியார் துறையிலிருந்து நிலம் எதுவும் ஆர்ஜிதம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. அந்த 33 ஏக்கரா நிலத்தைச் சுற்றி வேலி போட்டுப் பாதுகாக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது, 53,000 ரூபாய் செலவில். இவை போக எஞ்சியிருக்கும் நிலத்தை அங்கு ஏற்கெனவே இருந்த ஏழை எளிய மக்களுக்குப் பிரித்து அளிப்பது என்ற முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு இப்பொழுது 9 ஏக்கரா நிலம் கட்டபொம்மனுடைய இரண்டு வாரிசுக்கு 4—1—74ல் கொடுக்கப்பட்டிருக்கிறது. கட்டபொம்மன் வாசுரிதாரர்கள் என்ற அளவில் இன்னும் 200 குடும்பத்தார்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிலத்தைப் பிரித்துக் கொடுப்பதற்காகக் காட்டு நிலங்கள் விவசாய நிலங்களாக மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கோட்டை கட்டுவது மாத்திரமல்ல, கட்டபொம்மன் வாரிசுகள் என்று அந்தப் பகுதியில் வசிக்கும் மக்கள் அனைவருக்கும் அரசாங்கம் பல நல்ல திட்டங்களை இப்பொழுது நிறைவேற்றி அவைகளையெல்லாம் அமல் நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடத்தில் கட்டபொம்மன் சிலையொன்று. அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த அரசு ஆராய்ந்து, கட்டபொம்மனுக்கு வாரிசுகள் ஐந்து பேர் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் மானிய உதவி பெறத் தகுதியுள்ளவர்கள் என்று முடிவு செய்து அவர்களுக்கு உதவி அளித்து வருகிறது. சுப்பிரமணிய கட்டபொம்மன் துரை (சூடாமணி துரையினுடைய மகன்) சைவவீர பாண்டிய துரை, சின்ன பொம்முதுரை, சுப்பிரமணி கட்டபொம்ம துரை, ஜகவீரபாண்டிய துரை ஆகிய ஐந்து பேருக்கு 11—1—74 முதல் ரூ. 50 மாத ஊதியம் அளிக்கப்பட்டு வந்து, 15—8—72 முதல் 75 ரூபாயாக உயர்த்திக் கொடுக்கப்பட்டு வருகிறது.

200 குடும்பத்தார்கள் அவர்களுடைய வாரிசுதாரர்கள் என்று கருதப்படுகிறார்கள். அவர்களில் 66 விவசாயிகளுக்குக் கறவை மாடுகள் வாங்க 66,000 ரூபாய் நிதி வழங்கப்பட்டிருக்கிறது. 41,000 ரூபாய் செலவில் பாறை பிளக்கும் கருவிகள் வாங்கும் பொறுப்பு ஊராட்சி மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அந்தப் பகுதியில் நிலங்களை விவசாயத்திற்குத் தகுதியான நிலங்களாக ஆக்குவதற்கான அந்தக் காரியங்களையும் இந்த அரசு நிறைவேற்றி வருகிறது.



ஒட்டப்பிடாரத்திற்கும் பாஞ்சாலங்குறிச்சிக்கும் இடையே ஒரு மைல் தொலைவிற்கும் மின்விளக்கு வசதி வேண்டுமென்று அங்குள்ள மக்கள் கேட்டார்கள். அதற்கும் அரசு ஆணைப் பிறப்பித்திருக்கிறது.

[22—3—74ல் சட்டமன்றத்தில் வழங்கிய பதிலுரையிலிருந்து].

ஆசிரியர் சமுதாயத்திற்கு அடுக்கடுக்கான சலுகைகள்

பட்டதாரி ஆசிரியர்களில் 10 ஆண்டுகள் பணி புரிந்தவர்களுக்குத் தேர்வு நிலை கொடுப்பது என்று சென்ற ஆண்டே அறிவிக்கப்பட்டது. இதைப் போலவே, 'செகண்டரி கிரேடு', 'ஹையர் கிரேடு' ஆசிரியர்களுக்கும் தேர்வு நிலை வழங்கப்படுகிறது.

1—4—74-உடன் 10 ஆண்டுப் பணியை நிறைவு செய்த செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலை ஊதியம் வழங்கப்படும். ஏற்கனவே 10 சதவிகித ஆசிரியர்கள்—அதாவது 5,900 பேர்தான் தேர்வு நிலை பெற முடிந்தது.

இந்தப் பத்தாண்டுக் காலப் பணியின் அடிப்படையில், 59,275 ஆசிரியர்கள் பதவி உயர்வு பெறுவர். இதன்மூலம் ரூ. 325 பெற்று வந்தவர்கள் இப்போது ரூ. 400 வரை சம்பளம் பெறும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஹையர் கிரேடு ஆசிரியர்களைப் பொறுத்து—முன்பு 7,800 பேர் பயன் பெற்று வந்தார்கள். இந்தப் பத்தாண்டுக் காலப் பணி அடிப்படையில் 64,726 ஆசிரியர்கள் பயன் பெறுவார்கள்.

தேர்வு நிலை ஆக்கலாம் என்று முதல்வர் அவர்கள் இசைவு தெரிவித்திருக்கிறார்கள். இந்த அறிவிப்புகள் மூலம் ஆசிரியர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன்.

1—4—70-க்குப் பின் தற்காலிக ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட இடைநிலை இரண்டாம் நிலை ஆசிரியர்கள் பற்றி அரசு பரிசீலித்து அவர்கள் ஓராண்டுக் காலம் பணி புரிந்திருந்தால் அத்தனை பேரையும் வரைமுறைப்படுத்தி அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

1—4—72-ல் தனியார் பள்ளிகளிலிருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கு ஓய்வு ஊதியம், பணிக்கொடை ஆகியவற்றைத் தர அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அவர்கள் ஓய்வூதியத்தை முழுமையாகப் பெறுவார்கள்.

33,500 ஹையர் கிரேடு ஆசிரியர்கள், செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக மாற்றப்பட்டுள்ளனர்.

1—7—74 முதல் 4,200 தொடக்க நிலை ஆசிரியர்கள் பதவிகளை செகண்டரி கிரேடு ஆசிரியர்களாக உயர்த்துவதற்கு அரசு முடிவெடுத்திருக்கிறது.

இந்தத் துறையில் தினக் கூலிகளாக இருந்த 25 பேர் நிரந்தரமாக்கப்படுகின்றனர்.

19-3-74ல் தமிழ்நாடு சட்டமன்றத்தில்

கல்வி அமைச்சர்

நாவலர் இரா. நெடுஞ்செழியன்

நீர் வசதி, மின் வசதி பெருக்கிட நிலையான திட்டங்கள்

நமது மின்துறை அமைச்சர் மாண்புமிகு ஓ.பி. இராமன் அவர்களும் நானும் தலைமைச் செயலாளர் இதர அதிகாரிகளோடும், திருவனந்தபுரத்தில் கேரள மாநிலத்திற்கும் தமிழகத்திற்கும் இடையில் இருந்து வந்த நதி நீர்ப்பிரச்சினைகள் குறித்து 8-3-1974 அன்று நடத்திய பேச்சு வார்த்தைகளின் முழு விவரங்களை இந்த அவைக்கு அறிவிக்கின்றேன். கேரள மாநிலத்தின் சார்பில், அம்மாநிலத்து முதல்வர் அவர்களும், பொதுப் பணித்துறை, மின்துறை அமைச்சர்களும், தலைமைச் செயலாளர் இதர அதிகாரிகளோடும் கலந்து கொண்டனர்.

பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டம்:

1965-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் தமிழ்நாடு அரசிற்கும் கேரள அரசுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தப்படி மேற்கு முகமாய் ஓடும் பாண்டியாறு-புன்னபுழா ஆறுகளில் அணைகள் அமைத்து, 14 ஆயிரம் மில்லியன் கனஅடித் தண்ணீரைக் கொண்டு 442 மில்லியன் யூனிட் உற்பத்திச் செய்து, தண்ணீரை முறையாகக் கேரளாவுக்கு விட்டுவிடுவதென்று முடிவு எடுக்கப்பட்டது. அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தி, இரு அரசுகளும் இணைந்து சோழட்டிபுழாவில் மின்சக்தி உற்பத்தி செய்து, சமபங்கு கொள்வதற்கும் 1965-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்தது.

பாண்டியாறு—புன்னபுழாத் தண்ணீரை மோயாற்றுக்குள் திருப்பி, பவானி வடிகால் பகுதிக்கு வரும்படி செய்தால் கோவை மாவட்டத்தில் வறண்ட பகுதிகளுக்குப்பாசன வசதி வழங்கலாமென்று, கோவை மாவட்ட விவசாயிகள் அரசுக்கும் மதிப்பீட்டுக் குழுவிற்கும் முறையீடு செய்திருந்தனர். மதிப்பீட்டுக்குழு அதன் பேரில், பாண்டியாறு புன்னபுழாத் தண்ணீரைக் கீழ்ப் பக்கமாகத் திருப்புவது குறித்து அரசு கவனிக்குமாறு பரிந்துரை செய்தது. பரிசீலனை செய்து பார்த்ததில் பாண்டியாறு மோயாறுத் திட்டம் சாத்தியமானதென்று தெரிந்தது. இத்திட்டத்தால் ஏற்கெனவே திட்டமிடப்பட்ட அதே அளவு மின்சக்தி உற்பத்தி செய்வதோடு, ஏறத்தாழ ஒரு லட்சம் ஏக்கருக்குப் பாசன வசதி பெற வாய்ப்பு உள்ளது என்று தெரிய வந்ததால், இத்திட்டத்திற்கு

ப.உ. சண்முகம்
பொதுப் பணித்துறை அமைச்சர்.

ஒப்புதல் வழங்குமாறு கேரள அரசைக் கேட்கப்பட்டது. இரு அரசுகளுக்குமிடையே பலமுறை பேச்சு வார்த்தைகள் இது குறித்து நடைபெற்றன. 1965-இல் ஏற்பட்ட ஒப்பந்தத்திலிருந்து எவ்வித மாறுதலும் செய்யக் கேரள அரசு விரும்பவில்லை. தமிழ்நாடு நீர்கோள் பகுதியில் 25,000 மில்லியன் கனஅடித் தண்ணீர் கிடைப்பதில் 14,000 மில்லியன் கனஅடித் தண்ணீரைத்தான் கிழக்குப் புறமாகத் திருப்பத் தமிழ்நாடு கோருகிறது என்று விளக்கப்பட்டது. ஆயினும், தங்களுக்குத் தற்போதுள்ள நிலைகளுக்கு முறையாகத் தண்ணீர் தேவைப்படுகிறதென்று கேரளா கூறியதின் பேரில் 9,000 மில்லியன் கனஅடித் தண்ணீரை மாத்திரம் கீழ்ப் பக்கமாகத் தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிட்டு மீதமுள்ள 5,000 மில்லியன் கனஅடித் தண்ணீரைக் கேரளாவுக்கு விட்டுவிடுகிறோமென்று தெரிவித்தோம். மேலும் கேரள மாநிலத்திற்கு ஏற்படும் 9,000 மில்லியன் கனஅடித் தண்ணீர் இழப்பை ஈடு செய்ய இதன் தொடர்பாகக் கேரள மாநிலத்தில் கட்டப்பட வேண்டிய மூன்று அணைகளையும் தமிழக அரசின் செலவிலேயே கட்டித் தருகிறோமென்று தெரிவித்தோம். அதற்கும் கேரள அரசு மறுத்துவிட்டது. இதற்கு அவர்கள் சொன்ன காரணம், தங்களுக்கு மின்சக்தி உற்பத்தி குறையும் என்பதாகும். அதற்காகப் பாண்டியாறு புன்னபுழாத்திட்டத்திற்குக் கீழ் கட்டப்பட வேண்டிய சோழட்டிபுழாத் திட்டத்தில் தமிழக அரசிற்கு இருக்கும் 50 சதவிகித மின்சக்தி உரிமையை விட்டுக் கொடுக்கிறோம் என்றும் தெரிவித்தோம். இதற்கும் ஒருபடி மேலே சென்று மற்றொரு கருத்தும் தெரிவித்தோம். அதாவது, பாண்டியாறு புன்னபுழா ஆறுகளிலிருந்து, கோவை மாவட்டத்தின் பாசனத்திற்

குக் கேரளா நீர் வழங்க ஒப்புக்கொண்டால் ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் நெல் கேரளாவுக்கு வழங்குகிறோம் என்றும் தெரிவித்தோம். ஆயினும், நாம் எடுத்து உரைத்த எல்லா மாற்று யோசனைகளையும் கேரள அரசு ஏற்றுக்கொள்ள மறுத்ததோடு, 1965- ஆம் ஆண்டு செய்துகொண்ட ஒப்பந்தத்தைத்தான் நிறைவேற்ற வேண்டுமென்று வற்புறுத்தியது. இதற்கு மேலும் காலந்தாழ்த்துவதால் பலன் கிடைக்குமென்ற நம்பிக்கை இழந்துவிட்டது மட்டுமல்ல, பாண்டியாறு-புன்னபுழா வேலைகளுக்கான செலவுத் தொகைமேலும் கூடுதலாகும்.

கீழ் நீராறு அணை சம்பந்தமாகக் கேரள மாநிலத்தின் அனுமதியை நாம் பெறவேண்டி இருந்தது. இதற்கிடையில் இந்தியப் பிரதமர் நம் முதல்வருக்கு எழுதிய கடிதத்தில் பாண்டியாறு - மோயாறு திட்டத்தால் முதுமலை வனவிலங்கு சரணாலயத்திற்குப் பாதகமான விளைவுகள் ஏற்படுமென்றும் வனவிலங்குகள் உய்விடத்திற்குக் குந்தகம் விளையாது மாற்று ஏற்பாடுகள் செய்யுமாறும் தெரிவித்தார்கள்.

மதுரை-கொழும்பு செய்தித் தொடர்பு.

செய்திப் போக்குவரத்திற்காக நுண்அலை முறையில் (Micro-wave System) மதுரையையும் தொடர்புபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இது பற்றிய விரிவான ஆய்வு முன்னேற்ற நிலையில் உள்ளது.

இவைகளின் காரணமாக வேறு வழியின்றிக் கேரள அரசின் வற்புறுத்தலான 1965-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படியே பாண்டியாறு-புன்னபுழா திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்ற இசைவு மன வருத்தத்தோடு நம்தரப்பில் தரப்பட்டது.

கீழ் நீராறு அணை

1970-ஆம் ஆண்டு மேத் திங்கள் 29-ஆம் நாள் கையெழுத்திட்ட பரம்பிக்குளம் ஆளியாறு திட்ட ஒப்பந்தப்படி, கீழ்நீராறு நீர்க்கோள் பகுதியில் கட்டவிருக்கும் நீர்த்தேக்க அணைக்கட்டுமிடத்திற்கும், தண்ணீரைக் கொண்டுவர அமைக்கவிருக்கும் சுரங்கப்பாதைக்கான இடத்திற்கும் நாம் கேரள அரசின் ஒப்புதலைப் பெற வேண்டும். அணைக்கட்டுவதற்கு சாத்தியக் கூறுகஉள்ள ஒரேயொரு இடத்திற்கான ஒப்புதலைக் கேரள அரசிடம் நாம் கேட்டோம். ஆனால் தண்ணீர் வழங்குவதில் கூட்டு மேற்பார்வை உரிமைபோன்ற சில பிரச்சினைகளைக் கேரளா எழுப்பியது. திட்டத்தைச் செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படின் அதன் விளைவாகச் செலவினம் அதிகரிக்குமென்றும், தண்ணீர்த் தேவைப்படுகிற பின்தங்கிய பகுதிகளுக்குத் தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்படும் என்றும் கேரள அரசிற்கு விளக்கிச் சொல்லப்பட்டது. பாண்டியாறு-புன்னபுழா ஒப்பந்தத்தை ஒட்டிக் கேரள அரசு கீழ் நீராறு அணை சுரங்கப் பாதை இவை அமைக்கும் இடங்களுக்குத் தற்போது ஒத்துக் கொண்டது. இதனால் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் 2,000 மில்லியன் கன அடித் தண்ணீர் கூடுதலாகப் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதைக்கொண்டு, கூடுதலாக மின்சார உற்பத்தியையும் பாசன வசதியையும் நம்மால் பெருக்கிக்கொள்ள முடியும்.

ஆனைமலையாறுத் திட்டம்

கேரள அரசு நமக்கு ஆய்வின் முழு விவரங்களையும் அறிவிக்க வேண்டும். மேலும் அவர்கள் ஆய்விற்காக உபயோகப்படுத்தும் நம் எல்லையிலுள்ள நிலங்களுக்கு வாடகை தர வேண்டும் என்பன போன்ற நிபந்தனைக்குட்பட்டுக் கேரள அரசு ஆனைமலையாறுத் திட்டத்தின் ஆய்விற்கான பணிகளை நம் எல்லையிலும் மேற்கொள்ளலாம் என்று நம் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் மூலமாக, நீண்டநாளாகத் தேங்கிக் கிடந்த திட்டங்களைச் செயல்படுத்தவும் அதன் பயனாக, நம் மாநிலத்தில் தண்ணீர் வசதியையும் மின்சக்தி உற்பத்தியையும் ஓரளவிற்குப் பெருக்க ஏதுவாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 82 (1)-ன் கீழ் சட்டமன்றப் பேரவையில் 11-3-1974-ல் அளித்த விவர அறிக்கை.]

கருத்தடையில் தமிழகத்திற்கே முதலிடம்!

குடும்பநலத் திட்டத்தின் கீழ் பிறப்பு விகிதத்தைக் குறைப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதலிடம் வகிக்கிறது. இத்தகவலை மத்திய குடும்ப நலத்துறை இயக்குனர் திரு கே. சி. சீல் அவர்கள் அறிவித்துள்ளார்.

கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தும் விஷயத்தில், இதரமாநிலங்களுடன் ஒப்பிட்டால், தமிழ்நாட்டின் சாதனைதான் அதிக அளவில் நிறைவையளிக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

1973-74ம் ஆண்டில் பிப்ரவரி மாதம் வரையில் தமிழ்நாட்டில் 81,418 கருத்தடை அறுவைச்சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளது.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்குத் தனி இல்லம்!

முதியோராகிய, வலிவிழந்த, நோய்வாய்ப்பட்ட, உடல் ஊனமுற்ற விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு என வட இந்தியாவில் ஓர் இல்லமும், தென் இந்தியாவில் ஓர் இல்லமும் அமைக்க இந்திய அரசு திட்டமிட்டுள்ளது. இவ்விரு இல்லங்களும் மேற்கூறப்பட்ட விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உண்ணும் வசதி, உறைவிட வசதி, மருத்துவ வசதி, பொழுது போக்கும் வசதி, படிப்பதற்குரிய வசதி ஆகியவைகளைச் செய்து கொடுக்கும்.


வேளாண்மை நடவடிக்கைகளை விரிவு படுத்த மாநிலப் பண்ணைக் கழகம் நிறுவி மாதிரிப் பண்ணைகள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது.
மாநிலப் பண்ணைக் கழகம்
துப்புரவுப் பணியாளர் 25,000 பேருக்குப் புனர்வாழ்வு அளிக்கும் திட்டத்துக்குத் தமிழக அரசு ரூ. 5 லட்சம் ஒதுக்கியுள்ளது.
தமிழ் நாட்டில் காஞ்சிக்கடுத்த ஓரிக்கையில் பிப்ரவரி முதல் தங்க ஜரிகை உற்பத்தி செய்யப்படுகிறது.

உங்களுக்கு தெரியுமா?
உங்களுக்குத் தெரியுமா?
தமிழ்நாடு அரசு பரிசுத் திட்டத்தின் மூலம் கிடைக்கும்
வருவாய் நாடு செழிக்க உதவும் மக்கள் நல்வாழ்வு
திட்டங்களிலேயே செலவிடப்படுகிறது.
உங்களுக்குத் தெரியுமா?
ஒவ்வொரு மாவட்டத்திலும் திரட்டப்படும் தொகை
அந்த மாவட்டத்திலேயே கிராம நலத் திட்டங்களில்
செலவிடப்படுகிறது.
Rs. 1,00,000
உங்களுக்குத் தெரியுமா?
இத்திட்டத்தில் திரட்டப்படும் வருவாய் மருத்துவமனைகள்
மற்றும் பள்ளிகளை கட்டவும், சேரிகளை சீரமைக்கவும் மற்றும்
பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கும் பயன்படுத்தப்படுகிறது.
தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு ஒன்றை வாங்குங்கள். உங்களுக்கும் நலிவுற்ற
உங்களது சோதரர்களுக்கும் நல்வாழ்வு அளிக்க அது உதவும்.
உங்களுக்கு ரூ. ஒரு லட்சம் பரிசு கிடைக்கும் வாய்ப்பும் உள்ளது.
இயக்குநர், சிறு சேமிப்புத் திட்டம் (பரிசுச் சீட்டு)
சென்னை-600002
விளம்பர வெளியீடு: இயக்குநர், செய்தி,
மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-600009

தென் மண்டலம் தேடிய வெற்றி!

'இராணுவத்திற்கு ஆள் சேர்ப்பு' என்ற செய்தி அறிந்ததும் நாட்டுப் பாதுகாப்புப் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பும் இளைஞர்கள் 'நான்', 'நீ' என்று போட்டி போட்டுக் கொண்டு அந்தந்த அலுவலகங்களுக்குச் செல்வது உண்டு.

போதிய கல்வி, தகுந்த சான்றிதழ்கள், ஏற்ற உடல் அமைப்புப் போன்ற தகுதிகள் இருந்தாலொழிய அங்கே — இராணுவ ஆள் சேர்ப்பு அலுவலகத்தில் (Recruiting Office) எவரையும் சேர்த்துக் கொள்வதில்லை.

சுருங்கச் சொன்னால், தகுதி ஒன்றிற்கே அங்கு மதிப்புண்டு; வாய்ப்புமுண்டு.

ஆனால், இடையிலுள்ள சில தரகர்கள் 'உன்னை இராணுவத்தில் சேர்த்து விடுகிறேன்' என்று சொல்லிப் பல வழிகளில் ஏமாற்றுகின்றனர். தரகர்களிடம் ஏமாறுபவர்களும் பலர் உண்டு!

இந்த இழி நிலை போக்கப் பட வேண்டும்; ஆள்சேர்ப்பில் காணப்படுகின்ற முறை கேடுகள் ஒழிக்கப்பட வேண்டும் ; தரைப்படை, கப்பற் படைகளுக்குத் தகுந்தவர்களைச் சேர்த்திட வேண்டும்; இதுவரை சென்றிராத கிராமப் புறப் பகுதிகளுக்குச் சென்று அங்கு இராணுவத்தில் சேர விரும்புகின்றவர்களைச் சேர்த்திட வாய்ப்புகள் அளித்திட வேண்டும்; நல்ல முறையில் சான்றிதழ்களை வழங்கிடுதல் வேண்டும் என்னும் கருத்துக்களை மனத்திற் கொண்டு ஒவ்வொரு ஆள் சேர்ப்பு அலுவலகமும் செயல்பட வேண்டுமெனப் புது தில்லியிலுள்ள இராணுவத் தலைமையகம் விரும்பியது. மேற்கண்ட பணிகளைச் செம்மையாக—சிறப்புறச் செயலாற்றும் மண்டல ஆள் சேர்ப்பு அலுவலகத்திற்கு ஒரு புதிய வெற்றிக் கோப்பையைப் பரிசாக அளித்திடும் திட்டம் ஒன்றினை 1973-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் அது கொண்டு வந்தது.

இராணுவத் தலைமையகம் அறிவித்த இந்தப் பணிகளைக் கருத்தில்கொண்டு, ஆள் சேர்ப்பில் புதிய முறை நடவடிக்கைகளைக் கையாண்டு, நம் நாட்டிலுள்ள 9 மண்டலங்களில் சிறந்ததெனத் தெரிந்தெடுக்கப்பட்டு வெள்ளிக் கோப்பை ஒன்றினைப் பரிசாகவும் பெற்றுள்ளது, தென் மண்டல ஆள் சேர்ப்பு அலுவலகம். பெங்களூரைத் தலைமையாகக் கொண்டியங்கும் இம் மண்டலத்தில் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், கருநாடகம் ஆகிய நான்கு மாநிலங்கள் அடங்கி உள்ளன. ரூபாய் 6000-க்கு மேல் மதிப்புள்ள இந்த வெள்ளிக் கோப்பையைப் பெற்றவர் மண்டல ஆள் சேர்ப்பு அலுவலர் லெப்டினன்ட் கர்னல் திரு எஸ். அய்யாசாமி அவர்கள்.

38 ஆண்டுக் காலமாக இராணுவத்தில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற திரு எஸ். அய்யாசாமி, தமிழ் நாட்டைச் சேர்ந்தவராவார். இவர் பிறந்தது இராமநாதபுர மாவட்டத்திலுள்ள இராசபாளையம் ஆகும். 15-6-72-ல் மண்டல ஆள் சேர்ப்பு அலுவலர் (Zonal Recruiting Officer) பொறுப்பினை ஏற்றார். இவர் பொறுப்பினை ஏற்றபொழுது ஆள் சேர்ப்புப் பணியில் ஏற்பட்டிருக்கின்ற அவப் பெயரினைச் சீராக்கிட வேண்டு

1-4-2

மெனக் கேட்டுக் கொள்ளப்பட்டார். அதற்கு ஏற்ற வகையில் மண்டலத்திலுள்ள ஒவ்வொரு ஆள் சேர்ப்பு அலுவலருடைய உறுதுணையோடும் திறம்படப் பாராட்டத்தக்க வகையில் செயலாற்றினர். இதில் சென்னை ஆள் சேர்ப்பு அலுவலர் மேஜர் டி. ஏ. சுப்பிரமணியம் அவர்களின் பணி குறிப்பிடத் தக்கதாகும்.

இந்தியாவிலேயே பெரிய பகுதியாக—ஆள் சேர்க்கும் அலுவலகங்கள் நிரம்பிய பகுதியாக விளங்குவது, தென் மண்டலமேயாகும். இதனைச் சார்ந்துள்ள அனைத்து அலுவலகங்களுக்கும், ஆட்கள் சேர்க்கப்படுகின்ற காலங்களில் நேரடியாகப் பார்வையிட்டு முறைகேடுகள் நடைபெறு வண்ணம் இவர் பார்த்துக் கொண்டார். நான்கு மாநிலங்களிலும் நகர, கிராமப் பகுதிகளில் மக்கள் தொடர்பை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் இராணுவத்தைப் பற்றிய நல்ல கருத்துக்களை வளர்த்தார். சாதாரண உடைகளில் பார்வையிட்டு முறைகேடாக நடந்த பலரைத் தண்டனை பெறச்செய்துள்ளார். தகுதி படைத்த ஆட்களைத் தேர்ந்தெடுக்கச் செய்து தென் மண்டலத்திற்கு நல்ல பெயரைப் பெற்றுத் தந்துள்ளார்.

இத்தகைய முறையில் திறம்படச் செயலாற்றித் தென் மண்டலத்தைச் சிறந்த முறையில் இயக்கிக் காட்டி வெற்றிகள் கண்டுள்ளதைப் பாராட்டும் வகையில், நம் நாட்டிலேயே முதல் தடவையாக இராணுவத் தலைமையகம் வெள்ளிக் கோப்பையைப் பரிசாக அளித்துப் பாராட்டியுள்ளது. புது தில்லியில் 28-2-74-ல் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் லெப்டினன்ட் ஜெனரல் என். எஸ். நாயர் பி.வி.எஸ்.எம். மற்றும் பிரிகேடியர் ஆர். பி. சைகால் போன்றவர்கள் இவரது திறமையைப் பாராட்டினார்கள்.

இனி இராணுவத்தில் சேர விரும்புகிறவர்கள் — தேவையான தகுதிகள் அனைத்தும் உடையவர்கள் எவ்விதத் தயக்கமும், தளர்ச்சியும், தாழ்வு மனப்பான்மையும், அச்சமும் இன்றித் துணிந்து முன்வரலாம்—அவர்களின் நல்விருப்பம் நிறைவு பெற நாட்டுப் பணியில் ஈடுபடலாம்.

—ஆயிரம்

இராணுவப் பயிற்சிக் கல்லூரி

டேராடூனிலுள்ள தேசிய இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் சேருவதற்கான நுழைவுத் தேர்வு, நாட்டின் பல பகுதிகளிலும் இந்த ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 22, 23 ஆகிய நாட்களில் நடத்தப் பெறும்.

இராணுவக் கல்லூரியில் சேர விரும்புவோர்—சனவரி முதல் தேதியன்று 11 வயது நிரம்பியவர்களாகவும் 12 வயதுக்கு உட்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் நிறைவு செய்யப்பட்டு மாநில அரசின் தலைமைச் செயலருக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களுடன் விண்ணப்பம் செய்வோரின் புகைப்படங்கள் மூன்று பிரதிகள் அனுப்பப் பெறல் வேண்டும். புகைப் படங்களில் விண்ணப்பதாரரின் கையெழுத்தும் இடம் பெற வேண்டும்.

நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். அந்தத் தேர்வில் தேர்ச்சி பெறுவோர், உடல் பரிசோதனைக்காக, இராணுவ மருத்துவ மனைக்கு அனுப்பப்படுவார்கள். அதிலும் தேர்ச்சி பெற்றவர்கள், இராணுவக் கல்லூரியில் சேருவதற்குத் தகுதியானவர்கள் என்று முடிவு செய்யப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பெயர்கள் மாநில அரசுகளுக்கு அனுப்பப்பட்டு, அவர்களுக்குத் தெரிவிக்கப்பெறும்.

இதுகுறித்த தகவல்களும், விண்ணப்பப் படிவங்களும் டேராடூனிலுள்ள தேசிய இராணுவப் பயிற்சிக் கல்லூரியின் முதல்வரிடமிருந்து அல்லது மாநில அரசின் தலைமைச் செயலரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

* * *



காவல் துறையில் கன்னியர்

அட்டை சொல்லும் கட்டுரை

காவல்துறை ஆணையாளர், உதவி ஆணையாளர், பிற அலுவலருடன் உதவி ஆய்வாளர் உஷா

அதிகாலை 6-30 மணி!

அமைதியான அந்தத் திடலில், ஆரணங்குகள் பலர் வெண்ணிற ஆடை அணிந்து வரிசை வரிசையாக வருகின்றனர். அவர்கள் முகத்திலே புத்துணர்ச்சியும், புதுத் தெம்பும் மலர்கிறது.

அவர்களுக்கு முன்னே கம்பீரமாய்க் காட்சியளிக்கும் 'கராத்தே' தமிழ்மணியைப் பார்க்கும்போது, பெண் போலீசுக்கும் கராத்தே கற்றுத் தரப்படுகிறதுஎன்பதைஅறிகிறோம்.

பெண்களை மெல்லியலார் என்கிறோம். அவர்களா இந்த வலிமையான பயிற்சியைச் செய்கிறார்கள் என்று நாம் வியக்கிறோம்.

'கராத்தே' முடிந்ததும், பெண் காவலர்க்கான சீருடை அணிந்து சிட்டாய்ப் பறந்து வருகின்றனர். காவலருக்கான 'கவாத்து' பயிற்சி தொடங்குகிறது. பிறகு அணிவகுப்பும் நடக்கிறது.

'கராத்தே'யிலும் சரி, அணிவகுப்பிலும் சரி அவர்களிடம் நாம் காண்பதெல்லாம் கம்பீரம்தான்! நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் காணும்போது பெருமிதத்தால் நம் நெஞ்சமும் நிமிர்கிறது!

'தமிழ் நாட்டில் பெண் போலீஸ்' என்றதும் நமக்கெல்லாம் புதுமையாக மட்டுமல்ல,

காவல் துறையில் கன்னியருக்கும் தக்க இடம் தரப்பட்டிருக்கிறதே என்று பெருமையாகவும் இருந்தது—இருந்து வருகிறது.

இந்தியக் காவல் துறை வரலாற்றில் தமிழகத்திற்குச் சிறப்பான இடமுண்டு என்பதை நாமறிவோம்.

துப்பறியும் நாய் முதல் அனைத்திந்தியக் காவலர்கள் விளையாட்டு முதலான போட்டிகள் வரை, தமிழ் நாட்டுக் காவலர்கள் தனித் தன்மை பெற்று வருகின்றார்கள்

இன்று பெண் போலீஸ் இத்துறையில் இடம் பெற்றிருப்பது ஒரு சிறப்பான அம்சமாகும்.

பெண் போலீஸ் என்றதும் சிலர் முகத்தைச் சுளிக்கின்றார்கள், இவர்களால்என்னசெய்ய முடியும் என்று!

மேலை நாடுகளில் பெண்கள் ஈடுபடாத துறைகளே இல்லை எனலாம். வானவெளிக்குக் கூட வனிதையர் போய் வர முடியும் என்பதை அவர்கள் மெய்ப்பித்துக்காட்டவில்லையா என்ன?

தமிழ் நாடும் இதற்குச் சற்றும் சளைத்ததல்ல என்பதற்குப் பண்டைக் கால இலக்கியங்கள் பறை சாற்றும். எத்தனையோ வீரப் பெண்மணிகளைப் பெற்றெடுத்ததல்லவா இந்தத் தமிழ் மண்!

'ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமானம்' என்பதனை எடுத்துக் காட்டுகின்ற வகையில் இன்று பெண்கள் பல்வேறு துறைகளில் பயிற்சி பெற்றும், பணி புரிந்தும் வருகின்றனர்.

கராத்தே பயிலும் உதவி ஆய்வாளரும் காவலரும்

அந்த வகையில் பெண்களும் காவல் படையில் சேர்ந்து பணியாற்ற முன் வந்துள்ளது பாராட்டத் தக்கதாகும்.

பெண் காவல் படை தமிழகத்திற்கு முதல் தடவை என்றாலும், இன்று அது இந்தியாவில் தில்லி, கல்கத்தா, பம்பாய், திருவனந்தபுரம் ஆகிய மாநிலங்களில் செயல்பட்டு வருகின்றது.

உலக நாடுகளை எடுத்துக் கொண்டால் இங்கிலாந்தில் உலகப் போர்க் காலத்திலேயே பெண் போலீஸ் படையொன்று நிறுவப் பெற்ற செய்தியை நாம் அறிகிறோம். அப்படையினர் காணாமற் போகும் பெண்களைத் தேடிக் கண்டு பிடிப்பது, அவர்களை நீதி மன்றத்துக்கும், சிறைக்கூடத்துக்கும் கூட்டிச் செல்வதுபோன்ற பணிகளைச் செய்தனர்.

தற்பொழுது இங்கிலாந்தில் பெண் காவலர்கள் உட்பட 1,01,000 காவலர்கள் உள்ளனர் என்ற தகவலை அறிகின்றபோது, பெண்களும் இத்துறையில் சிறந்து விளங்க முடியும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

இஸ்ரேல நாட்டிலும் பெண் காவற்படை இருக்கிறது. அங்கு இந் நாட்டிற்கெதிராகப் போர் மூண்டபோது, காவலர் படையானது அண்டை நாடுகளை யொட்டிய சமாதானப் பகுதிகளில் பாதுகாப்புப்படையாகச் செயல்பட்டது. இது இராணுவத்தின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது. இராணுவத்தில் சேர்ந்த சில பெண்கள் தற்பொழுது காவற்படைக்கு அனுப்பப்பட்டு மூன்று முக்கிய நகரங்களில் பணி புரிந்து வருகின்றனர். அங்குள்ள 750 பேர்களில் காவலர் பணியில் செயல்படுகின்ற பெண்கள் 200 பேர்கள்.

ஐரோப்பிய நாடுகளிலும் பெண் காவல் படை சிறப்பாகப் பணி புரிந்து வருகிறது.

தமிழ் நாட்டுப் பெண் காவற் படையில் தற்போது ஒரு பெண் ஆய்வாளரும் (சப்-இன்ஸ்பெக்டர்) 21 பெண் காவலர்களும் உள்ளனர். இவர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் 27-ஆம் நாளிலிருந்து

ஆரணங்குகளின் அணி வகுப்பு

கன்னியருக்கும் கராத்தே பயிற்சி!

பயிற்சி பெற்று வருகின்றனர். இந்தப் பயிற்சிக் காலம் 9 மாதங்களாகும்.

பெண் காவலர்களுக்குச் சட்டம்—ஒழுங்கு பற்றிய சட்டப் பாடங்களும், காவலர்க்குரிய கவாத்துப் பயிற்சியும், தற்காப்புக்குரிய 'கராத்தே' பயிற்சியும் தற்போது தரப்படுகிறது.

பயிற்சி பெற்றதும் இவர்கள் கீழ்க்கண்ட பணிகளுக்கு அமர்த்தப்படுவார்கள் :

அ. கெட்ட நடவடிக்கையுள்ள பெண்கள் நடமாடும் பகுதிகளில் ரோந்து சுற்றுதல்.

ஆ. வீடு இல்லாத இளம் பெண்களுக்குப் பாதுகாப்புப் பணியும், விபசாரத்தில் ஈடுபட முயலும் பெண்களுக்குத் தடுப்புக் காவல் பணியும் புரிதல்.

இ. விபசாரக் குற்றங்களைக் கண்டுபிடிக்கும் போலீசாருக்கு உடன்சென்று உதவி புரிதல்.

ஈ. பெண் கைதிகளை நீதி மன்றங்களுக்கு அழைத்துச் செல்லுதல், மற்றும் நீதி மன்றங்களில் அவர்களுக்குக்காவல் புரிதல் போன்ற பணிகள்.

உ. ரிமாண்டுக்குச் செல்லும் பெண் குற்றவாளிகளையும், விசாரணைக்குச் செல்லும் பெண் குற்றவாளிகளையும் அழைத்துச் செல்லுதல்.

ஊ. பெண்களும், சிறுவர்களும் தாக்கப்பட்ட குற்றங்களில் விசாரணையின்போது போலீசாருக்கு உதவிசெய்தல்.

எ. அனாதைக் குழந்தைகளை அழைத்துச் சென்று தக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு அவர்களுக்கு உதவி செய்தல்.

ஏ. பெண்களுக்குத் தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ள பெரிய பொதுக் கூட்டங்களுக்கும், திருவிழாக் கூட்டங்களுக்கும் சென்று, பெண் பகுதிகளில் அமைதி காக்கக்காவல் புரிதல் முதலியன.

பெண் காவலர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் என்னென்ன என்பதைத் தெரிந்து கொள்வோமா?

இவர்களுக்குள்ள அடிப்படைச் சம்பளம்: உதவி ஆய்வாளருக்கு ரூ. 300—15—420—20—500. தலைமைக் காவலருக்கு ரூ. 210—5—245—10—325. காவலருக்கு ரூ. 150—4—170—5—225. இத்துடன் அமுலில் உள்ள பஞ்சப்படி, வீட்டு வாடகைப் படி மற்றும் நகர ஈட்டுப்படி முதலியன வழங்கப்படும்.

இவையன்றித் தனிச்சம்பளமும், ஊர்திச்செலவுப் படியும், சீருடைப்படியும் வழங்கப்படும்.

உதவி ஆய்வாளருக்குத் தனிச் சம்பளம் ரூ. 20-ம், ஊர்திச் செலவுப்படி ரூ.40-ம், தலைமைக் காவலருக்குத் தனிச் சம்பளம் ரூ. 14-ம், சீருடைப் படி ரூ. 5-ம், காவலருக்குத் தனிச் சம்பளம் ரூ. 10-ம், சீருடைப்படி ரூ. 5-ம் வழங்கப்படும்.

பொதுவாகக் காவலர்களுக்குத் தருவது போன்று, பெண் காவலர்களுக்கும் இலவச வீட்டு வசதியும் உண்டு. இவர்களுக்கு இப்போது இலவசச் சீருடையும் வழங்கப்படுகிறது. ஒரு ஆண்டுக்கு 3 காகி புஷ் ஷர்ட், 3 காகி ஸ்லாக், 1 நீல பாரட், வெள்ளைப்

அணி வகுப்பின் ஒரு தோற்றம்



உதவி ஆணையாளரும், உதவி ஆய்வாளரும்

வானொலியில் காவற்படைச் செய்திகள்

அனைத்திந்திய வானொலியின் சென்னை வானொலி நிலையம் மார்ச் 16-ஆம் தேதி சனிக்கிழமை முதல் பொதுமக்கள் அக்கறை கொள்ளும் விஷயங்கள் பற்றி ஐந்து நிமிடக் காவற்படைச் செய்தி அறிக்கை ஒன்றை ஒலிபரப்பி வருகிறது. இந்தச் செய்தி அறிக்கையை வாரத்தில் மூன்று நாட்கள் அதாவது சனி, திங்கள், வியாழக்கிழமைகளில் மாலை 6-55 மணிக்கு சென்னை-ஏ அலைவரிசைகளில் கேட்கலாம்.

பைஜாமாவும், கோட்டும் (உடற்பயிற்சி உடை) 1 இணை, கருப்பு நிறக் காலணி 1 இணை, கரு நீலக் காலணி (கம்பளி) 2 இணை, கான்வாஸ் காலணி (பழுப்பு நிறம்) 1 இணை, கம்பளி சாக்ஸ் (வெள்ளை) 2 இணை ஆகியவை வழங்கப்படுகின்றன.

பெண் காவலர்களின் தொகை மேலும் அதிகரிக்கப் படுமா?

''பெண் போலீஸ் சென்னை நகரில் திறம்படச் செயல்பட்டால் அதன் பிறகு திருச்சி, மதுரை, கோவை போன்ற முக்கிய நகரங்களில் படை ஏற்படுத்தப்படும். பின்னர் மாவட்ட அளவில் பெண்போலீஸ் அமைப்பது பற்றிப் பரிசீலனை செய்யப்படும்'' என்று காவல் துறைத் தலைமை அலுவலர் திரு எஃப். வி. அருள் அவர்கள் அண்மையில் ஒரு செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்.

தமிழ் நாட்டில் முதன் முதலாக அமைக்கப்பட்ட பெண் காவற் படை, முதன் முதலாகப் பெண்கள் கூட்டத்தை ஒழுங்கு படுத்தும் பணியில் ஈடுபட்டது, அண்மையில் நடந்த குடியரசு நாள் விழாவின் போதுதான்! அப்போது அவர்களின் அணி வகுப்பு ஒன்றும் அனைவரையும் கவர்ந்தது.

பெண் காவற் படை, பல துறைகளிலும் திறமையானவர்களைக் கொண்டு அமைக்கப் பட்டிருக்கிறது என்பதை இங்குக் குறிப்பிட வேண்டும். ஏற்கெனவே அவர்கள் என்.சி.சி., விளையாட்டுப் போட்டி முதலியவற்றில் சிறந்து விளங்கியவர்களாக இருக்கின்றனர். இப்போதுள்ள 21 காவலர்களில் பட்டச்சுப்பயின்றவர்கள் ஒன்பது பேர் உள்ளனர். ஏன்,

அணி வகுப்பின் மற்றொரு தோற்றம்



ஒரு தமிழ்ப் புலவர் கூட இருக்கிறாரே!

உதவி ஆய்வாளர் செல்வி ஏ. வி. உஷா (வயது 21) கம்பீரத் தோற்றமுள்ளவர். சென்னை அம்பத்தூரைச் சேர்ந்த இவர், இங்குள்ள ஒரு பள்ளியில் பயின்று, பிறகு வேலூர் காட்பாடியிலுள்ள ஆக்ஸிலியம் மகளிர் கல்லூரியில் பி.எஸ்சி., பட்டம் பெற்றார். இவர் சொல்கிறார் :

உதவி ஆய்வாளர் ஏ. வி. உஷா

''நான் கல்லூரியில் படித்தபோது பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்றவைகளில் வெற்றி பெற்று நிறைய பரிசுகள் பெற்றுள்ளேன். வேலூரில் யுனெஸ்கோ மன்றத்தின் செயலாளராகவும் இருந்திருக்கிறேன். கல்லூரி நாடகங்களிலும் நான் நடித்துப் பலரின் பாராட்டுதல்களைப் பெற்றிருக்கிறேன்.

''தமிழ் நாட்டுக் காவல் துறை வரலாற்றில் முதலாவது பெண் உதவி ஆய்வாளராக நான் தேர்வு பெற்றது குறித்து மிகவும் பெருமைப்படுகிறேன். மேலை நாடுகளிலுள்ள பெண் காவலர்களைப் போல்த் தமிழ் நாட்டுப் பெண் காவலர்களும் சிறப்பாகப் பணியாற்ற முடியும் என்பதற்கு நான் முழு மூச்சுடன் பாடுபடுவேன்!''

இப்போதுள்ள பெண் காவலர் படையில் சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, கோவை, மதுரை, தஞ்சை, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 21 பெண்கள் உள்ளனர். அவர்கள் யார் யார் என்பதைத் தெரிந்து கொள்வோம் :

1. அரினு பாபாதி, 2. எஸ். வசந்தி, 3. விட்டாபாய், 4. எம். சிசிலி, 5. பி. சுமதி, 6. பி.எஸ். கௌசல்யா, 7. ஆர். இராசலட்சுமி, 8. என். சரசுவதி, 9. திலகமணி, 10. கே. சாந்தா, 11. என். நளினி, 12. இ. சரசுவதி, 13. எம். மாலா, 14. எஸ். மோகனும்பாள், 15. எஸ். செல்லத்தாய், 16. ஏ. மாரிமுத்து, 17. மரிய செல்வி, 18. எம். ராணி, 19. ஏ. மரிய கிரேசி, 20. எஸ். லீலாபாய், 21. வியோலாபாய்.

பெண் காவலர் எம். சிசிலி, பி.எஸ்சி., பட்டம் பெற்றவர். அவர் சொல்கிறார்.



காவலர் எம். சிசிலி

"கோவை நிர்மலாக் கல்லூரியில் படித்தேன். பள்ளியிலும், கல்லூரியிலும் விளையாட்டு முதலான போட்டிகளில் வெற்றி பெற்று பரிசுகள் பெற்றிருக்கிறேன். என். சி. சி. யிலும் ஆர்வத்துடன் ஈடுபட்டு செயல்பட்டிருக்கிறேன். தமிழ் நாட்டுக் காவல் துறையில் நான் இடம் பெற்று இருப்பது குறித்து பெரிதும் மகிழ்கிறேன், பெருமைப்படுகிறேன் . . .''

பெண்காவலர் புலவர் ஏ. மரிய கிரேசி கூறுவதாவது :

காவலர் புலவர் ஏ. மரியகிரேசி

''தமிழ்ப் புலவர் பட்டம் பெற்றிருந்தால் கல்லூரியில் தான் பணியாற்ற வேண்டும், காவல் துறையில் பணியாற்றக் கூடாதா என்ன? தமிழ் நாட்டில் பெண் போலீஸ் என்றதும் நான் மிகுந்த ஆர்வத்துடன் விண்ணப்பித்துக் கொண்டேன். இப்போதும் ஆர்வத்துடனும், பெருமிதத்துடனும் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறேன். காவல் துறையில் பெண்களும் சிறந்து விளங்க முடியும் என்ற நம்பிக்கையுடன் 'பணியாற்றுவேன்''.

பெண் காவல் படையினருக்குத் தனியாகக் காவல் நிலையம் அமைக்கப்படுமா?

'இது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை!' என்கிறார் ஒரு காவல் துறை அலுவலர்.

மார்ச் 15-ஆம் தேதி முதல் பெண் காவலர்களுக்குத் துப்பாக்கிப் பயிற்சி அளிக்கப்படவிருக்கிறது என்பதையும் அறிகிறோம்.

இவ்வாறு தமிழகக் காவல் துறையின் ஓர் அங்கமாகச் செயல்படவிருக்கும் பெண் காவற்படை தனிப் பெரும் புகழுடன் விளங்கி, மற்ற மாநிலங்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகவும், முன்மாதிரியாகவும் திகழும் என்பதில் எள்ளளவும் ஐயப்பாடில்லை!

பி-வி-ஜி

போலீஸ் என்பது ஆளுதல் என்று பொருள் படும் போலீஷியா (Politea) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து வந்ததாகும்.

ஐரோப்பிய நாகரிகத்துக்கு வழிகோலிய அடுத்த நாகரிகம் ரோமாபுரியினது. அங்கு அகஸ்டஸ் காலத்தில் (கி.மு. 63-கி.பி. 14) முதன் முதல் போலீஸ் படை போன்ற ஒன்று அமையலாயிற்று. ஆனால், மிலேச்சர்கள் (Barbarians) வந்தபோது அவர்கள் அதை அழித்து விட்டார்கள். எங்கும் குழப்பமே காணப்பட்டது. பின்னர் ஷார்லமேன் (Charlemagne கி.பி. 742-814) என்பவர் மீண்டும் போலீசை நிறுவினர். அதுவும் அவர் ஆட்சிக் குப்பின் குலைந்து போயிற்று.

நார்மன் (Norman) மக்களே முதன் முதல் உள்நாட்டு அமைதியைக் காப்பதற்காகத் திட்ட வட்டமான விதிகளுடன் போலீஸ் படையை நிறுவினவர்கள். அவர்கள் நிறுவின பகுதி வட பிரான்ஸ் நாடாகும்.

இங்கிலாந்தில் சாக்ஸன் (Saxon) காலத்தி லிருந்து ஒவ்வோரூரிலும் மக்கள் தாங்களாகவே தங்களைக் காப்பாற்றும் பொருட்டுக் குற்றங்கள் நிகழ்வதைத் தடுப்பதற்காகப் படை அமைத் திருந்தனர். ஆனால் இப்போதுள்ளது (1960) போன்ற போலீஸ் படையை அமைத்தது 1829-ல் ஆகும். அதற்கு வழி தேடியவர் சர் ராபர்ட் பீல் (Sir Robert Peel). இந்த அமைப்பு இன்றுவரை வளர்ந்து பல நாடுகளுக்கும் வழி காட்டியாக அமைந்துள்ளது. அமெரிக்கப் போலீஸ் அமைப்புப் பெரும்பாலும் ஆங்கில அமைப்பை ஒட்டியதே. ஆங்கிலேயர் இந்தியா வில் ஆட்சி செலுத்தத் தொடங்கியதும் ஆங்கில முறைப் போலீஸ் அமைப்பையே நிறுவி வளர்த்து வந்தனர்.

வாரன் ஹேஸ்டிங்ஸ் என்னும் கவர்னர் ஜெனரல் போலீஸ் பற்றிப் பல ஏற்பாடுகள் செய் தார். அவருடைய ஏற்பாடுகளிலிருந்து முளைத்து வளர்ந்ததே இப்போதுள்ள போலீஸ் முறை. சர் சார்ல்ஸ் நேப்பியர் தம்முடைய சிந்து மாநிலத்தில் அயர்லாந்துப் போலீஸ் போன்ற போலீஸ் படையை 1846-ல் நிறுவினர். அதற்கு முன் போலீஸ் படை தனி அதிகாரியின் கீழ் அமையாதிருந்ததால் திறமையாக வேலை செய்யவில்லை. நேப்பியர் இந்தக் குறையை நீக்கினர். சிந்து போலீஸ் படை சிறப்புப் பெற்றது.

இதைப் பார்த்துச் சென்னை முதலிய மாநிலங்களிலும் போலீஸ் படை சீர்திருத்தி அமைக்கப்பெற்றது. ஆயினும், கிழக்கிந்தியக் கம்பெனியின் இயக்குநர்கள் சென்னை அரசின் போலீஸ் படை திருப்திகரமாக வேலை செய் கிறதா என்று ஆராயுமாறு 1854-ல் கேட்டுக் கொண்டனர்.

சென்னை ஆளுநர், போலீஸ் படை ஒவ் வொரு மாவட்டத்திலும் தனித் தலைவரின் கீழ்ப் பணிசெய்ய வேண்டும் என்றும், மாவட்ட மாஜிஸ்திரேட்டின் கீழ் பணி செய்யக்கூடாது என்றும், மாநிலம் முழுவதற்கும் போலீஸ் படை யின் தனித் தலைமை அதிகாரி இருக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்தார். அதை இயக்கு நர்கள் 1856-ல் ஏற்றுக்கொண்டனர்.

பின்னர், சென்னைப் போலீஸ் சட்டம் 1859-ல் நிறைவேறியது. உடனே மத்திய அரசு சென்னைச் சட்டத்தைப் பார்த்து, அது மாதிரி இந்தியா முழுவதற்குமாக ஒரு மசோதா தயாரிக்குமாறு ஒரு குழுவை 1860-ல் நியமித் தது. இக் குழு அளித்த அறிக்கையை வைத்து 1861-ல் இந்தியப் போலீஸ் சட்டம் நிறை வேற்றப் பட்டது.

போலீஸ் படையில் மற்றொரு பிரிவு ரெயில்வே போலீசாகும். இது முதன் முதலில் 1865-ல் கிழக்கு இந்திய ரெயில்வேயில்தான் நிறுவப் பெற்றது.

1902-3-ல் நிறுவப்பெற்ற போலீஸ் குழு, ஒவ்வொரு மாநிலத்திலும் குற்றம் அறி துறை (C.I.D.) நிறுவ வேண்டும் என்று பரிந்துரை செய்தது. அத்தகைய துறை சென்னையில் 1906-ல் நிறுவப்பெற்றது.

காலடிரேகை (Foot-Print) விஞ்ஞானம் என்பதன் பிறப்பிடம் இந்தியாவே. மத்திய மாநிலத்திலிருந்த கேயர் (G.W. Gayer) என் னும் போலீஸ் அலுவலரே இந்த முறையை முதன்முதல் வகுத்தவர்.

கைரேகைத் துறை (Finger Print Bureau) இந்தியாவிலே பிறந்தது என்று கூறலாம். வங்காளத்தில் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக இருந்த எட்வர்டு ஹென்ரி என்பவர் இந்த முறை யைத் தெளிவாக வகுத்தார். ஹென்ரி இலண்டன் போலீஸ் தலைவராக ஆகி, அங்கு இந்த முறையை நிறுவினர் என்பது குறிப்பிடத் தக்கது.

குமரன்—

மகளிர் நலங்காக்கும் மாபெரும் பணி இல்லம்

—சாமிபழ.

பெண்ணை அடிமைப்படுத்துவது கண்மூடி வழக்கம் — காட்டுமிராண்டித் தனம்; பெண்ணை மதித்துப் போற்றுதல் நாகரிகம். பெண்ணும் ஆணும் இரண்டு கண்களைப் போன்றவர்கள்; இருவரில் ஒருவர் பழுதுபட்டாலும், சமுதாயம் புண்பட்டுப் புரையோடி மண்ணாகிப் போகும். நமது கவிஞர்களும், கலைஞர்களும், அறிஞர்களும் இந்தக் கருத்துக்களைத் தொடர்ந்து வலியுறுத்தத் தவறியதில்லை; எனினும், அதனை ஏற்று நடைமுறைப்படுத்துவதில் இந்தச் சமுதாயம் இன்னும் முழு வெற்றி பெறவில்லை என்னும் உண்மையை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். ஆம்;

''பெண்ணென்று பூமிதனில்
பிறந்துவிட்டால் — பெரும்
பீழை இருக்குதடீ
தங்கமே தங்கம்''

என்று, கண்ணீர்விட்டுக் கலங்கும் பெண்கள், சமுதாயத்தில் இருக்கத்தானே செய்கின்றனர்!

இன்றைக்கு ஏதோ ஒரு காரணத்தால் சமுதாய அந்தஸ்தை இழந்து சமூகத்தில் கலந்து கொள்ள முடியாத நிலையில் உள்ள மகளிர்-பேணிக் காப்பாரற்ற - ஆதரவில்லாத மகளிர்-கணவனை இழந்தோர்-கணவனால் கைவிடப்பட்டோர் இவ்வாறாக எவ்வளவு பேர் இருக்கின்றனர்! அவர்களுக்கெல்லாம் வாழ்வளிப்பதில் — நாம் போதுமான அக்கறையும் ஆர்வமும் காட்டிடவில்லை என்றாலும் இந்தநாடு விடுதலை பெற்ற பிறகு, மேற்கூறிய பல்வேறு பிரிவுகளிலுள்ள பெண்களுக்கும் வாழ்வும் சமுதாய அந்தஸ்தும் கிடைக்கச் செய்வதில் நாம் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறோம் என்பதையும் மறுத்திட முடியாது.

நலிவுற்றுழலும் மகளிர்க்கு நல்வாழ்வளிக்கவும் உரிய சமுதாய அந்தஸ்தை உருவாக்கவும் திட்டமிட்டு, முதன்முதலாக 'மகளிர் நலத்துறை' என்னும் பெயரில் ஒரு தனித் துறையை ஏற்படுத்திய பெருமை நமது தமிழ்நாட்டுக்கே உண்டு.

ஆம். 1947-ல் இந்தியா சுதந்தரம் பெற்றதும், தமிழகத்தில் 'மகளிர் நலத்துறை உருவாகியது. சமுதாய வளர்ச்சி வட்டாரங்களைத் தொடர்ந்து ''தேசிய வளர்ச்சிப் பணிகள்'' 1952-54-ல் தொடங்கப்பட்டது. மாநில சமூக நல வாரியம் 1954-ல் ஏற்பட்டது. மகளிர் நலத்துறை, மாநில சமூக நல வாரியம், சமுதாய வளர்ச்சித் திட்டப் பணியாளர்கள் (மகளிர்) ஆகிய மூன்றும் 1961-ல் மகளிர் நல இயக்குநர் அலுவலகமாக ஒருங்கிணைக்கப்பட்டன.

அண்மையில் தமிழ்நாடு அரசு மகளிர் நலத்துறை இயக்குநர் என்னும் பதவிப் பெயரைச் சமூக நல இயக்குநர் என்று மாற்றியுள்ளது.

''மகளிர்நலத்துறை'' யின் கீழ் இயங்கும் பல்வேறு நிறுவனங்களுள் குறிப்பிடத்தக்கன 'பணி இல்லங்கள்'. இப்போது தமிழகத்தில் தாம்பரம் தஞ்சாவூர், கடலூர் ஆகிய மூன்று ஊர்களில் 'பணி இல்லங்கள்' உள்ளன. எனினும் அவற்றுள் முதலாவதும் முதன்மையானதுமாக விளங்குவது தாம்பரத்திலுள்ள பணி இல்லமேயாகும்.

பொதுவாக 'அன்பும் சேவையும்' என்னும் குறிக்கோள் கொண்ட தாம்பரம் 'பணி இல்லம்', 1948-ஆம் ஆண்டில் 50 பெண்களுக்கும், 25 குழந்தைகளுக்குமாக சென்னை இரா

பபுரத்தில் 2 வாடகைக் கட்டடங்களில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிறகு, 1956-ஆம் ஆண்டில் தாம்பரத்தில்-தற்போதுள்ள இடத்தில், 8.5 ஏக்கர் நிலப்பரப்புடையதும் இயற்கை எழில் மிக்க சூழலில் அமைந்ததுமான 'நிர்மலாத்தோட்டம்' ரூ. 1,50,000-க்கு விலைக்கு வாங்கப்பட்டது. தொடர்ந்து மாணவியர் தங்குவதற்காக 1959-ல் ரூ. 1,75,000 செலவில் ஒரு விடுதி கட்டப்பட்டது. அதன்பிறகு 1967-ல் சிறுவர் பயிற்சிக்கென ஒரு தனிக்கட்டடமும் கட்டப்பட்டது. 1972-ல் ரூ. 27,000 செலவில் உணவருந்தும் தனிக்கூடம் ஒன்றும் அமைக்கப்பட்டது. இவ்வாறுகத் தாம்பரம் பணி இல்லம் நாளொருமேனியாக வளர்ந்து வருகின்றது.

இப்பணி இல்லத்தில் 18 வயது முதல் 30 வயது வரையிலான தொகுதியைச் சேர்ந்த ஏற்கெனவே குறிப்பிட்டபடி சமூகத்தில் கலந்து கொள்ள முடியாத மகளிர்-புகலற்ற பெண்கள்-கணவனை இழந்தோர், கணவனல் கைவிடப்பட்டோர் என்போர் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

இல்லத்தில் சேர விரும்பும் மகளிர், மேற்கூறியவற்றில் எந்தப் பிரிவானராகவும் இருக்கலாம்; எந்தச் சமயத்தைச் சேர்ந்தவராகவும்கூட இருக்கலாம். ஆனல், குறைந்தது 5 ஆம் வகுப்பு வரையாவது படித்திருக்க வேண்டும். இத்தகைய தகுதிகளையுடையோர், அந்தந்த மாவட்ட மகளிர் நல அலுவலர்களுக்கு விண்ணப்பித்துக் கொள்ளவேண்டும்; அவ்அலுவலர்கள் அந்த விண்ணப்பங்களை நன்கு பரிசீலித்துப் பரிந்துரை செய்வர்; அந்தப் பரிந்துரையின்பேரில் விண்ணப்பதாரர்கள், இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

அடுத்து, இல்லத்தில் சேரத் தகுதி பெற்றவர்கள், குழந்தை பெற்ற தாய்மார்களாக இருந்தால், அவர்களோடு அவர்களது 2 குழந்தைகளும், இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். ஆனல் இத்தகைய குழந்தைகளுக்கு வயது வரம்பு உண்டு. பையன்களாக இருந்தால் 5 வயதுக்குமேல் ஆகியிருக்கக்கூடாது; பெண் குழந்தைகளாக இருந்தால் 7 வயதுக்கு மேல் ஆகியிருக்கக் கூடாது. இவ்வாறு குழந்தைகளோடு இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் தாய்மார், மாணவியராக வகுப்புக்குச் செல்லும்போது, அவரவர்களின் குழந்தைகளும் அவர்களுக்குரிய வகுப்புகளுக்குச் சென்று பயிலலாம். இந்தக் குழந்தைகள் 5-ஆம் வகுப்பு வரை இங்குப் படிக்கலாம். அவர்கள் தாயைப் பிரிந்து தனித்து வாழவேண்டுமென்ற அவசியமில்லை.

இல்லத்தில் மாணவியராக வரும் மகளிர், இங்கேயே மூன்ருண்டுகள் தங்கித் தனி எட்டாம் வகுப்பு (E.S.L.C.) வரை பயிற்சி பெறலாம். முன்பெல்லாம் இவர்கள் இங்கு இ.எஸ்.எல்.சி. முடித்த பிறகு, தேர்ச்சி பெற்ற மாணவியர் எஸ்.எஸ்.எல்.சி. குறுகிய காலப் பயிற்சிக்கு மத்திய சமூக நல வாரியத்தின் ஆதரவில் இயங்கும் பள்ளிகளுக்கு அனுப்பப் பெற்றனர். இப்போது, அவர்கள் இந்த எஸ்.எஸ்.எல்.சி. குறுகிய காலப் பயிற்சிக்காக அவ்வாறு வெளியே செல்ல வேண்டியதில்லை. இல்லத்திலேயே இந்தக் குறுகிய காலப் பயிற்சியைத் தொடங்க நமது அரசு அனுமதி கொடுத்துள்ளதால், 72-ஆம் ஆண்டிலிருந்து மாணவியர் இங்கேயே தங்கிப் பயில்கின்றனர்.



அது மட்டுமன்றி, இந்த எஸ். எஸ். எல். சி. குறுகிய காலப் பயிற்சியில் வெற்றி பெற்றவர்கள், மேலும் இரண்டாண்டுகள் இல்லத்திலேயே தங்கி, இடைநிலை ஆசிரியப் பயிற்சி பெறலாம். இதில் அவர்கள் தேர்வு பெற்றதும், இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றும் தகுதி பெற்று வெளிவந்து, ஆசிரியப் பணியாற்றி வாழ்வு பெறுவதோடு, சமுதாய அந்தஸ்தையும் பெறுகின்றனர்.

மாணவியர் 8-ஆம் வகுப்பு வரை பயில்கின்ற காலத்தில், அவர்களுக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது; நூற்புத் தொழில், பாய் பின்னுதல், தறிநெய்தல், தையல், பூவேலைகள் ஆகியன கற்பிக்கப்படுகின்றன. பாட்டு, தையல், பூவேலை ஆகியவற்றில் ஆர்வமுடையோர்க்கு இவற்றில் சிறப்பான பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்கள் அரசினர் தேர்வுக்கும் அனுப்பப்படுகின்றனர். இந்தத் தேர்வுகளில் வெற்றி பெற்றவர்களும் ஆசிரியர்களாகத் தொழில் தொடங்கும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

இவை தவிர, உடல் ஊனமுற்ற மகளிர்க்காகவும் குழந்தைகளுக்காகவும் உடல் ஊனமுற்ருேர் (Physically Handicapped Section) என்னும் தனிப்பிரிவு ஒன்று உள்ளது. இப்பகுதிக்கு முழு நேர முடநீக்கியல் வல்லுநர் ஒருவர் நியமிக்கப் பெற்றுள்ளார். இது தவிர, 15 நாட்களுக்கு ஒரு முறை அரசினர் பொது மருத்துவ மனையிலிருந்து உதவி மருத்துவர் ஒருவர் வந்து இவர்களை மேற்பார்வையிடுகின்ருர். மற்றும் எல்லா மாணவியருக்குமாகப் பகுதி நேர மருத்துவர் ஒருவர் வாரத்திற்கு 5 நாட்கள் இல்லத்திற்கு வந்து மருத்துவம் செய்கிருர். உடல் ஊனமுற்ற மகளிரும் குழந்தைகளும் வழக்கமான வகுப்புகளுக்குச் சென்று பயில்கின்றனர். மற்றும் அவர்களுக்குத் தையல், பூவேலை முதலியன கற்றுக் கொடுக்கப்படுகின்றன. இவர்களின் அன்ருடப் பணிகளில் உதவுவதற்காக ஓர் 'ஆயர்ள்' நியமிக்கப்பட்டுள்ளார். இதில் 11 பெண்களும் 11 குழந்தைகளும் உள்ளனர். தொடக்கத்தில் நடக்க முடியாமல் இந்தப் பிரிவில் வந்து சேர்ந்த 3 குழந்தைகள் இப்போது. அறுவைச் சிகிச்சைக்குப் பின் நடந்து திரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உடல் ஊனமுற்றோர் பகுதியில் உள்ள ஒரு சிறுமி

தையல் பயிற்சிப் பிரிவு :

15 மாணவியருடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பிரிவில் இப்போது 60-க்கும் மேற்பட்ட மாணவியர் இருக்கின்றனர். இவர்களுக்குத் தையல் வேலை, துணிகளில் பூவேலை செய்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்தப் பிரிவில் பயிற்சி பெறும் மாணவியர், ஜனவரி முதல் டிசம்பர் வரை பயிற்சி அளிக்கப்பட்டு ஆண்டிறுதியில் தேர்வுக்கு அனுப்பப்படுகின்றனர். தையல் பயிற்சியில் லோயர் கிரேடு தேர்விலும், எஸ்.எஸ்.எல்.சி. யிலும் தேர்ச்சி பெற்றுள்ள மாணவியர் 72-ஆம் ஆண்டு முதல் மேற்கொண்டு ஓராண்டு தங்கி, ஹையர்கிரேடு தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர். இப்பிரிவில் தயாரிக்கப்படும் கதர் மாலைகள் கண்கவர் வனப்புடன் திகழ்கின்றன. காதி கிராமோத்யக் பவன், இப்பிரிவில் கதர் மாலைகளுக்கு ஆர்டர் கொடுத்து வாங்கி விற்கிறது.

தையல் உற்பத்தி நிலையம்:

இல்லத்தில் உள்ள தையல் பிரிவில் பயிற்சி பெற்று, அரசினர் தேர்வில் வெற்றி பெற்ற 10 மாணவியருடன் 1971-ல் துவக்கப் பெற்ற இப்பிரிவுக்குத் தொழிற் பயிற்சியளிக்கும் ஓர் ஆசிரியை பொறுப்பேற்றுள்ளார். இப்போது இதில் 10 பேர் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இந்தப் பத்துப் பேரும் பணி இல்லத்தில் தையற் பயிற்சி நிலையத்தில் பயின்று லோயர் கிரோடு தேர்வில் வெற்றி பெற்றவர்கள். இவர்கள் நாள் ஒன்றுக்கு 3 ரூபாய் கூலி வீதம் பெறுகின்றனர். அரிசன நலத்துறையும், மருத்துவ மனைகளும் சீருடைகள் தைக்க இப்பிரிவில் ஆர்டர்கள் கொடுக்கின்றன. இதுதவிர பொருட்காட்சிகளில் பொது மக்களுக்கு விற்பனை செய்வதற்காகவும் இப்பிரிவில் ஆடைகள் தயாரிக்கப்படுகின்றன. கடந்த பொங்கல் விழாவுக்காக அரிசன நலத்துறைக்குச் சீருடைகள் தைத்துக் கொடுத்து அதன் மூலம் இப்பிரிவு, கூலியாக ரூ. 8 ஆயிரம் சம்பாதித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கோழிப் பண்ணை :

இல்லத்தில் 75 கோழிகளைக் கொண்ட ஒரு கோழிப்பண்ணை உள்ளது. இதற்காகக் கோழிப் பண்ணையைக் கண்காணிக்க ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பண்ணையில் கிடைக்கும் முட்டைகள் இல்லத்தில் உள்ளவர்களுக்கு விற்கப்படுகின்றன.

மற்றும், இல்லத்து மாணவியர்க்குக் கோழி வளர்ப்புப் பற்றிக் கற்றுக் கொடுத்திடவும் இப்பண்ணை பயன்படுகிறது. மாணவியர், பின்னர் கோழிப்பண்ணை தொடங்கி நடத்த இந்தப் பயிற்சி பெரிதும் உறுதுணையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தட்டெழுத்து, சுருக்கெழுத்து :

படித்த இளம்பெண்கள் கம்பெனிகளிலோ, அலுவலகங்களிலோ பணிவாய்ப்புப் பெற உதவும் நோக்கத்தோடு 1969-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் இப்பயிற்சிஆரம்பிக்கப்பட்டது. இங்கு ஓராண்டுக் காலம் தட்டெழுத்தும், சுருக்கெழுத்தும் கற்பிக்கப்பட்டு, அவர்கள் அரசினர் தேர்வுக்கு அனுப்பப் பெறுகின்றனர்.

இப்பிரிவுக்கு ஆண்டுதோறும் 20 மாணவியரைச் சேர்த்துக் கொள்ள அரசு அனுமதித்து உள்ளது. இதுகாறும் மூன்று பிரிவினர் தேர்வுக்கு அனுப்பப் பட்டுள்ளனர். இப்பிரிவில் பயிலும் மாணவியர், வெளி மாணவியர். இவர்களுக்குத் தலா ரூ. 20 உதவிப் பணமாக வழங்கப்படுகிறது.

நூற்பு நிலையம் :

இந்த நிலையம், 1973-ஆம்

மாணவியர் தங்கும் விடுதி



பாய் முடையும் பயிற்சி

ஆண்டு அக்டோபர்த்திங்கள் 2-ஆம் நாள் 'கதர் கிராமத் தொழில்கள்' (Khadi and VIllage Industries) சார்பில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. கமிஷனின் சார்பில் ஒரு தொழில் போதகர் (Craft Instructor) நியமிக்கப் பட்டுள்ளார். இல்லத்தில் படிப்பார்வம் குறைந்த சில மாணவியரும் மற்றும் வெளியிலுள்ள மகளிருமாகத் தற்போது 14 பேர் அம்பர் சர்க்கா மூலம் நூல் நுற்கக் கற்பிக்கப் படுகின்றனர்.

ஒன்றிணைந்த மகளிர் பயிற்சி :

கிராமப் பெண்களிடையே ஒற்றுமை உணர்ச்சி, கூட்டு மனப்பான்மை வளரச் செய்யச் சில மன்றங்கள் ஏற்படுத்தப் பட வேண்டும். அவ்வாறு அமைக்கப் படுவதால் பலர் ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் கூடவும் தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகிறது.

இதுமட்டுமின்றிப் பல புதிய விஷயங்களைக் கற்றுக் கொண்டு கூட்டுறவு முறையில் கிராம சமுதாயத்திற்குப் பயன்தரும் சிறந்த வேலைகளைச் செய்வதற்கும் ஒன்றிணைந்த மகளிர் பயிற்சியை மகளிர் நலத்துறை ஏற்படுத்தியுள்ளது. இப்பயிற்சி 1972 டிசம்பரில் தாம்பரம் பணி இல்லத்தில் துவக்கப்பட்டது. இப் பயிற்சிக் குரிய பயிற்சிக்காலம் ஒரு மாதம். பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து மகளிர் மன்ற அங்கத்தினர்கள் இந்தப் பயிற்சி முகாமில் சேர்ந்து பயிற்சி பெற்றுப் பயனடைகின்றனர்.

குழந்தைநல அமைப்பாளர் :

தமிழகத்தில் பள்ளிக்குச் செல்லும் வயது நிரம்பாத இளங்குழந்தைகளையுடைய பெற்ரோர் பணிகளில் ஈடுபட்டிருந்தால் அவர்களின் குழந்தைகளுக்கும், பேணிக்காக்க வசதியற்ற பெற்ரோரின் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும் பகற்பொழுதில் சத்துணவு வழங்கி அவர்களை நலமுடையவர்களாக வளர்க்கவும் அரசு ஆங்காங்கு குழந்தை நலக் காப்பகங்களைத் தொடங்கியுள்ளது. தமிழகத்தில் இத்தகைய குழந்தைநலக் காப்பகங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குழந்தை நல அமைப்பாளர் (C.W.O.) நியமிக்கத் திட்டமிட்டு, முதலாவதாக 600 பெண்களுக்குப் பயிற்சியளிக்க முடிவு செய்யப்பட்டது இதற்காக எஸ்.எஸ்.எல்.சி. படித்து, வேலை வாய்ப்புப் பெருமல்கிராமங்களில் சென்று குழந்தைகள் நல அமைப்பாளர்களாகப் பணிபுரிய விருப்பமுடையவர்களாக . இருக்கிற 600 பெண்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர். இவர்களை 6 பிரிவாகப் பிரித்துத் தமிழகத்தில் மகளிர் நலத்துறையின் கீழ் இயங்குகிற 6மையங்களில் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. 6-ல் தாம்பரம் பணி இல்லமும் ஒன்ருகும். இங்கு 100 பெண்கள், பயிற்சி கொடுக்கப்பட்டனர். 8-10-73-ல் தொடங்கிய இந்த

கலை நிகழ்ச்சியால் களிப்பூட்டும் குழந்தைகள்

பயிற்சி இரண்டுமாத காலம் நடைபெற்றது. இவர்களுக்குப் பயிற்சியளிக்க இரண்டு மனையியல் பட்டதாரிகள் அமர்த்தப்பட்டனர். பயிற்சியாளர்களுக்கு, குழந்தைகள் நல்வாழ்வு, அவர்களுக்குக் குறைந்த செலவில் நிறைந்த சத்துள்ள உணவு தயாரித்தல், குழந்தைகள் பராமரிப்பு, நோய்த் தடுப்பு முறைகள், துப்புரவு மற்றும் முதலுதவி ஆகியன கற்றுக் கொடுக்கப்பட்டன. இந்தப் பயிற்சியாளர்கள் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பயிற்சி பெறும் காலத்திலேயே அவர்களுக்குப் 'பணி நியமன ஆணை' (Appointment order) கொடுக்கப்பட்டு விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இல்லத்தில் சேர்ந்து பயிலும் மாணவியர்க்கு ரூ. 30-ம், குழந்தைகளுக்கு ரூ. 27-ம் சாப்பாட்டிற்காக அரசினரால் வழங்கப்படுகிறது. இதுதவிர, இல்லத்தின் சார்பில் ஆண்டு தோறும் 2 செட் உடைகள் வழங்கப்படுகின்றன. எல்லாருக்கும் சைவ உணவே அளிக்கப்படுகிறது. மாணவியரும் குழந்தைகளும் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் காணப்படுகின்றனர்.

பொதுவாக, இல்லத்தில் சாதி, மத வேறுபாடின்றி மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். அந்த மாணவியரும் குழந்தைகளும், சாதி மத வேறுபாடுகளின்றி, ஒற்றுமையாகவும் சகோதர உணர்வுடனும் பழகுகின்றனர். பல்வேறு சமயங்களின் விழாக்களையும் அவர்கள் எல்லாரும் சேர்ந்தே சிறப்புடன் கொண்டாடுகின்றனர். அவர்களின் திறமைகளை வெளிக்காட்ட அவ்வப்போது கலை நிகழ்ச்சிகள் நடத்துகின்றனர். மாணவியரும், குழந்தைகளும் மகிழ்ச்சிச் சுற்றுலாக்களுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்.



இல்லத்திலுள்ள மாணவியர் 10 பிரிவினராகப் பிரிக்கப்பெற்று, ஒவ்வொரு பிரிவினரும் ஓர் அலுவலக உறுப்பினரின் மேற்பார்வையில் இயங்குகின்றனர். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலையை ஒழுங்காகவும், உரிய காலத்திலும் மகிழ்ச்சியோடும் நிறைவேற்றுகிறார்கள். மாணவியர் தங்களுக்குள்ளே நிருவாகிகளையும் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். இந்த ஏற்பாடு, அவர்களிடையே கடமையுணர்வையும் குடியுரிமைப் பண்பையும் வளர்க்கப் பெரிதும் உதவுகிறது. இது அவர்களுக்கு மகிழ்ச்சியையும் அளிக்கிறது.

மகளிர் நலத்துறையின் கிளைகளுள் ஒன்றான இந்தப் பணி இல்லம், 'அன்பும் சேவையுமே' குறிக்கோளாகக் கொண்டு சமுதாய அந்தஸ்தையும் வாழ்க்கையில் நம்பிக்கையையும் இழந்து நைந்து போனவர்களுக்கு சமுதாய அந்தஸ்தையும், வாழ்க்கையில் நம்பிக்கையையும், இவற்றிற்கெல்லாம் மேலாகத் தன்னம்பிக்கையையும் மனவலிமையையும் பெற அவர்கள் மறுவாழ்வு பெற்று எல்லாப் பெண்களையும்போல மகிழ்ச்சியோடு வாழ உதவுகிறது.

''மங்கையராகப்
பிறப்பதற்கே—நல்ல
மாதவம் செய்திட
வேண்டுமம்மா!'

என்று அவர்கள் மகிழ்ச்சிக் கும்மி பாடிட வகைசெய்யும் மகளிர் நலத்துறையின் பணிகளை நாம் பாராட்டி வாழ்த்தி மகிழ்வோமாக!

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட். நெ. ஜி-1628. படாளம்

1. மருந்துக்கும் ஓர் கரும்பிலா இடத்தில்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை நிறுவி
'தோடுகொள்வேலின் தோற்றம் போல
ஆடுகட்கரும்பின் வெண்பூ நுடங்கும்'
கரும்புத் தோட்டங்களை ஈராறு ஆண்டுகளில்
வேண்டிய அளவு தோற்றுவித்தோம் எனில்
எங்கள் சாதனை அம்மா பெரிதன்றோ!

2. கரும்பு விலையன்றி, காலம் கோடாது
உர விநியோகம் செய்தும், முன்பட்ட நடவு
மான்யமளித்தும், ஊக்குவிப்புத் தொகையளித்தும்
பூச்சி மருந்துகளில் பாதிச் செலவை ஏற்றும்
துளைப்பான் பிணி கரும்பைத் தாக்காவண்ணம்
ஒட்டுண்ணிப் பூச்சிகள் உற்பத்தி செய்து
உரிய நேரத்தில் வயலில் இட்டும்
ஆலைக் கரும்பை உயிர்போல் காத்து
இன்னும் பல உதவிகள் செவ்வனே யளிக்கும்
மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையென்னும்
மதுரமான பெயரைத் தாங்கி நிற்கும்
எங்கள் ஆலை இனிதே வாழ்க!

பெட்ரோல் இல்லாமலே கார் ஓட்டலாம்!



"ஏய்! மஞ்சு! கார் எங்கேடி? பஸ் ஸ்டாப்பில் நிற்கிறாய்?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் செந்தாமரை.

"பெட்ரோல் விற்கிற விலையில் காரை எடுத்து வர முடியுமா? பெட்ரோல் வாங்குவதற்கு என்று அப்பா ஒரு குறிப்பிட்ட தொகைதான் தருகிறார். அதற்குமேல் கொடுக்க மாட்டார். அதனால்தான் பஸ்ஸில் போக வேண்டியுள்ளது" என்று வருத்தத்துடன் கூறினாள் மஞ்சு.

"பஸ்ஸில் பயணம் செய்யறது உனக்குப் பிடிக்குதா மஞ்சு?"

"பிடிக்கலைதான்! ஆனால் என்னடி செய்யறது? நீதான் 'கெமிஸ்ட்ரி எக்ஸ்பெர்ட்' ஆயிற்றே! பெட்ரோலுக்குப் பதில் வேறு ஒரு மாற்றுப் பொருள் கண்டுபிடியேன் பார்க்கலாம்!"

"ஏய் மஞ்சு! பெட்ரோல் இல்லாமல் கார் ஓட்டலாம் தெரியுமா?

"பெட்ரோல் இல்லாமல் கார் ஓடுமா? என்னடி புதிர் போடுகிறாய்?

"புதிர் இல்லே! உண்மைதான் சொல்கிறேன். நீதான் 'நியூஸ் பேப்பர்' படிப்பதில்லையே! உனக்கெங்கேடி உலகத்தில் நடப்பதெல்லாம் தெரியப்போகிறது?"

"கிண்டல் பண்ணாதேடி. விவரத்தைக் கூறுடி!"

"பெட்ரோலுக்குப் பதில் 'சார்க்கோல்' (Charcoal) எனப்படும் கரியைக் கொண்டு கார் ஓட்டும் முறையை டி.வி.எஸ். நிறுவத்தினர் கண்டு பிடித்துள்ளனர்!"

"என்னடி கதை விடுகிறாயா? கரியைக் கொண்டு கார் ஓடுமா?" "அவசரப்படாதே மஞ்சு! சொல்வதைக் கவனமாகக் கேள்."

"சரி! சொல்லம்மா! நான் கேட்கின்றேன்"

"கரி வாயு" (Charcoal gas) உற்பத்தி செய்வதற்காக ஒரு கருவியைக் கண்டு பிடித்துள்ளார்கள். அந்தக் கருவியைக் காரின் பின்புறத்தில் சிலமாற்றம் செய்து இணைத்துவிட வேண்டும். இக்கருவியைக் காரின் என்ஜினுடனும் (சில மாற்றம் செய்து) இணைக்கலாம். இந்தக் கருவியில் ஒரு கரி வாயு உற்பத்திச் செய்யும் அமைப்பு (Gas generator), ஒரு குளிர்ப்படுத்தும் பகுதி (Coolar) இரண்டு 'பில்டர்' (Filter) ஆகியவைகள் அமைந்துள்ளன. ஒரு அங்குல பருமனுக்குக் குறையாத, தூசியும், கல்லும் கலந்திராத நல்ல தூய்மையான கரித்துண்டுகளை உருளை போன்ற ஒரு பகுதியில் (Hopper) நிரப்பப்படுகிறது. ஒரு தடவை இவ்வாறு நிரப்பப்பட்ட கரியைக் கொண்டு 100 மைல் தூரம் காரை ஓட்டிச் செல்ல முடியும்.

"கரித்துண்டுகளை நிரப்பியவுடன், காற்று வீசும் துருத்தியின் வால்வு (Blower valve) திறக்கப்படுகிறது. பிறகு குளிர்படுத்தும் சாதனத்தில் உள்ள மூடி அகற்றப்படுகிறது. அதன் பின் ஒரு துணியில் மண்ணெண்ணெய்யை நனைத்துக் கரித்துண்டு உள்ள உருளையில் இட்டு எறிய விடப்படுகிறது. சுமார் 5 நிமிட நேரம் காற்று உற்பத்தி செய்யும் துருத்தி இயக்கப்படுகிறது. பிறகு கரிவாயு உற்பத்தியாகத் தொடங்குகிறது. அப்பொழுது அக்கருவியின் மூடி பொருத்தப்படுகிறது; கார் ஓடுவதற்குத் தயாரான நிலையை அடைகிறது! இவ்வாறு கரித்துண்டுகளை நிரப்பத் துவங்குவது முதல், கார் ஓடுவதற்குத் தயாராகும் நிலையை அடைவதற்குத் ஏறத்தாழ 20 நிமிடம் பிடிக்கும்."

"நீ சொல்வதைப் பார்த்தால், முன்பெல்லாம் பஸ்ஸில் கரி போட்டு 'டர்! டர்!' என்று சுற்றுவார்களே அந்த முறை போலல்லவா இருக்கிறது!"

"அதே போல்தான் என்று வைத்துக் கொள்ளேன். ஆனால் இதில் நிறைய மாற்றம் உள்ளது. நீயும் ஒரு 'கெமிஸ்ட்ரி' மாணவி என்பதால் அக்கருவியின் தத்துவத்தைக் கூறுகின்றேன், கேள்! கரித்துண்டுகள், ஒரு குறுகிய இடத்தில் எரியும் பொழுது 'கார்பன் மானாக்

சைடு' உற்பத்தியாகிறது. மஞ்சு! 'கார்பன் மானாக்சைடின்' குணம் என்னவென்று சொல்லு பார்க்கலாம்?''

''என்னடி, என்னைப் போய் கேள்வி கேட்கிறாய்? நான்தான் கெமிஸ்ட்ரியில் வீக் ஆச்சே! நீயே சொல்லி விடடி!''

''கார்பன் மானாக்சைடு ஒரு எரியக்கூடிய வாயு (Compustible gas). வெப்பத்துடன் கூடிய கரிவாயு சாம்பலுடன் கலந்து வெளிவருவதால், அவ்வாயுவை முதலில் குளிரச் செய்து வடிக்கப்படுகிறது. அதன்பின் தூய்மையான வாயு, காரின் என்ஜினுக்கு அனுப்பப்படுகிறது. என்ஜினில் அவ்வாயு ஒரு எலக்ட்ரிக் ஸ்பார்க் மூலம் —'கேசோலின்' (Gasoline) எரிக்கப்படுவது போல்-எரிக்கப்படுகிறது. அப்பொழுது ஏற்படும் சக்தியின் மூலம் கார் ஓடத் தொடங்குகிறது. நான் சொல்வது புரிகிறதா?'' என்று செந்தாமரை கேட்டாள்.

''ஓ! எஸ்! நன்றாகப் புரிகிறது. ஆனால் இவ்வாறு கரிவாயு கருவி பொருத்துவது சிக்கனமானதா என்று சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது.''

''அப்படிக்கேள்! இப்பொழுதுதான், உன்மூளை சுறுசுறுப்பு அடைந்துள்ளது என்று எண்ணுகின்றேன். கீப் இட் அப்!''

''தேங் யூ வெரி மச்!''

''30 மைல் தூரம் ஒரு பியட் காரில் செல்ல 1 காலன் பெட்ரோல் தேவைப்படலாம். அதற்கு ஏறத்தாழ ரூபாய் 12.20 முதல் ரூபாய் 12-79 வரை செலவு ஆகிறது. ஆனால் அதே 30 மைல் தூரத்தை 14 ராத்தல் (பவுண்டு) கரித்துண்டுகளைக் கொண்டு கடந்து விடலாம்! இதற்கு ஏறத்தாழ ரூபாய் 4-50 முதல் ரூபாய் 5.00 வரை மட்டுமே ஆகும். சுருக்கமாகச் சொன்னால் பெட்ரோல் செலவில், மூன்றில் ஒரு பங்கு மட்டுமே இம்முறையில் ஆகிறது. எனவே, பெட்ரோலுக்குப் பதில் கரிவாயு கருவியை காரில் பொருத்துவது மிகமிகச் சிக்கனமானதே!

''டேய்! செந்தாமரை இதுவரை உன்னை ஒரு 'புக் வோர்ம்' (Book Worm) என்று மட்டுமே நினைத்திருந்தேன். இப்பொழுதுதான் உனக்குப் பொது அறிவும் இருக்கிறது என்றும், அதைத் தெளிவாக மற்றவர்களுக்கும் புரியவைக்கும் சக்தியும் இருக்கிறது என்றும் தெரிந்து கொண்டேன்'' என்றாள் மஞ்சுளா!

''இந்த மாதிரி கரிவாயுக் கருவி ஒன்று தயாரிக்க தற்பொழுது ரூபாய் 6,000 செலவு ஆகிறது என்றும், இதை வணிக முறையில் பெருமளவில் தயாரிக்கும் பொழுது இதன் விலை 4,000 ரூபாயாகக் குறைந்துவிடும் என்றும் டி.வி.எஸ். நிறுவனத்தின் இயக்குநர் திரு. ஆர். இரத்தினம் குறிப்பிட்டுள்ளார்.''

''டி.வி.எஸ். நிறுவனத்தினர் இக்கருவியை எப்படிக் கண்டுபிடித்தார்கள்?''

''அது ஒரு பழைய கதை மஞ்சு! கரிவாயு தயாரிக்கும் கருவியை இரண்டாவது உலக யுத்தம் நடந்த நெருக்கடியான நேரத்தில், டி.வி.எஸ் நிறுவனத்தினர் முன்னோடியாக உற்பத்தி செய்தனர். அதை அடிப்படையாகக் கொண்டே, இப்புதிய கருவியை டி.வி.எஸ் நிறுவனத்தினர் தயாரித்துள்ளனர். கடந்த 22-2-74 அன்று இக்கருவியைப் பொருத்தி, பெட்ரோல் இல்லாமல் காரை ஓட்டிக் காட்டினார்கள். அதைப் பார்க்க ஏராளமான பொது மக்களும், என்ஜினியர்களும், ஆட்டோமொபைல் கம்பெனியைச் சேர்ந்தவர்களும் வந்திருந்தனர்.

''இக்கருவி எப்பொழுது விலைக்குக் கிடைக்கும் என்று கேட்டாயா?''

''கேட்காமல் இருப்பேனா? கேட்டேன். இம்மாதிரி கருவிகளைப் பெருமளவில் தயாரிக்கும் திட்டத்தை டி.வி.எஸ் நிறுவனத்தினர் இந்திய அரசுக்கு அனுப்பியுள்ளனர். அனுமதி கிடைத்ததும் உற்பத்தியைத் தொடங்குவார்கள். அதன்பின் விற்பனைக்குக் கிடைக்கக்கூடும்.''

''நான், என் அப்பா வெளியூரிலிருந்து திரும்பி வந்ததும் இதுபற்றிச் சொல்லி, எங்களுடைய கார்களிலும் கரிவாயுக் கருவி பொருத்துவதற்கு முன்கூட்டியே ஆர்டர் கொடுக்கச் சொல்ல நினைத்துள்ளேன்.''

''மஞ்சு! இத்தகைய உள்நாட்டுப் பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட உள்நாட்டுக் கருவிகளை உபயோகித்தால், பெட்ரோல் தேவை குறைந்துவிடும். இதனால் பெட்ரோல் வரவழைக்கச் செலவிட்டு வரும் அன்னியச் செலாவணியை மீதப்படுத்தி நாட்டின் வளர்ச்சிப் பணிகளுக்குச் செலவிட நாமும் உதவி செய்தவர்களாவோம். எனவே, உன் அப்பாவிடம் இதுபற்றிச் சொல்வது உன் கடமையாகும்'' என்று கூறிவிட்டு செந்தாமரை, ''மஞ்சு! பஸ் வருகிறது; புறப்படுவோமா?'' என்று கேட்டாள்.

''செந்தாமரை! உன்னோடு பேசிக்கொண்டிருந்தால் நேரம் போவதே தெரிவதில்லை! இன்று உன்னிடமிருந்து, பல பயனுள்ள செய்திகளைத் தெரிந்து கொண்டேன். மிகவும் நன்றி'' என்று கூறிவிட்டு, பஸ் நின்ற இடத்தை நோக்கிப் புறப்பட்டாள் மஞ்சு. செந்தாமரை மனநிறைவுடனும், சிரித்துக் கொண்டும் மஞ்சுளாவைப் பின் தொடர்ந்தாள்.

—ஆர். எம்.

வருகிறது புதிய கம்பு !

தற்பொழுது சாகுபடியில் உள்ள எச். பி கம்பு இரகங்கள் பெருமளவில் நோயினால் தாக்கப்படுகின்றன. குறிப்பாக 'பச்சைக் கதிர்' (Green-ear) நோயினால் எச். பி. கம்பு இரகங்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. அண்மையில் புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டுப் பரிசோதனை நிலையில் உள்ள '126D2A × J1270' என்ற வீரிய ஒட்டுக் கம்பு, 'பச்சைக் கதிர்' நோயினால் மிகக் குறைந்த அளவிலேயே தாக்கப்படுகிறது இப் புதிய இரகம் தற்பொழுது தமிழ் நாட்டில் மாவட்ட பரிசோதனை நிலையில் உள்ளது. இந்த இரகம் 'எச். பி. 3' கம்பு இரகத்தை விடச் சிறந்ததாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் வயது 85 முதல் 90 நாட்களாகும்.

காதி கிராப்ட் – கதர்—கிராமத் தொழில் பொருள்கள் வாங்குவதற்கு நம்பகமான இடம்

குடும்பத்துக்கு அன்றாடம் தேவைப்படும் பொருள்களிலிருந்து
கலையழகு கொஞ்சும் கைவண்ணப் பொருள்கள் வரை
காதி கிராப்ட்களில் நியாய விலையில் கிடைக்கிறது!
தமிழ் நாடு மற்றும்
பாண்டிச்சேரி மாநிலங்களில்
200 க்கும் மேலான காதி
கிராப்ட்கள் மக்களின்
தேவைகளைப் பூர்த்தி
செய்கின்றன.





தமிழ்நாடு கதர்—
கிராமத் தொழில் வாரியம்
குறளகம்
சென்னை–600001

ஒரு பெண்ணின் இதயம்



ஒரு பெண்ணின் இதயம் எவ்வாறிருக்கும்? ஓர் ஆணின் இதயத்தைக் காட்டிலும் 10 -15 சதவிகிதம் அது சிறியது. அதன் தசைப் படிவமும் மெல்லியதாக விருக்கிறது. எனவே பெண்ணின் இதயத் திறன், ஆணின் இதயத் திறனை விடக் குறைவே. குறைவான திறனுக்கு மற்றொரு காரணமும் உண்டு. உயிர்வளியைத் (Oxygen) அது நிமிடத்திற்கு 9 லிட்டர்தான் உட்கொள்ளுகிறது. அதாவது, ஆணின் இதயம் உட்கொள்ளுவதைவிட 20 சதவிகிதம் குறைவாகவே அது உயிர்வளியை எடுத்துக் கொள்கிறது. கடினமான உடலுழைப்பின் போது, உயிர்வளியை உட்கொள்வது படிப்படியாக அதிகரிக்கிறது. ஒரு குறிப்பிட்ட மட்டத்தை அடைந்த பின்னர் உழைப்பு அதிகரித்தாலும்கூட, உயிர்வளி உட்கொள்ளுதல் நின்றுவிடுகிறது. அதனால், அதிகக் களைப்பு ஏற்பட்டு விடுகிறது.

ஒரு பெண் எந்தவித உடல் உழைப்பிலும் ஈடுபடாமல், ஓய்வாகப் படுத்துக்கொண்டிருக்கும்போது அவளது இதயம் நிமிடத்திற்கு 5.5 லிட்டர் இரத்தத்தை 'பம்ப்' செய்கிறது. ஆணாக இருந்தால் இந்த அளவு 7.8 லிட்டர்களாகிறது.

மேற்கண்ட விவரங்களிலிருந்து பெண்களின் இரத்தக் குழல்கள் பலவீனமானவை என்று தெரிய வருகிறது.

ஒரு பெண்ணின் வாழ்க்கையில், இரண்டு காலக்கட்டங்களில் இதய இரத்த ஓட்ட மண்டலம், பெரும் தகைவுக்கு உள்ளாகிறது. ஒன்று அப்பெண் பூப்படையும் பருவத்திலும், மற்றொன்று அவளது இனப்பெருக்கக் கிரியைகள் மறையும் காலத்திலும் ஆகும். எல்லாப் பெண்களிடத்தும், இந்தக் கால கட்டங்களில் குறிப்பிடத்தக்க, இதய இரத்த ஓட்டப் பாதிப்புகள் ஏற்பட்டுத்தான் ஆக வேண்டுமென்பதில்லை.

பூப்படையும் காலத்து, ஹார்மோன்களின் பாதிப்புகளால், உடலில் குறிப்பிடத்தக்க, இயற்கையான மாற்றங்கள் பெண்களிடத்தே ஏற்படுகின்றன. உடலிலுள்ள பல சுரப்பிகளின் ஹார்மோன் கிரியைகளில் மாற்றங்கள் உண்டாகின்றன. இதயக் கிரியையைக் கட்டுப்படுத்தும் நரம்பு மண்டல ஒழுங்கமைப்பு, ஓரளவு பாதிக்கப்படுகிறது; இதன் விளைவாக, இதயப் பகுதியில் வலி தோன்றக்கூடும்; நாடித் துடிப்பு அதிகரிக்கிறது. சுவாசித்தலின்போது சிரமமும், விரைவில் களைப்பும் உண்டாகிறது.

பொதுவாக, பெண்கள் பூப்படையும் காலத்தில் அவர்கள் உயர் வகுப்புகளில் பயிலுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அப்பொழுது கல்விச் சுமை அதிகரிப்பதனாலும் அவர்கள் விரைவிலேயே களைப்பெய்த வாய்ப்பு ஏற்படுகிறது. இத்தகைய பருவத்தில் பெண்களின் இதய இரத்த ஓட்ட மண்டலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகளைத் தவிர்ப்பதற்குச் சரிவிகித உணவு, போதுமான தூக்கம், நல்ல ஓய்வு, தகுந்த உடற்பயிற்சி விளையாட்டு, அமைதியான நட்புறவுச் சூழல், பெற்றோர்களின் பரிவான போக்கு ஆகியவை அவசியமாகும்.

வயதான காலத்தில் மாதவிடாய் நிரந்தரமாக நீங்கும்போது ஒரு பெண்ணின் இதய இரத்த ஓட்ட நரம்பு மண்டலங்கள் அதிகமான பாதிப்புக்குள்ளாகின்றன. இனப்பெருக்கக் கிரியைகள் முழுமையாக அற்றுவிடுவதற்கான ஆரம்பக் கால கட்டமே அது. பொதுவாக, இந்தக் காலத்தில் பெண்களுக்கு அசதியும் மயக்கமும் ஏற்படுவதோடு அவர்களது இதயத் துடிப்பும் அதிகரிக்கிறது.

மூட்டுக்களிலும் தசைகளிலும் இனங்காண முடியாத ஒரு வலியும், தூக்கமின்மையும், உணர்ச்சிப் பெருக்கும், அமைதியற்ற தன்மையும் இன்னும் பல உளக்கோளாறுகளும் இக்காலத்தில் ஏற்படுவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இறுதியாக இந்த நேரத்தில் அவளது முதுமையும் அவளுக்கு அறிவுறுத்தப்படுகிறது. அதாவது ஒரு குடும்பத்தில் அவளது முக்கியத்துவம் குறைந்துவிட்டதாக அவளே கருதத் தொடங்கி விடுகிறாள்.

இந்த நேரத்தில் ஏற்படும் இதய இரத்த ஓட்டக் கோளாறுகள் எவ்வளவு காலம் நீடிக்கும் என்று அறுதியிட்டுக் கூற இயலாது. சிலருக்கு அது பல ஆண்டுக்காலம் வரை நீடிக்கலாம்.

தற்போது இத்தகைய இதயக் கோளாறுகளின் தனித்தன்மைகளை விவரமாகவும் சரியாகவும் அறிவதற்கான வசதிகள் உள்ளன. இதயப் பகுதியில் அநேகமாக எப்பொழுதும் இருந்துவரும் வலியும், உடல் உஷ்ணம் அதிகரிப்பும், ஒரு பெண்ணிற்கு ''மையோகார்டியல் இன்ஃபார்க்ஷன்'' ஏற்பட்டுவிட்டதோ என்ற சந்தேகத்தைத் தோற்றுவிக்கக்கூடும். இதனைச் சரியானபடி முடிவு செய்துவிட்டால் சில ஹார்மோன் மருந்து

களைக் கொண்டு முழுக் குணத்தை ஏற்படுத்திவிடலாம். இந்த நேரத்தில் ஒரு பெண்ணைச் சூழ்ந்திருப்பவர்கள் அவளிடம் ஒருவிதத் தனி அன்புடன் நடந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

தற்காலத்தில் மனித இனத்தின் முக்கியமான எதிரிகளாக மருத்துவ உலகில் கருதப்படுபவை, 'ஏத்திரோஸ்', 'கிளிரோஸிஸ்,' 'இதயப் பற்றுக் குறை', 'ஸ்டெனோகார்டியா' போன்ற நோய்களேயாகும்.

இவையனைத்தும் ஆண்களைக் காட்டிலும் பொதுவாக, பெண்களிடம் ஐந்து மடங்கு குறைவாகவே காணப்படுகிறது. சில குறிப்பிட்ட வயதினரிடையே இது இருபது மடங்கு குறைவாகவேயுள்ளது. ஆண், பெண் இன தனி வேறுபாடுகளே இதற்குக் காரணமாகும். பெண்ணின் ஹார்மோன்கள், உடலில் 'ஏத்திரோஸ்' 'கிளிரோஸிஸ்' நோய் ஏற்படுவதை தடை செய்கிறது என்று கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. தற்காலத்தில் 'இதய இன்ஃபார்க்ஷன்' அதிகமான இளைஞர்களிடம் காணப்படுகிறதேயன்றி, இளம் பெண்களிடம் காணப்படுவதில்லை. முதியவர்களிடம் கூட, அந்நோய் ஆண்களைக் காட்டிலும், பெண்களிடம் 10 மடங்கு குறைவாகவே உண்டாகிறது.

ஹார்மோன் பகுதி தவிர இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. உடல் உழைப்பற்ற-தசையியக்கம் மிகக் குறைவான ஆண்கள்தான் பெரும்பாலும் இதய நோயால் பீடிக்கப்படுகிறார்கள். போதுமான உடல் உழைப்பின்றி, தசை இயக்கம் பெரிதும் குறைந்துள்ள நிலையில்தான் இதய நோய்களைத் தூண்டும் உயிர் ரசாயனக் கோளாறுகள் தோன்றுகின்றன. பெண்கள் எப்பொழுதும் வீட்டு வேலையில் ஈடுபட்டிருப்பது அவர்களுக்கு ஓரளவேனும் தசை இயக்கத்தைத் தருகிறது.

பரவலாகக் காணப்படும் மற்றொரு இதய இரத்த ஓட்ட மண்டல நோய், இரத்த மிகு அழுத்தமாகும். மொத்தத்தில் இந்நோயால் ஆண்களும், பெண்களும் சம அளவிலேயே பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் நாற்பது வயதிற்குக் குறைவானவர்களில், ஆண்களே அதிகம் பேர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். நாற்பது வயதிற்கு மேற்பட்டுள்ளவர்களில் பெண்கள் பலர் இந்நோயால் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு ஹார்மோன் விளைவுடன் அதிக உப்புச் சேர்த்த பண்டங்களை உண்பதும் காரணமாகவிருக்கலாம் என்று கருதப்படுகிறது. சோடியம் அயனிகள் அதிகரித்து, தமனிக் குழல்களில் படிவதால் இரத்த மிகு அழுத்தம் ஏற்படுகிறது.

மேற்கூறப்பட்ட விவரங்களின் மூலம் ஒரு பெண்ணினுடைய இதயத்தின் தனித்தன்மை தெளிவாகத் தெரிகிறது. பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் இதனை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

இன்பத் தமிழ்நாடே—தம்பீ
இனியஉன் தாய்நாடு
அன்பு செலுத்திடுவாய்—அஃதுன்
அன்னையின் பொன்னாடு.

இன்பத் தமிழ்மொழியே—தம்பீ
இனியஉன் அன்னைமொழி
என்றும் அதைப்போற்றி—அதன்
இனிமை உணர்ந்திடுவாய்.

இன்பத் தமிழர்களே—தம்பீ
இனியவர்; உன்னினத்தார்
நன்றே இதையுணர்வாய்—இந்த
நானிலத் தன்புகொள்வாய்.

இன்பத் திருக்குறளைத்—தம்பீ
ஈந்தவன் உன்னவன்தான்
அன்புக் குறள்படிப்பாய்—தம்பீ
அதன்படி நீ நடப்பாய்.

—புலவர் மா. தமிழன்பன்



மாணவர் அரங்கம்

வேலை வாய்ப்புக்கு வழிகாட்டும் நிலையம்

இந்திய நாட்டில் பொருளாதார நெருக்கடி, வறுமை, வேலைவாய்ப்பின்மை இவையெல்லாம் அரசையும் மக்களையும் வாட்டி வதைக்கும் பிரச்சினைகளாக உள்ளன. படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில்லை! படிக்கின்ற மாணவர்களுக்கு எதிர்காலம் இருள்மயமாய்க் காட்சியளிக்கிறது. இளம் உள்ளங்களில் நம்பிக்கையும், திட்டமும் இல்லாத சூழ்நிலைதான் காணப்படுகின்றது. மாணவர்கள், எதிர்காலத்தைப் பற்றித் தொலைநோக்குடன் சிந்தித்துச் செயல்படவும் இல்லை.

வாய்ப்புகள் கிடைத்தற்கு அரியன. கிடைக்கின்ற வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்வது தனிமனிதனின் கடமை! மாணவர்களின் எதிர்காலம் ஏற்றம் பெற வழிகாட்டியாக, சிந்தனையைத் தூண்டும் கருவியாக, அவர்கள் வாழ்வில் அக்கறை கொண்டதாக சென்னைப் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள் செய்தி நிலையம் செயல்பட்டு வருகிறது. இருக்கின்ற பிரச்சினைகளையெல்லாம் தீர்த்துவிடுவது அரசாங்கம் ஒன்றினால் மட்டுமே நடக்கக்கூடிய காரியமல்ல. இருக்கின்ற பிரச்சினைகளை வரிசைப்படுத்தி, அவசியத்தை உணர்ந்து, தீர்வுகண்டு வருகின்ற நேரத்தில், புதிதாக முளைக்கின்ற பிரச்சினைகளோ ஏராளம்! இப்பிரச்சினைகள் தீரப் பொதுமக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

மாணவப் பருவம் துடிப்பான காலம்! சிறகடித்துச் சுதந்திரமாய்ப் பறந்து செல்லும் காலம்! அந்தப் பருவத்திலேதான் கட்டுப்பாடு நிறைந்திருக்கவேண்டும். கடமையைச் செய்கின்ற பொறுப்பு வேண்டும்! எல்லா மாணவர்களுக்குமே இனிமையான கல்லூரி வாழ்க்கை கிடைத்திடுவதில்லை! வசதி படைத்தோர் நல்ல வாய்ப்பினைப் பெறுகின்றனர்! கல்லூரிக் காலம் பொன்போன்றது! அங்கே நிறைவேற்ற வேண்டிய கடமை கண்போன்றது. இதை நினைந்து மாணவ, மாணவிகள் செயல்பட வேண்டும்.

கல்லூரிகளில் வசதி படைத்தவர்கள் மட்டுமே பயின்றிடவில்லை; நடுத்தர-ஏழை, பரம ஏழைக் குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களும் பயின்று வருகிறார்கள்! குறைந்த வருமானமுள்ள குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்குத் தமிழ்நாடு அரசு இலவசக் கல்வியோடு உதவித் தொகையும் வழங்கி ஆதரவு கொடுத்து வருகிறது. சாதாரணக் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்குக் கிட்டாதிருந்த கல்லூரிப் படிப்பு இன்று படிக்க வேண்டுமென்று விரும்புகின்ற எல்லாருக்கும் பொதுவாகக் கிடைக்கிறது. தமிழ்நாட்டில் 1973-74-ல் கல்லூரிப் புகுமுக வகுப்பில் 11 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் மாணவர்கள் சேர முன்வராததால் காலியாக உள்ளன.

எதிர்காலத்தில் என்ன செய்வதென்று புரியாத மாணவர்களுக்குத் திட்டம் தீட்டித் தருவதற்கும், வறுமையின் காரணமாகக் கல்வியில் கவனம் செலுத்த முடியாத மாணவர்களுக்கும், வெளிநாடு சென்று படிக்கத் திறமையும் ஆர்வமும் உள்ள மாணவர்களுக்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக அமைந்ததுதான், சென்னைப் பல்கலைக் கழகத்திலுள்ள மாணவர்கள் செய்தி நிலையம்!

இங்கிலாந்து, கானடா, ஜெர்மனி, பிரான்ஸ், நெதர்லாண்ட்ஸ், நார்வே, ரஷ்யா அமெரிக்கா போன்ற 27 நாடுகளுடன் மத்தியப் பேரரசு மாணவர்களை அந்நாடுகளுக்கு அனுப்பிப் படிக்க வைப்பது சம்பந்தமாக ஒப்பந்தம்செய்து உள்ளது. மாணவர்கள்

சிறப்புப் படிப்பிற்காகவும் (Specialists) பயிற்சிப் படிப்பிற்காகவும் மேல்நாடுகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். மாணவர்களின் தகுதி, திறமை இவற்றை அடிப்படையாகக் கொண்டே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

மேலைநாட்டுப் படிப்பிற்குச் செல்லும் மாணவர்கள் "பல்கலைக் கழக மாணவர்கள் செய்தி நிலையம்" (Students Information Bereau) மூலமாகத்தான் விண்ணப்பிக்கின்னர். ஒவ்வொரு ஆண்டும் 800 முதல் 900 மாணவர்கள் மேல்நாட்டுப் படிப்பிற்குச் செல்ல விண்ணப்பிக்கிறார்கள். ஆண்டுதோறும் விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. ஆனால் படிக்க அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது. 1972-73-ஆம் ஆண்டில் 211 மாணவர்களும் 1973-74-ஆம் ஆண்டில் 45 மாணவர்களும் மேல்நாட்டுப் படிப்பிற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

மேல்நாட்டிற்குப் படிப்பிற்காகச் செல்லும் மாணவர்களின் செலவுகளை அந்தந்த நாடுகளே ஏற்றுக் கொள்கின்றன. அங்கேயும் பொருளாதார நெருக்கடி இருப்பதால் தான் ஆண்டுதோறும் வெளிநாட்டிற்குப் படிக்கச் செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது. வசதியுள்ள சிலர் சொந்தச் செலவிலேயும் படிக்கச் செல்கிறார்கள். சில நாடுகள் பாதிச் செலவை மட்டுமே உதவித் தொகையாகத் தருகின்றன.

வெளிநாடுகளுக்குப் படிக்கச் சென்ற மாணவர்கள், படிப்பு முடிந்த பின்னர் பலர் தங்கள் தாய்நாட்டிற்கு உடனே திரும்பிவிடுவதில்லை. அந்தந்த நாடுகளிலேயே தங்கிச் சிறிது காலமாவது வேலை பார்த்துவிட்டுப் பின்னர்தான் தாய்நாடு திரும்புகின்றார்கள்.

தாய்நாட்டில் தங்களுக்கு ஒரு வேலை உறுதி என்று நம்பிக்கை கொண்டவர்களெல்லாம் படிப்பு முடிந்ததும் திரும்பிவிடுகிறார்கள். பலர் அங்கேயே தங்கிச் சிறிது காலம் வேலை பார்த்துவிட்டுப் பின்னர் தாயகம் திரும்புவதற்கான காரணம், அந்த வேலையின் தன்மை பிடித்தமாக இருப்பதும், போதுமான சம்பளம் கிடைப்பதுமே ஆகும்!

அமெரிக்காவில் ஒரு வாடகைக்கார் ஓட்டுநர் மாதம் ஒன்றுக்கு ரூ. 3,500-ம், ஒரு விஞ்ஞானி ரூ. 6,000-ம் பெற முடிகிறது. வெளிநாடுகளில் இது போன்ற வசதி வாய்ப்புக்களைக் காணுகின்ற படிக்கச் சென்ற மாணவர்கள் தாங்களும் அந்த வாழ்க்கையை அனுபவித்துவிட்டே தாய்நாடு திரும்புகின்றனர்.

இந்தியாவில் மட்டும் 2100 வகையான படிப்புகள் (Courses) உள்ளன. தற்பொழுது சென்னைப் பல்கலைக் கழகம் புத்தகத் தொழிற்சாலை (BOOK INDUSTRY) சுற்றுலா (TOURISM) பொதுமக்கள் தொடர்பு (PUBLIC RELATIONS) நிறுவனங்களுக்கான செயலாளர்கள் (Corporation Secretaries) ஆகிய பாட வகைகளைச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தொடங்க முடிவெடுத்து அனுமதி வழங்கியுள்ளது. தமிழ்நாட்டிலோ அல்லது இந்தியாவிலோ அல்லது வெளிநாடுகளிலோ படிக்கச் செல்வது சம்பந்தமான எல்லா வித ஆலோசனைகளையும் சென்னைப் பல்கலைக் கழக மாணவர்கள் செய்தி நிலையம் நேரில் வருபவர்களுக்கும், தபால் மூலம் தொடர்பு கொள்பவர்களுக்கும் தகவல் கொடுத்து வருகிறது.

விடுமுறை வேலைத் திட்டம்

இந்தச் செய்திநிலையம் விடுமுறை வேலைத் திட்டம் (Vacation Project) ஒன்றை நடத்தி வருகிறது. மாணவர்களுக்கு மட்டுமே இந்த வாய்ப்பை அளிக்கிறது. வசதியற்ற மாணவர்களுக்கு இந்த வேலையின் மூலம் கிடைக்கின்ற ஊதியம் பயனுள்ளதாகவும், ஆறுதல் அளிக்கக் கூடியதாகவும் அமையும் என்பதுடன், படிக்கும் போதே தொழில் அனுபவமும் ஏற்பட்டு வருகிறது என்ற வகையிலும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் மிகப்பெரிய சமூகத் தொண்டு என்று சொல்லலாம்! இந்தச் சமூகத் தொண்டுக்குச் சமுதாய ஒத்துழைப்பு நிரம்பத் தேவை! ஐந்தாண்டுக் காலமாக இயங்கி வரும் இந்த நல்லதொரு திட்டம் உருவானதற்கான பெருமையெல்லாம் நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையே சேரும்! வசதியற்ற மாணவர்களுக்கெல்லாம் இப்படியொரு வாய்ப்பை அளிப்பதற்கான திட்டத்தை உருவாக்கி அதற்கான தொடக்க விழாவையும் அவர்கள்தான் நடத்தி வைத்தார்கள்.

இளங்கலை 3-ஆம் ஆண்டு மாணவர் ஒருவருக்குக் கல்லூரி முதல்வர் பணிநியமன ஆணையை வழங்குகிறார்.



சென்னைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு அரசு, இந்திய அரசு, அரிமா சங்கங்கள், ரோட்டரி கிளப்புகள், தனியார் நிறுவனங்கள், வர்த்தகக் கழகங்கள் இவையனைத்தும் கூட்டாக ஒன்று சேர்ந்து இந்த விடுமுறை வேலைத் திட்டத்தை நல்ல முறையில் நடத்தி வருகின்றன. படிப்பதற்கு வேண்டிய பல வசதிகளை அரசு செய்து வருவதாலும், படிக்க வேண்டுமென்ற ஆர்வம் எல்லாரிடத்திலும் வளர்ந்து வருவதாலும், வசதியில்லாதவர்களும் கல்லூரிகளில் படிக்க முன்வருகிறார்கள். எந்தவிதச் சொத்தும் இல்லாத சாதாரண கூலிவேலை செய்பவர்கள், ரிக்ஷா ஓட்டுபவர்கள் ஆகியோரின் பிள்ளைகள் மட்டும் 2,100 பேர் கல்லூரிகளில் படிக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் விடுமுறையில் அளிக்கின்ற இந்த வேலையில் கிடைக்கும் ஊதியம் மிகப் பயனுள்ளதாக அமைகிறது. இதுதவிர நடுத்தரக் குடும்பத்தில் பல குழந்தைகளைப் பெற்று அதனால் ஒரு குழந்தையையும் சரியாக வளர்க்க வாய்ப்பில்லாத குடும்பத்திலிருந்து படிக்க வருகின்ற மாணவர்களுக்கும் இந்த வேலை வாய்ப்பு அளிக்கப்படுகின்றது.

1970-ஆம் ஆண்டு இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் 75 மாணவர்களுக்கு மட்டுமே விடுமுறையில் வேலை கொடுக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக இந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்து கடந்த ஆண்டு 610 மாணவர்களுக்கு வேலை தரப்பட்டது. இந்த ஆண்டு 1,000 மாணவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டுள்ளது. எந்தத் தொழில் செய்தாலும் அவமானம் இல்லை என்ற மனோபாவத்தை வளர்த்துக்கொண்டு, மாணவர்கள் எந்த வேலையாய் இருப்பினும் சிறப்பாகவும், உறுதியாகவும் செய்து வருகிறார்கள். மாணவர்கள் செய்தி நிலையத்தின் மூலமே இந்த வேலைகள் ஏற்பாடு செய்து தரப்படுகின்றன. விண்ணப்பிக்கும் மாணவர்களுக்குக் கிடைக்கின்ற வேலைக்கான உத்திரவை அந்தந்தக் கல்லூரி முதல்வர்களுக்கு இந்தச் செய்திநிலையம் அனுப்பி மாணவர்களுக்கு வழங்கச் செய்கிறது. இந்தச் சமூகத் தொண்டுக்குப் பொருள் நிறைந்த மனம் பரந்த இதயங்கள் ஒத்துழைப்புத்தர முன்வர வேண்டும்.

இந்தச் செய்தி நிலையத்தின் மூலம் பகுதிநேர வேலையும் (Part-time work) மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது. படிப்பு முடிந்ததும் மாலை வேளைகளில் சிலமணி நேரம் செய்கின்ற வேலையின் மூலம் ஈட்டுகின்ற பொருளால் இருக்கின்ற இன்னல்களைப் போக்கிக் கல்வி கற்க வாய்ப்பு ஏற்படுகிறது. நூறு மாணவர்களுக்கு மட்டுமே தற்பொழுது பகுதி நேர வேலை அளிக்க இயன்றுள்ளது. பல்கலைக் கழகத்தில் மட்டும் 45 மாணவர்கள் பகுதி நேர வேலை பார்த்து வருகிறார்கள். ஒரு மணி நேரத்திற்கு 1 ரூபாய் 25 காசு வீதம் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படுகிறது.

மாணவிகளுக்கும் மாணவர்களுக்கும், விடுமுறை " வேலை, பகுதிநேர வேலை ஆகியவற்றில் வாய்ப்பளிக்கப்படுகிறது. இங்கிலாந்து, ஜெர்மனி, போன்ற நாடுகளில் கல்லூரிகள், பள்ளிகளின் வேலை நேரம் காலை 8 மணிக்கு ஆரம்பித்து மதியம் 1 மணிக்கு முடிவடைகிறது. ஆகையால் அங்குள்ள மாணவர்கள் பகுதிநேரவேலைக்குச் செல்ல வசதியாக உள்ளது. ஆனால் இங்கு 10 மணி முதல் மாலை 4 மணி வரை கல்லூரிகளின் வேலைநேரமாக உள்ளதால் பகுதிநேர வேலைக்குச் செல்லவும் சிரமமாக உள்ளது. வேலையில் அமர்த்திக் கொள்வதற்கான வாய்ப்பும் குறைவாக உள்ளது. இந்தத் திட்டம் சமுதாயத்திற்குத் தேவையானதாக உள்ளது.

ஒவ்வொரு துறையிலும் திறமையும் நிபுணத்துவமும் கொண்டவர்கள் இந்தச் செய்தி நிலையத்தில் சிறப்பு உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளனர். மே அல்லது ஜூன் அல்லது இருமாதங்களிலும் மாணவர்கள் என்ன படிப்புப் படிப்பது, எதிர்காலத்தை எப்படி அமைத்துக் கொள்வது, அவரவர்கள் தகுதிக்கு எந்தத்துறை பொருத்தமானதாகும் என்பதுபோன்ற ஆலோசனைகளை இந்த நிலையம் மாணவர்களுக்கு அளித்து வருகிறது.

பல்கலைக்கழக வேலைவாய்ப்பு, செய்தி மற்றும் வழிகாட்டும் நிலையம், சென்னை-5 என்ற முகவரியில், நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ இந்த ஆலோசனைகளை மாணவர்கள் பெறலாம். வியாபாரத்தைப் பற்றி மாணவர்கள் ஆலோசனை பெற விரும்பினால், சிறிய வியாபாரமாக ஆரம்பித்துப் பெரிய கம்பெனியாக நிலை நாட்டி வளர்ச்சி பெற்ற ஒருவரை அழைத்துப் பல்கலைக் கழக செனட் அறையில் உரை நிகழ்த்தச் செய்கிறார்கள். ஒவ்வொரு மாணவருக்கும் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் விளக்கி வழிகாட்டுகிறார்கள்.

இந்தத் திட்டத்தின் மூலம் இளைஞர்கள் அனுபவசாலிகளைச் (Youth meets Expense) சந்தித்து ஆலோசனை பெறுகிறார்கள். செய்தி நிலையத்தில் திரு. சித்ரா நாராயணசாமி, திரு. ஈஸ்வரன், திரு. வைத்தீஸ்வரன், திரு. டாக்டர் ஜெகதீசன் போன்றவர்கள் உறுப்பினர்களாக உள்ளார்கள். திரு. டாக்டர் ஜெகதீசன் அவர்கள் மருத்துவ மாணவர்களுக்கு விடுமுறையில் வேலை வாய்ப்பளிப்பதுடன் ஆலோசனை வழங்கும் ஆக்கப்பணியையும் செய்து வருகிறார். விடுமுறைக் காலத்தில் நடத்தப்படும் இந்த வகுப்புகளுக்கு மாணவர்களுடன் பெற்றோரும் வந்து தங்கள் பிள்ளைகளை எந்தத்துறையில் ஈடுபடுத்தலாம் என்பன போன்ற ஆலோசனைகளைக் கேட்டுச் செல்கிறார்கள்.

வெளிநாடுகளில் படிக்கச் செல்லுதல், இங்கேயே படிக்கும் மாணவர்கள் எந்த வழியில் செல்வது, படிக்கும் மாணவர்களுக்கு விடுமுறை வேலை, பகுதிநேர வேலை, வெளிநாடுகளிலிருந்து தமிழகத்தில் படிக்க வந்துள்ள மாணவர்களுக்கு வழிகாட்டுதல்போன்ற இன்னும் எத்தனையோ தகவல்களுக்கு, சென்னைப் பல்கலைக் கழக மாணவர்கள் செய்தி நிலையம் வழிகாட்டியாக அமைந்துள்ளது.

60 குடும்பங்கள் தங்களை இந்தச் செய்தி நிலையத்தில் பதிவு செய்து கொண்டுள்ளன. வெளிநாட்டிலிருந்து தமிழகத்தில் படிக்க வந்துள்ள மாணவர்களை விடுமுறை அல்லது விழா நாட்களில் விருந்தினராக அழைத்துச் சிறப்பித்து மகிழ்வித்துக் குடும்பச் சூழ்நிலைகளை அறியவும் ஆறுதல் பெறவும், பதிவு செய்துள்ள குடும்பங்கள் பயன்படுகின்றன.

— ம. அ.

தமிழ்நாட்டின்

பசுமைப் புரட்சி

1966-67ல் உற்பத்தி 54 இலட்சம் டன்கள்

1972-73ல் உற்பத்தி 72 இலட்சம் டன்கள்

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியில் நீங்கள் செலுத்தும் முதலீடுகள்
உங்கள் நலனுக்காக பெருகுவதுடன் அவை தமிழ்நாட்டின்
பசுமை புரட்சிக்கும் உதவுகிறது.

எங்கள் வங்கி வழங்கிய குறுகிய கால விவசாயக் கடன்:

(ரூபாய் இலட்சங்களில்)

1966-67ல்	2100.87
1972-73ல்	5618.15

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்
19/20, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001
தொலை பேசி எண். 20367. தந்தி. "அர்பாங்க்"

குடவாசல்

ஆர். கனகசபை — தலைவர்
சி. கிருட்டிணமூர்த்தி — உபதலைவர்
என். எல். ஹெப்லிகர் — நிர்வாக இயக்குனர்

TNSC BANK

திருவாளர் தெருவாழ்வு

தெருப்படியில் நின்றபடி பார்த்தே
திருவாளர் புறப்பட்டார் வெளியே.
விருப்பமுடன் திருமதியார் வந்தே
'விரைந்தெங்கே செல்கின்றீர்'—என்றார்.
'புறப்படுங்கால் எங்கென்றாய், பேயே;
புகுந்தனையே பொல்லாங்காய் நாயே;
உருப்படுமோ எடுத்தசெயல்?'—என்றே
உதிர்த்திட்டார் சுடுசொற்கள்; ஓய்ந்தார்.

புறப்படுங்கால் 'எங்'கென்றே வினவின்
பொல்லாங்கே நேருமெனும் பொல்லாச்
சிறைப்படுக்குஞ் சகுனத்தைப் பார்க்கும்
சிறுசெயலால் மனம்வற்றிப் போனார்;
முறைப்படுத்திச் செயலாற்றுந் திறனில்
முழுத்திறனும் பெற்றிருந்தும் இந்தக்
குறைப்படுக்கும் பழக்கத்தால் அன்பைக்
குலைத்தில்லம் குமைந்திடவே செய்வார்.

பெருக்கோடும் அன்புடையார்; ஆனால்,
பிறக்காடும் புன்பழைமை கொள்வார்;
தருக்காடும் வேங்கைக்கும் அஞ்சார்;
குறுக்கோடும் பூனைக்கோ சோர்வார்.
திருக்காடும் பகைக்கும்பின் வாங்கார்;
தெருக்கோடி மொட்டைவரின் தாங்கார்.
உருக்காடும் தமிழ்மரபில் வந்தார்;
உறுவாழ்வில் பிறமரபே கொண்டார்.

மாலையிட்டு மணந்தக்கால் 'வாழ்வை
மலர்வித்து மணந்தந்தாள்'—என்றும்
'பாலையிட்ட பனிமொழியாள்'—என்றும்
'பண்'ணென்றும் 'கண்பொன்னே'—என்றும்
'சோலைவிட்ட தென்றலென்றும் இன்பாய்ச்
சொல்லடுக்கிக் குலவிவந்தார், இங்கே
ஆலைவிட்ட புகைக்கூடாய் ஆனார்;
ஆரணங்கோ பேய்நாயாய்ப் போனார்.

மனைவிட்டுப் புறப்படுங்கால் மக்கள்
மனையாள்பால் மனந்தொட்டுப் பேசி,
'எனைவிட்டுப் பிரிந்திருப்பீர்; யானே
எடுத்துவைத்த செயல்தொடுத்து முடித்துச்
சுனைவிட்ட நீரெனவே வருவேன்;
சுளைவிட்ட தேன்சுவைகாள்'—என்றே
நினைவெடுத்துச் சொல்லிவிட்டுச் சென்றால்
நிகழ்ந்திடுமோ 'எங்'கென்னுஞ் சொல்லே?

'பணம்விரிக்கப் புறப்படுவேன்; நாளை
பழையனூர் சென்றிடுவேன்; முல்லை
மணம்விரிக்கும் நேரத்தில் வருவேன்;
மனம்விரித்துக் காத்திருப்பீர்'—என்றே
குணம்விரித்துச் சென்றிடுதல் நல்ல
குடும்பத்துத் திருவாளர்க் கழகாம்.
சினம்விரித்துச் சீறிவிழுந் தேகல்
சிரிக்கின்ற தெருவாளர்க் கழகாம்!

—கவிஞர் கோவை இளஞ்சேரன்

வெளிநாட்டுச் செலாவணி தரும் குளிர் மணச் சந்தனம்

அரைத்தாலும் மணம்-எரித்தாலும் மணம்! கொதி கலனில் இட்டுக் கொதிக்கவைத்துத் தைலமாக வடித்தால் கொள்ளை மணம்!

மங்கலப் பொருட்களில் ஒன்றாய், மனத்திற்கும் உடலுக்கும் இனிமையும் குளுமையும் தருவதாய்த் தமிழர்தம் வாழ்வில் இனிமை சேர்க்கும் சந்தனம், தமிழ் இலக்கியங்களிலும் அழியாத இடத்தைப் பெற்றது:

''செந்தணலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்
சீதச் சந்தனம் என்று யாரோ தடவினர்''

என்று நந்திக் கலம்பகத்தில் வரும் உருக்கமும் நயமும் கலந்த வரிகள் இதற்குச் சான்று பகரும்!

தென்னாட்டுக்கு உரிய சந்தன மரம், இந்தியாவிலேயே தமிழ் நாடு, மைசூர் ஆகிய இரண்டு மாநிலங்களில்தான் பயிராகின்றது. சந்தனத்தின் இயற்கை மணமும், புகழ்மணமும் உலகெங்கும் பரவியுள்ளது. இவ்வளவு நறுமணம் கொண்ட இயற்கைத் தாவரம் உலகத்திலேயே வேறு எதுவும் இல்லை.

நிகரில்லாப் பொருள்

மரத்தின் பருமன் அளவின் அடிப்படையில் பார்த்தால் இந்திய மரங்களில் சந்தன மரமே விலை உயர்ந்தது ஆகும். இம்மரம் எடை நிறுத்து விற்கப்படுகிறது. செம்பாகமான சேகு மரம் அல்லது வைரப் பகுதியின் எல்லாப் பகுதிகளுமே பயன்படுகின்றன. சித்திர வேலைப்பாடு மிகுந்த பொருள்கள், தடிகள், பேனாக் கட்டைகள் முதலியன இதிலிருந்து செய்யப்படுகின்றன. அரைக்க அரைக்க மணம் மிகும் சந்தனம் உடலுக்கு நல்ல குளிர்ச்சி தருவதுமாகும்.

செயற்கை முறையில் சந்தனத்திற்கு நிகரான வாசனைப் பொருள் இதுவரை உற்பத்தி செய்யப்படவில்லை. தமிழ் நாடு, மைசூர் தவிர்த்து இந்தோனிசியாவில் டிமோர் தீவுகளில் மட்டுமே சந்தனமரங்கள் சிறிதளவில் உள்ளன.

தமிழகத்தில் கோவைமாவட்டம், சேலம், வேலூர்ப் பகுதிகளில் சந்தன மரம் வளர்கிறது. குறிப்பாக ஹாசனூர்ப் பகுதியிலும் ஜவ்வாது மலைகளிலும் சற்று அதிக அளவில் பயிராகின்றது. ஆயிரம் அடிக்கு மேற்பட்ட உயரப்பரப்பில் 20-லிருந்து 30 அங்குலம் வரை மழை உள்ள பகுதிகளில் சந்தன மரம் வளர்கிறது. நிலைப்பசுமையான சிறு சிறு இலைகள் உள்ள இலையுதிராச் சிறு மரம் இது.

சந்தன மரத்தின் நடு விட்டத்தில் முதிர்ந்த சேகேறிய, வைரம் பாய்ந்த பகுதிகளிலிருந்து இறக்கப்படும் நறுமணம் மிகுந்த சந்தனத்தைலம் அனைத்து நாடுகளிலும் பல்வேறு பகுதிகளிலும் விரும்பி வாங்கப்படுகின்றது. வாசனைப் பொருள்கள், வாசனைச் சோப்பு மற்றும் மருந்துகள் செய்ய இது பெரிதும் பயன்படுகிறது. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சந்தனம், முக்கியமான வாணிபப் பொருளாக இருந்து வந்தது. மைசூர் மாநிலம்தான் இதில் முதலிடம் வகிக்கின்றது.

சந்தனத் தைலம்

முதலாவது உலகப்போருக்கு முன்பு, நமது நாட்டின் சந்தனக் கட்டைகளை ஜெர்மானியர் வாங்கிச் சந்தனத் தைலம் இறக்கி விற்று இலாபமடைந்து வந்தார்கள். முதலாவது உலகப் போரின்போது ஜெர்மனி, போரில் சிக்கிய நாடாகி விட்டதால், இந்தியாவிலிருந்து சந்தனக் கட்டைகளை அது வாங்க இயலவில்லை. விலை மிகுந்த சந்தனமரம் தேங்கி நிற்கும் நிலை வந்தபோதுதான் ஒரு பரிகாரமும் தோன்றியது. நமது நாட்டிலேயே சந்தனத் தைலம் இறக்கும் தொழில் ஆரம்பமாவதற்கு அந்த உலகப் போர் நெருக்கடி, ஒரு வழி வகுத்துத் தந்தது. மைசூர் மாநிலத்தில் சர். எம். விஸ்வேஸ்வரய்யா அவர்கள் சந்தனத் தைலம் இறக்கும் தொழில் தொடங்குவதற்கு உறுதுணையாகச் செயல் பட்டார்.

எண்கள் இட்டுப் பதிவு

வனத் துறை மூலமாகக் கிடைக்கும் வருமானத்தில் கிட்டத்தட்டச் சரிபாதி சந்தன மரத்திலிருந்து வருவதாகும். காடுகளில் வளரும் சந்தன மரங்களுக்கு எண்ணிட்டுப் பதிவு செய்து கொள்வதும், பட்டுப்போன மரங்களைப் பெயர்த்து வெட்டி எடுத்துச் சேகரித்து விற்பனைக்கு வகை செய்வதும் வனத்துறையின் முக்கியப் பணிகளில் ஒன்றாக இருந்து வருகின்றது. இதனை நன்கு சுத்தப்படுத்தித் தரம் பிரித்துச் சத்தியமங்கலத்திலும் திருப்பத்தூரிலும் அரசாங்கம் ஏலத்தில் விற்கிறது.

ஐம்பது வயது

இவ்வளவு சிறப்பான இயற்கைச் செல்வமாக இருந்தும், சந்தனத்தின் பெருக்கத்தை எதிர்நோக்கி நிற்கும் இடையூறுகள் ஏராளம். சந்தனத் தைலத் தேவை அதிகரித்துக் கொண்டே வருகின்றது. ஆனால் இந்த அரிய மரங்கள் அவ்வளவு வேகத்தில் வளர்பவை அல்ல. சந்தன மரம் போதிய அளவில் வளர்ந்து முதிர்வதற்கு 40 முதல் 50 ஆண்டுகள் வரை ஆகும். இதற்கு முறையாகத் திட்டமிட்டுப் பராமரிப்பது அவசியமாகின்றது. மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவாகக் காடுகளை விவசாயம், குடியிருப்பு முதலியவைகளுக்குப் பயன்படுத்துவதால் வனப்பரப்புக் குறைந்து கொண்டு வருகின்றது. ஆடு மாடுகள் சென்று மேயும் போதும், சந்தனச் செடிகள் பல அழிந்து போகின்றன. காட்டுத் தீயினாலும் சேதங்கள் ஏற்படுகின்றன. "Spike disease" என்னும் நோய், சந்தன மரத்திற்குப் பெரிய எதிரியாக உள்ளது.

அந்த நாளில் சந்தன மரம் என்றால், அதில் 50 சதவிகிதம் வைரம் பாய்ந்த பகுதியாக இருக்கும். நோய்கள் அதிகமானதைத் தொடர்ந்து அம்மரங்கள் இப்போது சுமார் 10 சதவிகிதம் அளவுதான் வைரம் பாய்ந்த பகுதிகளாக இருக்கின்றன. முன்பெல்லாம் ஒரே ஒரு சந்தன மரத்திலிருந்து அரை டன், முக்கால் டன் அல்லது 1.2 டன் எடை அளவுக்குக்கூட வைரக்கட்டைகள் கிடைக்கும். இப்போது 40 அல்லது 50 மரங்களைக் கொண்டு தான் அந்த அளவு வைரக்கட்டைகளைப் பெற முடிகின்றது. இதனால் இறக்கும் தைலம் குறைகிறது; வருமானமும் குறைகிறது. சந்தன மரங்களை எந்த அளவுக்கு எடுக்க வேண்டுமோ, அந்த அளவினை மீறிய விதத்தில் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். அச் செல்வத்தைத் தேய்த்துக் கொண்டிருக்கும் நிலை உள்ளது என்பதையும் புள்ளி விவரங்கள் புலப்படுத்துகின்றன.

புதிதாகக் காடு வளர்க்கும் திட்டப் பகுதிகளில் சந்தனச் செடிகள் ஏராளமாக முளைக்கின்றன. ஆனால் மிகப் பெரும்பாலானவை முளைக்கும் வேகத்திலேயே மடிந்து விடுகின்றன. சுற்றுச் சூழ்நிலை இதமாக இல்லாமல் இருப்பதும் நோயுமே இதற்குக் காரணங்கள் ஆகும். தவிர சந்தனமரம் அரை ஒட்டுண்ணி வகையைச் சேர்ந்தது; இதன் வேர்கள் அருகிலுள்ள மரம் செடிகளின் வேர்களைப் பற்றி அவற்றிலிருந்து சில பொருட்களை உறிஞ்சிக் கொள்ளும். எனவே சந்தன மரத்துக்குச் சுற்றுச் சூழ்நிலையும் முக்கியமானது. காட்டுப் பரப்புகளைப் பாதுகாத்து, சந்தன மரங்கள் பரவலாக வளர வகை செய்வதில் ஒரு அங்கமாக 'கும்ரி' முறையில் சந்தன மரங்களைப் பயிரிட்டதில் பலன்கள் வெற்றிகரமாக உள்ளன.

டன் ஒன்றுக்கு ரூ. 15,000

சந்தனக்கட்டை, சந்தனத் தைலம் இவற்றின் தேவை உலகெங்கும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. உற்பத்திக் குறைவு, தேவை மிகுதி என்ற நிலைமை காரணமாகக் கடந்த பத்தாண்டுகளில் இதன் விலை பெருமளவில் ஏறியிருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு சந்தனக் கட்டை டன் ஒன்றுக்கு விலை ரூ. 5,000 விருந்து ரூ. 6,000 வரை இருந்தது. இப்போது டன்னுக்கு ரூ. 14,000-விருந்து ரூ. 15,000 வரை விலை உள்ளது.

சந்தனத் தைலம் உலக மொத்த உற்பத்தியில் 99 சதவிகிதம் இந்தியாவில் கிடைப்பதாகும். ஆண்டுக்கு இதன் மூலம் சுமார் ரூ. 3 கோடி அந்நியச் செலாவணி வசதி கிடைக்கிறது. இந்த அரிய செல்வத்தைப் பெருக்க, வருமானத்தை அதிகரித்துக் கொள்ள, திட்டமிட்ட முறையில் செம்மையாகச் செயல்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

தமிழ்நாடு வனத்துறை, சந்தனமர விற்பனை விலை விவரம் வருமாறு:

ஆண்டு	டன் ஒன்றுக்கு
1910-11	ரூ. 405
1920-21	ரூ. 1,569
1955-56	ரூ. 4,781
1972-73	ரூ. 9,177
1973 ஜுலை	ரூ. 14,454

சந்தனத் தைலம் 1924-25-இல் கிலோ கிராம் விலை ரூ. 39 என்ற விகிதத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டது. 1961-62-இல் கிலோ கிராம் ஏற்றுமதி விலை ரூ. 210; 1971-இல் விலை ரூ. 221 ஆகும்.

சந்தன மரம் ஆங்கிலத்தில் ''சாண்டலம் ஆல்பம்'' என்ற தாவரக் குடும்ப வகையைச் சேர்ந்தது. அகில் என்பது சந்தனம் போன்ற நறுமணமுள்ள தாவரம். இந்துக்களும் பௌத்தர்களும், பார்சிகளும் சமயச் சடங்குகளிலும் கூடச் சந்தனக் கட்டையைப் பயன்படுத்துகிறார்கள். - சி. க. ரா

வாழ்க்கைக்கு
ஒரு பாடம்!
எறும்புகளும் நமக்கு அறிவு புகட்டுகின்றன!
சேமிப்புப் பழக்கமே
எதிர் காலத்திற்கு ஆக்கம் தரும்
சிறு சேமிப்புத் தரும் சிறப்பான திட்டங்களில் இரண்டு,
தொடர்வைப்புத் தொகைத் திட்டமும் (ரெகரிங் டெபாசிட் திட்டமும்)
வளரும் மாதச்சேமிப்புத் திட்டமும் ஆகும்.
மாதம் செலுத்தும் தொகை
5 ஆண்டு இறுதியில் கிடைப்பது
ரெகரிங் டிபாசிட்
ரூ. 5 ரூ. 355
ரூ. 10 ரூ. 710
வளரும் மாதச் சேமிப்பு
ரூ. 5 ரூ. 337.50
ரூ. 10 ரூ. 675.00
தற்போது. 1-7-72 முதல் இந்த இரு திட்டங்களுக்கும்
புதிய சலுகை வழங்குகிறது. சிறுசேமிப்பு நிறுவனம். இந்தத் தேதிக்குப் பின்னர் இந்தத் திட்டங்களின் கீழ், கணக்குத் துவக்குபவர்கள் எதிர்பாராத விதமாக மரணமடைய நேரிட்டால் 5 ஆண்டு இறுதியில் கிடைக்க வேண்டிய தொகை முழுவதும் உடனடியாக அவர்களது வாரிசுக்குக் கிடைக்கும்.
இந்த ஈட்டுறுதிச் சலுகையை வேறு எந்தச் சேமிப்புத் திட்டமும் அளிப்பதில்லை.
இன்றே ஒரு சிறுசேமிப்புக் கணக்கு துவங்குங்கள்.
- சிறுசேமிப்புத் துறை,
தமிழ்நாடு அரசு

சித்திரைக்கு ஏற்ற முத்தான சோளம்

தமிழ்நாடு வேளாண்மைத் துறை அண்மையில் 'கே. 4' என்னும் புதிய சோள இரகத்தை வெளியிட்டுள்ளது. இது அதிகத் தானியமும், தீவனமும் கொடுக்கக்கூடியது. சமீப காலத்தில் சாகுபடி செய்யப்பட்டுவரும் உயர் விளைச்சல் சோளரகங்கள் அதிகத் தானிய மகசூல் கொடுப்பவையாக இருந்தாலும் குட்டையாக வளரும் தன்மையுடையதாக இருப்பதால் கால்நடைகளுக்குப் போதிய தீவனத்தைக்கொடுப்பதில்லை என்பது உழவர்களுக்கு ஒரு குறையாகவே இருந்து வந்தது! இக்குறையைப் போக்கத் தமிழ்நாடு வேளாண்மைத் துறை எடுத்துக் கொண்ட முயற்சிகளினால் 'கே.4' சோளம் உருவாகியது. இது ஒரு சாதனையே என்றால் மிகையன்று!

தமிழ்நாட்டின் தெற்கு மாவட்டங்களாகிய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பாசனப் பயிராகச் சோளம் சுமார் 50,000 எக்டேர் பரப்பில் பயிராகிறது. பெரும்பாலான பரப்பளவு கோடையில் பயிராகிறது. இது, தைப் பட்டம் (ஜனவரி-பிப்ரவரி), சித்திரைப் பட்டம் (ஏப்ரல்) ஆகிய இரு பட்டங்களிலேயே பெரும்பாலும் பயிரிடப்படுகிறது. இப்பட்டங்களில் மிதமான மகசூல் கொடுக்கும் நாட்டு ரகமான வெள்ளைச் சோளமே பயிரிடப்பட்டு வந்தது. 'கே.2' என்ற புதிய சோளரகம் வெளிவந்த பிறகு, தென் மாவட்டங்களில் வெள்ளைச் சோளத்தின் பரப்புக் குறைந்தது. ஆனால் 'கே. 2' சோளத்தின் தட்டை கடினமாக இருப்பதால், தீவனத்தைக் கால்நடைகள் அவ்வளவாக விரும்பிச் சாப்பிடுவதில்லை! எனவே, சுவையான சாறு நிறைந்த தீவனம் கொடுக்கக்கூடிய புதிய சோளரகத்தை உருவாக்க வேண்டியதாயிற்று!

கோவை மாவட்டத்தில் நன்கு பயிராகும் 'கோ. 18' என்ற சுவையான தீவனம் தரக்கூடிய சோளத்தையும், 'கே.2' சோளத்தையும் ஒட்டுச் சேர்த்து, 'கே. 4' என்ற சோளம் உருவாக்கப்பட்டது. கே. 4 சோளரகம் அதிகத் தானிய மகசூலும் கொடுக்கக் கூடியது. சோளத்தைத் தானியமாகவும், தீவனமாகவும் பயிரிடும் தென் மாவட்ட உழவர்களுக்கு, இது ஒரு வரப்பிரசாதம் என்றே கூறலாம்.

சிறப்புக் குணம்

கே. 4 சோளம் 2 மீட்டர் உயரம் வளரக்கூடியது.

85 முதல் 90 நாளில் முதிர்ந்து அறுவடைக்கு வரக் கூடியது.

இதன் மணிகள் வெண் முத்துக்கள் போன்ற நிறமுடையவை.

இதன் மணிகளைச் சோளக் கதிரிலிருந்து சுலபமாகப் பிரித்தெடுக்கலாம்.

இதன் தட்டைகள் சாறு நிறைந்தும், சுவையுடனும் இருப்பதால் பச்சையாகவே வெட்டித் தீவனமாக அளித்தால் கால் நடைகள் விரும்பித் தின்கின்றன.

கே. 4 சோளரகத்தை உரிய பட்டத்தில் முறைப்படி பயிரிட்டால் எக்டேருக்கு 30 முதல் 50 குவிண்டால் தானிய மகசூல் கிடைக்கும்.

எக்டேருக்கு 100 முதல் 120 குவிண்டால் கால்நடைத் தீவனமும் கிடைக்கும்.

கே. 4 சோளம், கே. 2 சோளரகத்தைவிட 10 முதல் 15 சதம் அதிக அளவு தானியமும், தீவனமும் கொடுக்கிறது.

வறட்சியைத் தாங்கும் குணம் இதன் சிறப்புத்தன்மையாகும். எனவே தண்ணீர்த் தட்டுப்பாடு இருக்கும் கோடை காலத்தில் பயிரிட இது ஏற்றதாகும்.

சாகுபடிக் குறிப்புகள்

கே. 4. சோளரகத்தை ஜனவரி-பிப்ரவரி (தை), மற்றும் ஏப்ரல் (சித்திரை) மாதங்களில் பயிரிடலாம்.

எக்கேடருக்கு 10 கிலோ விதை போதுமானது. அதாவது ஒரு எக்டேரில் ஒரு இலட்சத்து 45 ஆயிரம் பயிர்கள் இருக்க வேண்டும். தேவையானால் எக்டேருக்கு 15 கிலோ வரை விதையளவை அதிகரித்துக் கொள்ளலாம். பாத்திகளில் பயிரிடுவதைவிட, பார்களில் பயிரிடுவது நீர்ப்பாசனத்தையும் சிக்கனப்படுத்துகிறது. பாருக்குப் பார் 45 சென்டிமீட்டரும், செடிக்குச் செடி 12 சென்டிமீட்டரும் இடைவெளி தேவை.

உரமிடுவதற்கு ஏற்பச்சோள மகசூலும் அதிகரிக்கும்! எனவே, எக்டேருக்கு அடியுரமாக 25 டன்கள் கம்போஸ்ட் அல்லது தொழு உரம் இட்டு, 60 கிலோ தழைச்சத்து, 30 கிலோ மணிச்சத்து, 30 கிலோ சாம்பல் சத்து ஆகிய சத்துக்களை இடவேண்டும்.

கே. 4 சோளரகம் பூச்சி, பூஞ்சாளங்களால் அதிகமாகத் தாக்கப்படுவதில்லை. எனவே, கட்டுக்கோப்புச் சாகுபடி முறைகள் அனைத்தையும் சரிவர மேற்கொண்டால், கே. 4 சோளம், வயலில் பொன் கொழிக்கச் செய்யும் என்பதில் ஐயமில்லை!

கேளுங்கள் கொடுக்கப்படும்!



வினா : அம்பிகை வேலன் என்னும் பெயருடைய நான், இடது கால் ஊனமுள்ளவன். அத்துடன் என் இடது கண்ணும், சற்று பலவீனமடைந்த பார்வையுடையது. இருப்பினும் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். மேலும், படிக்க எனக்கு ஆர்வமிருந்தும் போதிய வசதியில்லை. எனது தாயையும், எனக்கு உதவியாயிருந்த என் தம்பியையும், இயற்கை, என்னை விட்டுப் பிரித்துத் தன்னகத்தே இழுத்துக்கொண்டுவிட்டது. என் தந்தை இருந்தும் இல்லாதவராய், எங்கோ சென்றுவிட்டார். எனவே, நான் தற்போது ஓர் அனாதை. வாழ்வதற்கோர் வழி என்னவென்று நெஞ்சம் நெகிழ்ந்து நினைவு தெளிவின்றி அனுதினமும், வருந்திய நிலையில் வாழும் எனக்கு, ஊனமுற்ற என் வாழ்வு மலர வகை செய்வதற்குரிய விவரங்களை அறிவிக்குமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

—ந. அம்பிகைவேலன்,
தவர்த்தாம்பட்டு,
பூலாமேடு அஞ்சல்,
சிதம்பரம் வட்டம்,
தென் ஆர்க்காடு மாவட்டம்.

வினா : நான் 4-ஆம் வகுப்புப் படித்துள்ளேன். கரும்பு ஆலை ஆடும்பொழுதுகிரஷரில் இடது கை மாட்டிக் கொண்டு கை விரல்கள் 5-ல், 4 அறுந்து விட்டன. தற்பொழுது இருப்பது பெருவிரல் ஒன்றுதான். நான் நன்முக உழைக்கக்கூடியவன். என் உடல் ஊனமுற்றதால் என் தாய் தந்தையரைக் காப்பாற்ற ஏதாவது வழி கூறுங்கள்.

—சி. விநாயகம்,
த./பெ.சின்னசாமி முதலியார்,
சமாரிசி குப்பம்,
மேல்பட்டி அஞ்சல்-635805

விடை : திரு. ந. அம்பிகைவேலன், திரு. சி. விநாயகம் போன்று ஊனமுற்றவர்கள் பலர், தங்கள் பிழைப்புக்கு வழி கூறும்படி கேட்டுள்ளார்கள்! எனவே அவர்கள் அனைவருக்கும் சேர்த்துப் பின்கண்ட நல்ல செய்தியைத் தெரிவிக்கின்ருேம்.

'ஏன் எடுத்தோம் இந்த ஜென்மம்?' என்று மனம் நொந்து வாழும் ஆதரவற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காகவே, பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், இலவச கண்ணொளித் திட்டம், இலவச சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களைக் கொண்டு வந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், உடல் ஊனமுற்று வாழ வழியின்றி வாடிடும் மக்களின் வாழ்வை வளப்படுத்துவதற்கான திட்டத்தை விரைவில் துவக்கிடப் போவதாகக் கடந்த மாதம் அறிவித்துள்ளார். மேலும் அவர், ஊனமுற்றவர்கள் எவ்வளவு பேர் இருக்கிருர்கள்? அவர்கள் எங்கெங்கு உள்ளார்கள்? எவ்வகையில் ஊனம் அடைந்துள்ளனர்? என்பன போன்ற பல்வேறு விவரங்களைச் சேகரிக்கும்படியும் சமுதாய நலத்துறையினரிடம் கேட்டுக் கொண்டுள்ளார். இதற்கேற்ப ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஊனமுற்றவர்கள் பற்றிய விவரங்களைச் சேகரிக்கும்படி, மாவட்ட ஆட்சித் தலைவர்களைத் தமிழ்நாடு அரசின் சமுதாய நலத்துறை கேட்டுக் கொண்டுள்ளது. அதன்படி தற்பொழுது செங்கற்பட்டு மாவட்டத்தின் ஊராட்சி ஒன்றிய அலுவலங்களில் இத்தகைய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இதே போல் எல்லா மாவட்டங்களிலும் விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இவ்வாறு புள்ளி விவரம் எடுக்கும் பணியில் பலர் ஈடுபட்டுள்ளனர். எனவே, ஊனமுற்றவர்கள் அனைவரும் தங்கள் பெயர் விடுபடாமலிருக்கும் பொருட்டுத் தங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு நேரில் சென்று, அல்லது கடிதம் எழுதி, ஊனமுற்ருேர் பட்டியலில் தங்களைச் சேர்த்துக் கொள்ளுதல் சிறந்தது. (இதைப் படிக்கின்றவர்கள் தங்களுக்குத் தெரிந்த ஊனமுற்ருேர் யாரேனும் இருப்பின் அவர்களுக்கு இது பற்றி எடுத்துக் கூறி, ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு தூண்டுதல் நல்லதோர் சமுதாய சேவையாக அமையும்.)

விரிவான புள்ளி விவரங்கள் கிடைத்த பிறகு யார் யாருக்கு எப்படிப்பட்ட பயிற்சி அளிக்கலாம் என்பது பற்றிய திட்டம் தீட்டி, ஊனமுற்றவர்கள் அனைவருக்கும் மறுவாழ்வு அளிக்க, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் விரைவில் ஆவன செய்யவிருக்கிருர் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக் கொள்கின்ருேம். விரைவில் உங்களுக்கு வாழவழி கிடைக்கும் என்பது திண்ணம்.

வினா : நாங்கள் வசதியற்ற குடும்பத்தில் பிறந்து கஷ்டப்படுகிருேம். நான் 8-ஆம் வகுப்பு வரைதான் படிக்க முடிந்தது. எனது தம்பிகளையாகிலும் படிக்க வைக்க மிக மிக ஆவலாய் உள்ளேன். ஆனுல் வசதி இல்லை. எனவே இலவச விடுதியுள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் சேர்த்து விட முடிவு செய்திருக்கிறேன். ஆனுல் எங்கு உள்ளது என்பதை அறிய முடியவில்லை. ஆதலால், கோவை மாவட்டத்தில் எங்கு அதுபோன்ற இலவச நிறுவனம் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன். விவரம் கூறவும்.

—கே. ஏ. நடராசன்,
13, பாவடித் தெரு,
சலங்கப்பாளையம் அஞ்சல்,
பவானி வட்டம்,
கோவை மாவட்டம்.

விடை : இன்றையத் தமிழ்நாடு அரசு கோயில் வருமா

னத்திலிருந்து இலவசப் பள்ளிக் கூடங்களையும் இலவச உணவு விடுதிகளையும் நடத்தி வருகிறது என்பது குறிப்பிடத் தகுந்ததாகும். கோவை மாவட்டத்தில் உள்ள மருதமலை முருகன் கோயில் நிதியிலிருந்து ஒரு உயர்நிலைப் பள்ளியும், வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் நிதியிலிருந்து ஒரு உயர்நிலைப் பள்ளியும் நடந்து வருகிறது. வாழைத் தோட்டத்து அய்யன் கோயிலில் (அய்யம்பாளையம், மங்கலம் அஞ்சல், பல்லடம் வட்டம், கோவை மாவட்டம்) தாய் தந்தையற்ற 30 திக்கற்ற மாணவர்களுக்குக் கல்வி அளிக்கப்பட்டு வருவதுடன், உணவு, உடை, உறைவிடம் ஆகிய அடிப்படைத் தேவைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. உங்களுக்கு உண்மையிலேயே வருவாய் ஏதும் இல்லையெனில், உங்கள் அப்பா அம்மா இல்லையெனில் உங்கள் தம்பிகளை அங்குச் சேர்த்துக் கொள்வார்கள். முயற்சித்துப் பார்க்கவும்.

வினா : இராமநாதபுரம் மாவட்டம் மம்சாபுரம் கிராமத்தைச் சேர்ந்த நான் என்னுடைய பழைய வீட்டைப் புதுப்பிக்க நினைக்கிறேன். அதற்குத் தமிழரசு பத்திரிகையில் (1-2-1974) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் லிமிடெட், நெ. எக்ஸ். 406-ன் விளம்பரத்தைப் பார்த்தேன். நான் வீடு கட்ட வீடு கட்டும் சங்கத்திலா, கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திலா, பிரதம வீடு அடமான சங்கத்திலா இதில் எந்தச் சங்கத்தில் சேர வேண்டும்? எங்களது ஸ்ரீவில்லிப்புத்தூர் பிரிவில் நான் இது குறித்து யாரை அணுக வேண்டும்? எனது நிலம் மிக மோசமான நிலையிலும், கிணறு மேடாகவும் உள்ளது. பசுமைப் புரட்சியில் ஆர்வம் உள்ள நான், பண வசதி இல்லாத காரணத்தினால் நன்றாக விளையக்கூடிய இடத்தில் ஒன்றுக்குப் பாதியாகவே மகசூல் பெறுகிறேன். இந்நிலத்தில் உள்ள பள்ளங்களை திருத்திச் சமப்படுத்தி நல்ல நிலைக்குக் கொண்டு வர அரசு கடன் கொடுக்குமா? அப்படிக் கொடுத்தால் நான் யாரை அணுகவேண்டும்?

—பி. ஜெயராம்,
மம்சாபுரம்,
இராமநாதபுரம் மாவட்டம்

விடை : தாங்கள் கடன் பெற்று வீடுகட்ட விரும்பினால், தாங்கள், கிராமக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்திலோ அல்லது வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கத்திலோ அல்லது பிரதம வீடு அடமான சங்கத்திலோ உறுப்பினராக இருக்கவேண்டும். உங்கள் ஊரில் இத்தகைய சங்கங்கள் ஏதேனும் இருப்பின், உடன் உறுப்பினராக முயற்சி செய்யுங்கள். அப்படிப்பட்ட சங்கங்கள் உங்கள் ஊரில் இல்லையெனில் பலர் சேர்ந்து உங்கள் ஊரிலேயே, வீடுகட்டும் கூட்டுறவுச் சங்கம் ஒன்றைத் துவக்கலாம். அது முடியாவிட்டால், அருகில் உள்ள சங்கத்தில் உறுப்பினராகலாம். இது குறித்து விவரம் அறிய உங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கூட்டுறவு வளர்ச்சி அலுவலரைக் கலந்தாலோசிப்பது நல்லது.

தற்பொழுது நிலச் சீர்திருத்தம் செய்யஅரசே நேரடியாகக் கடன் கொடுப்பதில்லை. இப்பணியை நிலவள வங்கிகள் செய்கின்றன. மேடுபள்ளம் திருத்த, நிலவள வங்கிகளில் கடன் பெற இயலும். எனவே இது பற்றி உங்கள் அருகாமையில் உள்ள நிலவள வங்கியில் விசாரிக்கலாம். உங்கள் ஊராட்சி ஒன்றியக் கூட்டுறவு வளர்ச்சி அலுவலரிடமே இது பற்றியும் கேட்டு அறியலாம்.

வினா : நான் ஒரு ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவன். பள்ளி இறுதி வகுப்புத் தேர்வு வரை படித்திருக்கின்றேன். நான் 'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' தேர்வு எழுத விரும்புகின்றேன் அதற்காகத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரியைத் தெரிவிக்கும்படி மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

—பி. மருதவாணன்,
காவனூர்,
விருத்தாசலம் வட்டம்,
தென்ஆர்க்காடு மாவட்டம்.

விடை : 'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' தேர்வு எழுத எஸ். எஸ். எல். சி. தேர்வில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். தமிழிலும், ஆங்கிலத்திலும் 40 சதம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். வயதும் 26-க்குள் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் தாங்கள் அத்தேர்வு எழுத முடியும். இத்தேர்வு பற்றி அரசிதழிலும், நாளேடுகளிலும் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. இத்தேர்வு ஆண்டுதோறும் நவம்பர் அல்லது டிசம்பர் மாதங்களில் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறுகிறது. இதுபற்றிய முழு விவரம் அறியப் பின்கண்ட முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும் :

''செயலாளர்,
தமிழ் நாடு அரசுப்
பணியாளர் தேர்வு
ஆணைக்குழு,
அரசினர் தோட்டம்,
சென்னை—600002.

வினா : மிகக் குறுகிய காலத்தில் உயர் விளைச்சல் தரக் கூடிய ஆமணக்கு இரகம் யாது? அதன் வயது, மகசூல், எண்ணெய்ச் சதவீதம், கட்டுக் கோப்பு, சாகுபடி முறைகள் ஆகியவைகளை விளக்கவும்.

—பாலு, பி.ஏ.
மாயூரம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

விடை : 'எஸ். ஏ. 2' என்ற ஆமணக்கு இரகம் மிகக் குறுகிய காலத்தில் விளைச்சல் தரக் கூடியதாகும்! இந்த இரகம் 95 முதல் 100 நாட்களில் அறுவடைக்கு வந்துவிடுகிறது! 'எஸ். ஏ. 2' இரகத்தைத் தனிப் பயிராகச் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 400 முதல் 500 கிலோ மகசூலும், கலப்புப் பயிராகச் சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 200 முதல் 250 கிலோ மகசூலும் கிடைக்கும். இந்த இரகத்தில் 52.6 சதம் எண்ணெய்ச் சத்து உள்ளது. இந்த இரகச் செடி குட்டையாக இருந்தாலும், ஒவ்வொரு செடியிலும் குறைந்தது 6 முதல் 8 குலைகள் இருக்கும்!

'எஸ். ஏ. 2' ஆமணக்கு இரகத்தை ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் இறைவையாக நன்செய்த்தரிசு நிலங்களிலும், ஜூன், ஜூலை மாதங்களில் மானாவாரியாகவும் பயிரிடலாம். இந்த இரக ஆமணக்கைத் தனிப் பயிராகச் சாகுபடி செய்ய நிலத்தை நன்கு உழுது, ஏக்கருக்கு 5 வண்டி தொழு எரு, 12 கிலோ தழைச் சத்து, 6 கிலோ மணிச்சத்து, 6 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளை அடியுரமாக இடவேண்டும். மேற்கண்ட சத்துக்களை அளிக்க 100 கிலோ 12 : 6: 6 கலப்பு உரத்தை அடியுரமாக இடலாம். தனிப் பயிராக விதைக்க ஏக்கருக்கு 4 கிலோ விதையும், கலப்புப் பயிராக விதைக்க ஏக்கருக்கு 2 கிலோ விதையும் தேவை.

தனிப பயிருககு சாலுககு சால் 2 அடியும், சாலில் விதைக்கு விதை 1.5 அடியும் இடைவெளிவிட்டு விதைக்க வேண்டும். நிலக்கடலையுடன் கலப்புப் பயிராகச் சாகுபடி செய்ய 6 அடிக்கு ஒரு சால் விட்டு, சாலில் விதைக்கு விதை 1 அடி இடைவெளி விட்டு விதைக்க வேண்டும். விதைத்த 20 முதல் 25 நாட்களில் முதல் களையும், பிறகு 15 முதல் 20 நாட்களில் இரண்டாவது களையும் எடுக்க வேண்டும். இந்த ஆமணக்குச் செடிகளைத் தாக்கும் காவடிப் புழு, இலைப் புழு, காய்ப் புழு, தத்துப் புழு ஆகியவைகளைத் தடுக்கப் 'பாரத்தியான்' 0.05 சதம் (100 மில்லிலிட்டர் 'பாரத்தியான்' மருந்தை, 100 லிட்டர் தண்ணீரில் கலந்து.) தெளிக்க வேண்டும்.

நெல் அறுவடையான பிறகு, நிலத்தில் உள்ள ஈரத்திலேயே 'எஸ். ஏ. 2' ஆமணக்கு இரக விதைகளை வரிசை வரிசையாக ஊன்றினால், வயலில் மிஞ்சியுள்ள ஈரத்தைக் கொண்டே விதைகள் முளைத்துச் செடிகள் வளரத் தொடங்கி விடும். உழுதல், உரமிடுதல் போன்றவை தேவையில்லை! தண்ணீர் வசதி இருக்குமானால் 2 அல்லது 3 தடவை பாசனம் செய்யலாம். இதன் மூலமும் ஓரளவு கணிசமான வருவாய் பெற வாய்ப்பு உள்ளது. எனவே, இயன்ற வகையில் 'எஸ். ஏ. 2' ஆமணக்கு பயிரிட்டுப் பயன் பெறுங்கள்.

வினா : நான் ஒரு இளம் விவசாயி. வருகிற ஏப்ரல் மாதத்தில் வீரிய மக்காச் சோளம் பயிரிட விரும்புகின்றேன். எந்த இரகத்தைப் பயிரிடலாம்? சாகுபடி முறைகள் என்ன? இதற்குரிய பதிலை 1-4-1974 தேதிய 'தமிழரசு' இதழில் கண்டிப்பாக வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். ஏனெனில், உங்கள் பதிலைப் பார்த்தே நான் சாகுபடி செய்யவிருக்கின்றேன். எனவே, தவறாமல் 1-4-1974 தேதிய 'தமிழரசு' இதழில் விடையளிக்க வேண்டுகின்றேன்.

—எல். ரெங்கசாமி,
மேட்டுப்பாளையம்,
கோவை மாவட்டம்.

விடை : தண்ணீர் வசதி இருக்குமானால், வீரிய மக்காச் சோளத்தை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். ஆனால் மார்ச்சு-ஏப்ரல் மாத விதைப்பும், ஜூலை-ஆகஸ்ட் மாத விதைப்பும் அதிக மகசூல் தரும் ! தாங்கள், 'கங்கா-5' என்ற மக்காச் சோள இரகத்தையோ அல்லது 'டெக்கான்' எனப்படும் தக்காண மக்காச் சோளத்தையோ ஏப்ரல் மாதத்தில் பயிரிடலாம். இந்த இரகங்களின் வயது 100 நாட்களே!

ஒரு ஏக்கர் மக்காச் சோளம் பயிரிட 8 கிலோ விதையை விதைக்க வேண்டும். மக்காச் சோளம் பயிரிடுவதற்கு நிலத்தை இரும்புக் கலப்பையால் 3 முறை நன்கு உழுது, பிறகு ஏக்கருக்கு 20 வண்டி தொழு எருவையும், 20 கிலோ துத்தநாக சல்பேட்டையும் இட்டு 4-வது முறை உழுது, தொழு எருவை மண்ணுடன் நன்கு கலக்கும்படி செய்ய வேண்டும். பிறகு நிலத்தில் 2 அடிக்கு ஒரு பார் வீதம், பார்க் கலப்பையால் பார் அமைத்துக் கொள்ள வேண்டும். ஏக்கருக்கு 18 கிலோ தழைச்சத்து, 27 கிலோ மணிச்சத்து, 18 கிலோ சாம்பல் சத்து ஆகியவைகளைக் கொடுக்கக்கூடிய இரசாயன உரங்களை அடியுரமாக இடவேண்டும். பார்களின் ஒரு பக்கச் சரிவில் விதை ஊன்றும் இடத்திற்கு 2 அங்குலம் தள்ளி, கூரிய குச்சியில் 1.5 அங்குல ஆழக் கோடு இழுத்து, அக் கோட்டின் பள்ளத்தில் இரசாயன உரங்களை இடவேண்டும். மேற்கூறிய அளவுச் சத்துக்களை அளிக்க ஏக்கருக்கு 300 கிலோ 6 : 9: 6 கலப்பு உரத்தை இடலாம். அல்லது 130 கிலோ 14 : 14 : 14 'காம்ப்ளெக்ஸ்' உரத்துடன் 56 கிலோ 'சூப்பர் பாஸ்பேட்' உரத்தைச் சேர்த்து இடலாம். அல்லது 120 கிலோ 15 :15:15 'காம்ப்ளெக்ஸ்' உரத்துடன் 56 கிலோ 'சூப்பர் பாஸ்பேட்' உரத்தை இடலாம். அல்லது 90 கிலோ 'அமோனியம் சல்பேட்' (40 கிலோ யூரியா), 190 கிலோ 'சூப்பர்பாஸ்பேட்' 30 கிலோ 'மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்' ஆகியவற்றை இடலாம்.

பாரின் ஒரு பக்கச் சரிவில் உரமிட்ட வரிசைக்கு 2 அங்குல உயரத்தில் விதைகளை 10 அங்குலத்திற்கு ஒன்றாக வரிசையில் ஊன்றவும். விதை ஊன்றிய உடன் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். மூன்றாவது நாள் உயிர் நீர் விடவேண்டும். பிறகு 10 முதல் 15 நாட்கள் இடைவெளியில் — தேவைக்கேற்பத் தண்ணீர் பாய்ச்சி வர வேண்டும்.

விதைத்த 21 நாட்களில் களை எடுக்கவும். விதைத்த 25-வது நாள் ஏக்கருக்கு 80 கிலோ யூரியா அல்லது 180 கிலோ அமோனியம் சல்பேட் உரத்தை மேலுரமாக இட வேண்டும். மேலுரமாக இட இரசாயன உரத்தைப் பயிர் வரிசையிலிருந்து 10 அங்குல தூரத்தில் வரிசையாக உரத்தை இட்டு, மண்ணால் மூடி, உடன் தண்ணீர் விட வேண்டும்.

தண்டுத் துளைப்பானின் தாக்குதலைத் தடுக்க விதைத்த 30-வது நாளிலும், 45-வது நாளிலும் ஏக்கருக்கு 4 கிலோ 'செவிடால்' அல்லது 'என்ட்ரின்' குருணைகளைக் குருத்து இலைகளின் இடுக்குகளில் இட வேண்டும்.

மக்காச் சோளத்தில் தோன்றும் கதிர்ப் புழுக்களைத் தடுக்க விதைத்த 60-வது நாளிலும், 75-வது நாளிலும் 'கார்பரைல் 50 சத மருந்தில் 480கிராமை 240 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிப்பது சிறந்தது.

மக்காச் சோளத்தில் இலைப் புள்ளி நோய் காணப்பட்டால் விதைத்த 45-வது நாளில் இருந்து 20 நாட்களுக்கு ஒரு முறை வீதம் 3 முறை 'டைத்தேன்' ஏ. எம். 45' என்ற மருந்தில் 800 கிராமை 400 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்.

கதிரைச் சுற்றியுள்ள இலை

களில் பசுமை நிறம் மாறி, பழுப்பு நிறம் தோன்றிக் காய்ந்த பிறகு, கதிர்களை அறுவடை செய்துவிட வேண்டும்.

மேற்கூறிய முறையில் சாகுபடி செய்தால் ஏக்கருக்குக் குறைந்தது 3,000 கிலோ தானியமும், 15 முதல் 20 டன் தீவனத் தட்டையும் கிடைக்கும். எனவே, இவ்வகையில் மக்காச் சோளம் பயிரிட்டுப் பயன் அடையுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றோம்.

வினா : 'தமிழரசு' ஜூலை 1, 1973 இதழில் 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியில், கோவை மாவட்ட அன்பர் ஒருவரின் கேள்விக்கு அளித்துள்ள பதிலில் மூன்றும் போகத்தில் கோதுமை பயிரிடலாம் என்று குறிப்பிட்டுள்ளீர்கள். ஆகையால் நான் (தென் ஆர்க்காடு மாவட்டம், கடலூர் வட்டம்) கோதுமை பயிரிட விரும்புகின்றேன். எனவே, எந்த இரகக் கோதுமை பயிரிடலாம்? விதை, வயது, தட்ப வெப்ப நிலை சரியாக இருக்குமா? எப்பொழுது பயிரிட வேண்டும் என்ற விவரங்களைத் தெரிவித்தால், கோதுமை உற்பத்தி செய்து நாட்டின் தேவைக்கு என் பங்கைச் செய்தவனாவேன். மேலும் என் தந்தை சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதால், கோதுமை தேவைப்படுகிறது. உடன் விவரம் வேண்டுகின்றேன்.

—ந. கணேசன்,
தூக்கணாம்பாக்கம் அஞ்சல்,
(வழி) பாகூர்,
தென் ஆர்க்காடு மாவட்டம்

விடை : கோவை மாவட்டத்திலிருந்து ஒருவர் கேட்ட கேள்விக்கு மூன்றும் போகத்தில் கோதுமை பயிரிடலாம் என்று கூறப்பட்டது. அப்பதில், தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு முழு அளவில் பொருந்துவதாக இருக்காது! ஏனெனில், தட்ப-வெப்ப நிலையில் தென்னார்க்காடு மாவட்டத்திற்கும், கோவை மாவட்டத்திற்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது.

தென்னார்க்காடு மாவட்டத்தில் கோதுமை பயிரிடுவது இலாபகரமாக இருக்கும் என்று சொல்லுவதற்கு ஆதாரங்கள் இல்லை! உங்களுக்கு ஆர்வம் இருப்பின், ஐப்பசி மாதத்தில் 'ஷர்பதி சோனரா', 'சபேத் லர்மா', 'கல்யாண் சோனா' என்ற சமவெளிக்கு ஏற்ற



கோதுமை இரகங்களை ஒரு சென்ட் பரப்பில் பயிரிட்டுப் பார்க்கலாம். இந்த இரகங்கள் முறையே 85, 100, 95 நாட்கள் வயதுடையவையாகும். இந்த இரக விதைகளை 'தேசிய விதைக் கார்ப்பரேஷன், கோயம்புத்தூர்-9'' என்ற முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். ஒரு சென்ட் நிலப்பரப்பை நன்கு உழுது, கடைசி உழவில் 200 கிலோ தொழு எருவையும், 1 கிலோ 15 : 15 : 15 'காம்ப்ளெக்ஸ்' உரம், 550 கிராம் 'சூப்பர் பாஸ்பேட்', 150 கிராம் 'மியூரியேட் ஆஃப் பொட்டாஷ்' ஆகியவைகளை இட வேண்டும். பிறகு ஒரு சென்ட் பரப்பையும் பாத்திகளாகப் பிடித்துக் கொள்ளவும். பாத்திகளில் நவம்பர் முதல் வாரத்தில் விதைக்கலாம். ஒரு சென்ட் விதைக்க 600 கிராம் விதை தேவை. பாத்திகளில் 6 அங்குல இடைவெளிகளில் கோடு கிழித்துக் கொண்டு, அக்கோட்டில் விதைகளை நெருக்கமாகவும் 1.5 அங்குல ஆழத்திலும் விதைத்து மண்ணால் மூடவேண்டும். உடன் தண்ணீர் பாய்ச்சவும். பிறகு 4-ஆம் நாள் தண்ணீர் விடவும். அதன்பின் 7 முதல் 10 நாள் இடைவெளியில் தண்ணீர் பாய்ச்சவும். விதைத்த 22-வது, 35-வது நாட்களில் களை எடுக்க வேண்டும். கோதுமையில் பயிர்க் கலப்பு செய்யக்கூடாது. பொதுவாகக் கோதுமையில் பூச்சிகள் அதிகம் தாக்குவதில்லை.

பூச்சிகள் தோன்றினால் உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடம் கூறி, தகுந்த மருந்தைத் தெரிந்து தெளிக்கவும்.

கதிர்களை மட்டும் அறுவடை செய்து, மாடு கட்டி அடித்துத் தானியத்தைப் பிரிக்கலாம். கோதுமை வைக்கோலை மாடுகள் விரும்பித் தின்னும்.

மேற்கூறிய முறையில் ஒரு சென்ட் பரப்பில் பரிசோதனையாகக் கோதுமையைப் பயிரிட்டுப் பார்த்து, அது பயன் தருவதாக இருந்தால், பிறகு பெரும் பரப்பில் கோதுமை பயிரிடுவதே சிறந்தது!

வினா : பயிர்களுக்கு அடியுரமாகப் பன்றியின் சாணத்தை உபயோகித்தால் 'லெப்பர்சி' என்ற குட்ட நோய் வரும் என்று மக்களிடையே ஓர் எண்ணம் உள்ளது. இது உண்மையா?

—எஸ். அம்பிகாபதி,
செலமாநத்தம் கிராமம்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

விடை : பன்றியின் சாணத்தை அடியுரமாக உபயோகிப்பதால் தொழு நோய் வரும் என்பதற்கு அறிவியல் அடிப்படையான ஆதாரம் கிடையாது! நெடுங்காலமாகவே தொடர்ந்து சில உழவர் பெருமக்கள் பன்றி எருவை அடியுரமாக இட்டு வருகின்றனர். அவர்களுக்கு எல்லாம் தொழு நோய் வரவில்லை! எனவே, இக் கருத்து ஒரு வீண் புரளியே யாகும்!

பன்றி எரு உண்மையிலேயே சத்துள்ள எருவாகும். பன்றி எருவில் (காய்ந்த நிலையில்) 3.70 சதம் தழைச் சத்து, 3.30 சதம் மணிச் சத்து, 0.40 சதம் சாம்பல் சத்து ஆகியவை உள்ளன. பன்றிச் சாணத்தைக் காய வைக்காமல் உடன் வயலில் இடக் கூடாது. அவ்வாறு இட்டால் பயிர்கள் கருகக் கூடும்! ஏனெனில், பன்றிச் சாணம் மக்கும்போது மிகுந்த வெப்பம் ஏற்படும்! அந்த வெப்பம் இளம் பயிர்களைக் கருகச் செய்யும். எனவே, பன்றிச் சாணத்தைக் காய வைத்து, நன்கு மக்கிய பிறகு வயலில் இடுவதே சிறந்தது.

வினா : விக்கிரவாண்டிப் பஞ்சாயத்து யூனியனுக்கு அரசாங்கக் கோழிப் பண்ணை எங்கு உள்ளது? அந்த வட்டத்தில் கோழிப் பண்ணை வைக்க எங்கு கடன் உதவி பெறுவது? இதற்கு யாரை அணுகவேண்டும்?

—வி. தங்கவேல்,
அமைப்பாளர்,
உழவர் விவாதக் குழு,
ரெட்டிக்குப்பம்,
விக்ரவாண்டி அஞ்சல்,
தென் ஆர்க்காடு மாவட்டம்

விடை : ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் தனியே அரசாங்கக் கோழிப் பண்ணை இல்லை! தாங்கள், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையில் இருந்தே கோழிக் குஞ்சுகளை வாங்க வேண்டும். கடனுதவி பெற நாட்டுடைமையாக்கப் பட்ட வணிக வங்கிகளின் உதவியை நாடுங்கள். அல்லது உங்கள் ஊரில் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவின் கிளை இருந்தால், முயற்சித்துப் பாருங்கள். கோழிப் பண்ணை அமைக்கவும், கடன் உதவி பெறவும் உங்கள் ஊராட்சி ஒன்றியக் கால்நடை வளர்ச்சி அலுவலர் அவர்களையோ அல்லது கால் நடை உதவி மருத்துவர் அவர்களையோ கலந்தாலோசியுங்கள்.

வினா : தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டு நடத்துவதினால் கிடைத்த வருமானம் என்ன? நன்மைகள் யாவை?

—கே. மோகன்,
தண்டையார்ப்பேட்டை,
சென்னை.

விடை : 1974-ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் முடிய பரிசுச் சீட்டு விற்பனை மூலம் 34 கோடி ரூபாய் மொத்த வருவாய் கிடைத்துள்ளது. இதில், செலவு, பரிசுத் தொகைகள் ஆகியவை போக 18 கோடியே 85 இலட்சத்து 56 ஆயிரத்து 400 ரூபாய் நிகர இலாபம் தமிழ் நாடு அரசுக்குக் கிடைத்துள்ளது! இந்த நிகர இலாபத்தில் இருந்து பின் கண்டவாறு முக்கியப் பணிகளுக்கு செலவிடப்பட்டுள்ளது.

தேசியப் பாதுகாப்பு நிதிக்கு 2 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

பிச்சைக்காரர் மறுவாழ்வுக்காக 43 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

சிறப்பு நலநிதித் திட்டங்களின் கீழ் 5.3 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

மற்றும் கிராமப் புறச் சீர் அமைப்புக்கும் செலவிடப்பட்டுள்ளது.

எனவே, தமிழ் நாடு அரசு பரிசுச் சீட்டு நடத்துவதனால் பல இலட்சாதிபதிகள் உருவாகியுள்ளதுடன், மேற்கூறிய நன்மைகளும் ஏற்பட்டுள்ளன.

—ஆர். எம்.

ESTD: 21-3-52. **தபால் மூலம்** GOVT REGD: 3072.

இலவசக் கல்வி போதனை

'C' குரூப் வகுப்புகள் ஆரம்பம் : 17—4—1974.

ஆண்—பெண் இருபாலரும் 1974-75ம் வருட சர்க்கார்—பல்கலைக் கழகத் தேர்வுகளில் தேர்ச்சி பெற உத்திரவாதத்துடன் மாதம் இருமுறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பிப் பயிற்சியளிக்கப்படும்.

1. S.V.B.A., B.Com., B.Sc.—March 1975 (P.U.C./இண்டர் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 2. B.L., M.A., M.Com., A.M.I.B.M. (பட்டதாரிகள் அருகதையுடையவர்கள்.) 3. ஆக்ரா-டில்லி: கர்நாடக் B.A., B.Com., B.Sc., (S.S.L.C., (அ) S.S.C., (ஆ) மெட்ரிக் தேறியவர்கள் கலந்து கொள்ளலாம்.) 4. போபல் - டெல்லி, ஆந்திரா - கர்னாடக் இண்டர் (S.S.L.C. / S.S.C. மெட்ரிக் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 5. A.C.B.I. (London) S.S.L.C. கர்னாடக் மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள். 6. Account Text Exmns. I.M.C. (S.S.L.C./I.M.C. S.S.C. மெட்ரிக் தேறியவர்கள் தகுதியுடையவர்கள்.) 7. டெலிபோன் ஆப்ரேட்டர்—டெலிகிராபிக் ஒயர்லெஸ். 8. சென்னை—மதுரை—திருப்பதி மெட்ரிகுலேஷன். 9. சென்னை—மதுரை P.U.C. 10. தமிழ் வித்துவான்—புலவர் தேர்வுகள். 11. விவசாயம். 12. போஸ்ட்மேன். 13. போஸ்டல் கிளார்க். 14. கைத்தறி நெசவு. 15. அக்கவுண்டன்ஸி. 16. கிராம மணியம்—கர்ணம். 17. சர்வீஸ் கமிஷன் (தமிழ் அண்ட் ஆங்கிலம் அக்-74.) 18. S.S.L.C. (8-ஆம் வகுப்பும் அதற்கு மேலும் படித்தவர்கள் தகுதியுடையவர்கள்.) 19. Com. INTER, D.Com., B.Com., B.Com. (Hons) M.Com., S.S.L.C. அல்லது P.U.C. தேறியவர்களும்—தவறியவர்களும் 75-பிப்ரவரி தேர்வில் கலந்து கொள்ளலாம்.) 20. பேசிக் ஆங்கிலம். 21. பிரி-மெட்ரிக். 22. ஹோமியோபதி. 23. காம்பாஸிடர். 24. டெல்லி ஹையர் செகண்டரி தேர்வு (X, XI) படித்தவர்கள் தகுதியுடையவர்கள்).

முழு விவரங்களுக்கு 25 பைசா தபால் தலையுடன் விண்ணப்பித்து நீங்கள் விரும்பும் வகுப்பில் சேர்ந்து பயிற்சி பெற உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

'தமிழகத்தின் தனிப் பெரும் தபால் கல்வி ஸ்தாபனம்'
(Affiliated by I.A. & A.I.S. Educations & Com. University, New Delhi)

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்

ரிஷிவந்தியம்—S.O., தென்னார்க்காடு மாவட்டம். தமிழ்நாடு.

கிளைகள் : சிலோன், மலேசியா, தெ. ஆப்பிரிக்கா, மாரிஷஸ் அண்ட் இந்தோனேஷியா.

காணி நிலம் வேண்டும்

பூவை எஸ். ஆறுமுகம்

6. மௌனம் விடுகதை போடுகிறது!

செஞ்சுடர்ச் செல்வன் இறங்கு முகம் காட்டத் தொடங்கி ஐந்தாறு நாழிகைக்குக் கூடுதலாகவே ஆகியிருக்கும். பனை உச்சிக்குத் தாவியவன், அங்கேயே சதமென்று இருந்து விட்டால், அப்பால், காலம் என்ன ஆவது? கடமைதான் என்ன ஆவதாம்?

கூண்டு வண்டியை ஒழுங்குபடுத்தி, வைக்கோலில் நாலு 'குடங்கை' தூவி வீசி, அதன் மேலே சமுக்காளத்தை விரித்து, வரிசைக் கம்பின் வளைவில் பார்வைக்குத் தட்டுப்படும்படியாகத் தார்க் குச்சியைச் செருகி வைத்தான் வீரமணி. தீவனம் காட்டிய செவலைக் காளைக்குப் பிண்ணாக்குத் தண்ணீர் காட்டி ஓட்டி வந்து பூட்டினன். மூக்குக் கயிற்றை இருப்பிடச் சட்டத்தில் முடிச்சு போட்டு வைத்தான் ; வண்டியின் அச்சாணிக்கு 'மசகு' ஊற்றினன். பிளாஸ்டிக் பையில் ஆப்பிள்—சாத்துக்குடிப் பழங்களைப் போட்டுக் கழி முனையில் மாட்டினன். அப்பா புறப்பட வேண்டியது தான் பாக்கி. சரி; சிலட்டூரில் அப்பாவுக்கு அப்படி என்ன புது அலுவலாம்? விடுகதையும் புதிரும் அப்பாவைத் துறந்து திரும்பிப் பார்க்காமல் ஓட்டம் பிடிக்க எப்போது 'வேளை' கூடிவருமாம்? . . .

நல்லதம்பி சற்று முன் சொல்லிச் சென்ற நல்ல சேதி அவனுக்கு வியப்பளித்ததில் வியப்பில்லை. 'என்னுடை கல்யாணத்தைப் பற்றின சங்கதி மாப்பிள்ளையான எனக்குத் தெரியாமல், ஊர்க் காட்டிலே காட்டுத் தீயாய் எப்படி பரவுச்சாம்? ஒரு வேளை, இந்தச் சேதி என்னுடை அன்னத்துக்குத் தெரிஞ்சிருக்குமோ? நெருப்பு இல்லாமல் புகையுமா என்ன? அப்படின்னு, செட்டியார் கேள்விப்பட்ட விசயம் உண்மையேதானு? நான் தெரிஞ்சுக்கிட வேண்டிய மங்களகரமான சமாசாரம் அப்படின்னு மட்டும்தான் அப்பா கோடி காட்டிப் பேசினுங்க. அந்த அளவிலே அந்த மங்களச் செய்தி அநேகமாய் என் கல்யாணத்தைஒட்டியதாகத்தான் இருந்தாகணும் என்கிறது புரியுது எனக்கு. ஆனு, அப்பா தன் திட்டத்தைப் பற்றி, தன் முடிவைக் குறிச்சு எதொண்ணையும் உடைச்சுப் பேசமாட்டேன் என்கிருரே? என் கனவுப் பிரகாரமும் ஊருக்குள்ளாற பேச்சு கிளம்பியிருக்கிறதுக்கு ஒத்தபடியும், என்னுடை முறைப் பெண் அன்னமேதான் எனக்கு வாழ்க்கைப்படுவாள்? மனம் இருந்து, வழி பிறந்தாச்சினு, எந்த அதிசயக் கூத்துதான் நடக்காமல் தப்ப முடியும்? இனம் விளங்காத தவிப்பும், இனம் புரிந்த களிப்பும் அவனை ஆட்டிப் படைத்தன. 'ஒரு வேளை, எண்ணியது நடக்கவில்லையானல்?' இத்தனை ஆண்டுக் காலமாக அல்லும் பகலும் அனவிரதமும், அவன் தன்னுடைய இதயத்தின் அச்சாணி மண்டபத்திலே அன்னக்கொடியாகிய பொற்பின் செல்வியைக் கொலுவைத்து, அழகுபார்த்து, அன்புவைத்து, பாசம் கொண்டு அவளோடு தானும் தன்னேடு அவளுமாகப் பிணைந்தும் இணைந்தும் கனவுத் தேரேறி வெள்ளோட்டம் புறப்பட்டு ஆனந்தத் திருக்கூத்து ஆடி ஆடிப் பழக்கப்பட்டு விட்ட அவனுடைய அதே இதயத்தினின்றும் பொற்பின் செல்வி அன்னக்கொடியைக் கை நொடிப்பொழுதுகூட பிரித்துப் பார்க்க அவனுடைய இதயம் ஒருபோதும் சம்மதிக்காது ; சம்மதிக்கவே சம்மதிக்காது என்ற அந்தரங்க சுத்தியோடு உணராத நிமிடம் உண்டா? அறியாத விநாடி உண்டா ? அப்பா விடுகதை போடமாட்டார்! நல்வாக்குக் கொடுக்காமல் இருக்கவே மாட்டார்!

பழங் காலத்தின் ஜப்பான் கடிகாரத்துக்குப் பேசத் தெரியும்! ''மணி மூன்று''.

வீரமணி பெரு மூச்செறிந்தான். அது சுட்டது. மண வினைப் பிரச்சினையும், கடன் சுமைச் சிக்கலும் இரு வேறு முனைகளாகி, களம் ஆகிவிட்டிருந்த அவனது நெஞ்சத்திலே அறப் போராட்டம் நடத்துவதைத் தடுத்துத் தடைபோட அவனுக்கு வழிதான் பிடிபடக் காணோம்! பூச்சாண்டி காட்டி அழுத்திக் கொண்டிருக்கும் கடன் சுமையைக் கழிக்க வழி என்ன வைத்திருக்கின்றார் அப்பா?—'ஆ . . த் . . தா!'

காலடிச் சத்தம் கேட்கிறது!

ஆதிமூலத் தேவர் மயில்கண் சரிகை விசிறிமடிப்பை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வாசற்படியை அடைந்தார். ''வீரமணி, உன் சிநேகிதி தமிழரசிக்குப் பதில் போட்டுடு'' என்பதாக,' வீரமணிக்கு நினைவுபடுத்தினார்.

''அதுக்கு இப்பைக்கு என்ன அப்பா அவசரம்?''

''அப்படிச் சொல்லப்படாது தம்பி. அன்புக்கு—மெய்யான அன்புக்கு உண்டான குணலட்சணத்திலே ஒண்ணுதான் இந்த அவசரத்தனம்! பாவம், எம்மாம் ஆசையோடே அந்தப் பொண்ணு உன் பதிலை எதிர் பார்த்துகிட்டிருக்கும்!''

''அப்படீங்களா? குமாரி தமிழரசிக்கு நான் என்ன பதில் எழுத வேணும்னு நீங்க உத்தரவு போடுறீங்க?''

பெரியவர் வெடிச்சிரிப்பை வெடித்தார். ''நல்ல பிள்ளையப்பா நீ! இந்தக் கதை, காரணமெல்லாம் இந்தக் கிழட்டுச் சென்மத்துக்கு விளங்குமா, வீரமணி?'' என்று நிதானம் காத்துக் கூறினார்.

''விடுகதை போடுறதும் புதிர் வைக்கிறதும் உங்களுக்கு எவ்வளவு தொலைவுக்குப் பிடிக்குமோ, அதே அளவுக்குக் கேள்வி கேட்கிறதும் சோதனை பண்ணுறதும் உங்களுக்குப் பிடிக்கும். இல்லீங்களா, அப்பா?'' என்று கேட்டுவிட்டுச் சிரிக்க முயன்றான் வீரமணி.

ஆனால், தேவரோ வாய் விட்டுச் சிரித்து விட்டார். ''ஊம், சொல்லு. சொல்ல வேண்டியதைச் சொல்லிடு,'' என்றார்.

வீரமணி மௌனம் சாதித்தான்.

'' வீரமணி, நீ கூடத்தான் இப்போ என்னைக் கேள்வி கேட்டுச் சோதிக்கிறே. மௌனம் சாதிச்சு விடுகதை போடுறே. சிரிக்க எத்தனம் பண்ணி, ஆனா, சிரிக்க மாட்டாமல் புதிர் வைக்கிறே. அது போகட்டும். நடப்புத் தாக்கலுக்கு வா!''

''தமிழரசி எனக்குத்தான் லெட்டர் போட்டுச்சு.''

''நல்லாய்த் தெரியும். தெரிஞ்சுதான், என் அருமை மகனுக்கு வந்த தபாலை நான் உடைச்சிப் படிச்சேன்!''

''அதுக்கு உங்களுக்கு இல்லாத உரிமையா? அதைப்பற்றி நான் மூச்சுக் காட்டினேனுங்களா, அப்பா?''

''நான் அப்படி உன் மேலே குற்றப் பத்திரிகை வாசிச்சேனுங்காட்டி?''

அப்பாவிடம் வாய்கொடுத்து தப்பிக்க இயலாது. சிரித்துவிட்டான் வீரமணி. ''தமிழரசிக்குக் கடுதாசி போடுறதுக்கு எனக்கு அவகாசம் வேணும்'' என்றான். சொற்களில் ஒரு வீம்புத்தனம். வீம்பில் அகம்பாவமும் நீரோடியிருக்குமோ?

''அட, சாமியோ! பேனாக் குச்சியை எடுத்து ஒரு வரி கிறுக்கி, கட்டிலே சேர்க்கிறதுக்கு உனக்கு அவகாசம் வேணுமோ? அந்தக் காகிதத்திலே அப்படி என்ன இருக்குதாம்?''

தந்தையின் நமட்டுச் சிரிப்பைக் கண்டவுடன் தனயனின் தலை தாழ்ந்தது.

''அந்தத் துப்பு உங்களுக்கா தெரியாது? முழுப் பூசணியைச் சோற்றிலே மறைக்கப் பார்க்கிறீங்களே, அப்பா?''

''ஆத்தாடி மாரியம்மா! நல்லாச் சோதனை பண்ணிக்க, நான் சோறும் வச்சில்லை ; பூசணிக்காயும் என் கையிலே கிடையாது, மகனே!'' என்று கைகளை அகல விரித்தார் பெரியவர். தீராத விளையாட்டுப்பிள்ளை மாதிரியான நடிப்பு.

''ஊம், இந்தக் காலத்து விடலைங்களோட மனசை யாராலே படிச்சுக்க வாய்க்கும்? அதிலேயும், நீ கோணல் எழுத்துப் படிச்சவன். அத்தோடே, நீ அசலூரிலே போய்ப் படிச்ச தங்கமாச்சே, தம்பி?'' என்று முடித்தார் அவர். வேர்வையை வருடிவிட்டது வேப்பங்காற்று.

உலகமே தெரியாத அப்பாவி மாதிரி நடித்துக் காட்டும் அப்பா எவ்வளவு தந்திரமான விநயத்தோடு வாழைப் பழத்திலே ஊசியை ஏற்றுகிறார்! ''நான் உங்க மகன்; சிதம்பரம் சீமான் வீட்டுச் செல்லப்பெண் தமிழரசிக்குக் கூடிய சீக்கிரம் நான் பதில் எழுதி, அதை உங்க பார்வைக்கு வச்சிட்டு, அப்புறம்தான் நான் தபாலிலே சேர்ப்பேனுங்க, அப்பா!'' என்று பிள்ளைப் பாசத்தின் கட்டுப்பாட்டுடன் தெரிவித்தான் வீரமணி.

கொட்டி முழக்கத் தேவருக்கு யாரும் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. ''ரைட்டு! . . நான் போயிட்டு வரட்டுமா?'' என்றார்.

''போயிட்டு வாங்க, அப்பா!''

தூர்க் குச்சியும் மூக்குக் கயிறும் கைலாகு கொடுத்துக் கொண்டன.

தேவர் இளம் சிங்கமென நிமிர்ந்தார். செவலையின் வாலைச் சுண்டிவிட்டார். வண்டி திட்டி வாசலைத் தாண்டப் பிரயத்தனம் செய்தபோது, யாரோ எதிர்ப்புறம் விரைந்து வருவதைக் கண்டதும், பிடிகயிற்றை லாகவமாக இழுத்துப் பிடித்துக் கொண்டு மாட்டை அதட்டி நிறுத்தினார்.

வந்தவன் ஊராட்சி மன்றச் சேவகன். அவசரக் கோலம் அள்ளித் தெளித்த போக்கில் தலையின் வேடுகட்டிச் சுற்றியிருந்த கிழிசலை அவிழ்த்துக் கட்கத்தில் திணித்துக் கொண்டான் அவன். தேவருக்குக் கும்பிடு கொடுத்தான். ''தலைவர் ஐயா கண்டுக்கிட்டு வரச் சொன்னாரு. நீங்க, இருந்தா வெளியே தெருவே போகாது கொஞ்ச நாழி வீட்டோடவே இருந்தால் தேவலாம்னு தயவாய்ச் சொல்லச் சொன்னாங்க உங்ககிட்டே. என்னமோ பேச்சு இருக்குதாம். நான் திரும்பினடியும், அவரு இங்கிட்டு வந்து விழுந்துடுவாருங்க ஐயா,'' என்று அறிவிப்புக் கொடுத்தான்.

''நல்லா வந்து விழட்டுமே'' என்று சொல்ல வாயெடுத்தார் தேவர். ஆனால், சொற்கள் தொண்டையைத் தாண்டின பாடில்லை. நகைப்பு தாண்டாமல் இல்லை. ''அதுக்கென்ன? வரச் சொல்லுவேன்,'' என்று ஒப்புதல் அளித்தார். சேவகன் தலை மறைந்ததும், வண்டியைப் பின்னோக்கித் திருப்பினார். கொட்டகையில் வண்டியை நிறுத்திவிட்டு இறங்கினார். மகன் விசையுடன் வருவதைக் கண்டு, அவர் ஒதுங்கினார். 'பஞ்சாயத்துத் தலைவர் இங்கிட்டாலே தேடி வாரதின்னா, ஒண்ணு ஊர்ப் பொதுக் காரியமாய் இருக்கோணும். இல்லாங்காட்டி, சொந்தக் காரியம் ஏதுனாச்சும் இருக்கும். ஒரு வேளை, ராமையாத் தேவனுக்கு நான் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிற கடன் ரூவா பதினெட்டாயிரம் அன்னியில் நான் அவனுக்குக் கொடுக்கறதுக்குக் கடமைப் பட்டிருக்காத ரூபாய் இரண்டாயிரத்தையும் அநியாயமாய்ச் சேர்த்து, கடன் கூடுதல் தொகை ரூபாய் இருபதாயிரத்தை வட்டி கூட்டி அவனுக்குநான் கொடுத்தாக வேணும்னு தீர்ப்பு எழுதி வாங்கி, அவனுக்குச் சாதகமாய்த் தீர்ப்பு நிறைவேற்றியும் வச்சிக்கிட்டிருக்கிற தவசல் சம்பந்தமாய் பஞ்சாயத்துத் தலைவர் பஞ்சநதம் அம்பலம் மத்தியஸ்தம் செய்யவோ, நல்லது கெட்டது பேசி அம்பலம் பண்ணவோ வருவாரோ?''—நினைவுகள் இருண்டால் என்ன?— அவர் எதையும் சமாளிக்கும் மனவல்லமையோடு தலையை நிமிர்த்தினார். வெளிச்சம் உச்சிக் கபாலத்தில் உறுத்தியது.

ஊராட்சித் தலைவர் வருகை தரும் விவரம் அறிந்ததும், மாட்டுக் காரச் சிறுவன் வேலனைக் கூப்பிட்டு, வெளித் திண்ணையைக் கூட்டி, குப்பையைக்கழிக்கும்படி பணித்தான் வீரமணி. பீரோவிலிருந்து ரத்தினக் கம்பளத்தை எடுத்து வந்து விரித்தான். வேலன் கொணர்ந்த தண்ணீர்ச் செம்பையும் வெற்றிலைத் தட்டையும் இடம்கணித்துவைத்தான். தமிழ்ப் பண்பாட்டில் விளைந்திட்ட இத்தகைய சம்பிரதாயங்கள் பகுத்தறியும் அவன் சிந்தைக்கு இதமளித்திருக்கக் கூடும்.

தேவரின் புருவங்கள் எகிறி உயர்ந்தன.

உலக அரசியலின் வெறும் வாய்க்கு அசை போட உதவுவது கூட்டுச் சேரும்—அல்லது கூட்டுச் சேராக் கொள்கை வியவகாரம்.

ஆனால், இப்போது கூட்டுச் சேர்ந்த கதம்பச் சிரிப்பின் கனத்த அலைகள் ஆர்ப்பரித்து ஓடிவந்துகொண்டிருக்கின்றன.

''வாங்க, வாங்க. எல்லாரும் வாங்க!'' என்று மலர்ச்சியுடன் கை குவித்துக் கையேந்தி வரவேற்றார் ஆதிமூலத் தேவர். கறுத்த நெற்றியின் விபூதிக் கோடுகளுக்கும் அடியில் அம்பாள் குங்குமம் எடுப்பாக கண் சிமிட்டியது. ''பொதுக் காரியம் ஏதாச்சும் காத்திருக்கும்!''—எண்ணினார்.

ஊராட்சித் தலைவர் மட்டும் வரவில்லை. கூட மாட, ஊர்க் கட்சிகளின் நீறுபூத்த பூசல்களைக் கடந்த பிரதிநிதிகளாக கந்தையாச் சேர்வை, காளிமுத்துச் செட்டியார், ராமராசன், மதிவாணன், தலைமை ஆசிரியர் தங்கராஜ், டாக்டர் பாஸ்கர் ஆகியோரும் வந்தார்கள்.

வந்திருக்கிறான். உபசரிக்க வேண்டியதுதான், கண்ணியம். ''சம்மணம் கோலி விசாலமாய்க் குந்திக்கங்க,'' என்றான். பட்டப் பரிட்சை எழுதி லீவுக்கு வந்திருந்தபோது, தான் ஒரு மேடையிலும் அவன் எதிர் மேடையிலுமாக ஏறிக் கொள்கை முழக்கம் செய்த நிகழ்ச்சிகளை ஊர் மறுப்பதற்கில்லை; மறப்பதற்கில்லை. மதிவாணன் முடிகளைச் சீராக ஒதுக்கிக் கொண்டான். ஹிப்பி நாகரிகம் இந்தப் பட்டிக்காட்டு மண்ணையாவது தொற்றாமல் விட்டிருக்கலாகாதா? என்ன விட்டகுறையோ? — எங்கே தொட்ட குறையோ?

மேய்ச்சல் ஓய்ஞ்ச நேரம்னு, சுடு தண்ணி போட்டிருப்பான் காசி. இப்ப ரெண்டுங்கேட்ட சமயம். ''தாகத்துக்குச் சாப்பிட்டுட்டு எல்லாரும் வெற்றிலை பாக்குப் போட்டுகிடுங்க,' என்று உபசரித்தார் பெரியவர்.

தலைகள் அசைந்தாடின.

தலைவர் இடுப்பைத் தூக்கி, வாசல் வெளியை வெறித்துப் பார்த்தார்.

''என்னுங்க அம்பலம், அங்கிட்டுக் கடுகாய்ப் பார்க்கி

யிருக்கையிலே, ராமையாத் தேவன் மட்டும் ஏன் விலகி நிற்கிறானும்? ஊர்ப்பொதுக்காரியம் சம்பந்தமாய் நீங்க எல்லாரும் வந்திருக்கீங்கண்ணுதான் தோணுது. உங்களுக்குள்ள அக்கறை அவனுக்கும் இருக்க வேணுமா?- அக்கரைச் சீமைக்காரன் ஆனதாலே, அக்கரையிலேயே முறைப்பாட்டுக்காகாரன் மாதிரி ஒதுங்கிக்கிட்டானோ? அவன் வினை அவனைச் சுட்டிருக்கும்! ஊம்.. ஊருக்கு நல்லது செய்ய முந்திரிக் கொட்டையாய் முந்தி விதரணையோடவும் வீறுப்போடவும் ஊர் கூடிச் செக்குத் தள்ளி நன்மையே செஞ்சு பழக்கப்பட்ட புள்ளிநான். ஆகச்சே, உங்க எல்லோரையும் மதிச்சும் ஊர்க் காரியத்தை உத்தேசிச்சும், என்னோட சொந்த விருப்பு வெறுப்பு ரோசம் அது இதையெல்லாம் எட்டித் தள்ளிப்பிட்டு, நான்போய் புதுப்பணக்காரன் ராமையாவை - புது ரோசக்காரன் ராமையாவை அழைச்சிட்டு வர்றேனுங்க !'' என்று சொல்லிவிட்டுத் தயங்கி நடந்து, பின்நடையில் விரைவு பாய்ச்சி நடந்தார் ஆதிமூலம்.

வழக்குக்கு விரோதமாகக் கோயில் கொண்டிருப்பார் சனீஸ்வர பகவான். அதே பாவனையில், சிலையாக நின்றார்

வீரமணியும் முகமன் உரைத்தான்.

வந்தவர்கள் அவரவர் பங்குக்குப் பெரியவருக்கு வணக்கம் தெரிவித்த வண்ணம், திண்ணையில் அமர்ந்தார்கள்.

கூனிக் குறுகி உட்கார்ந்திருந்த மதிவாணனைக் கண்டதும், வீரமணிக்கு என்னவோ போலிருந்தது. இரண்டு மாதங்களுக்கு முன், கொள்கை அடிப்படையில் கருத்து மாறுபாடு கொண்டு பகைமை பூண்ட அவன், இப்போது வீடு தேடி

றீங்க?'' என்று வினவினார் தேவர்.

''உங்க மச்சான் ராமையாத் தேவர் ஒழுங்கையிலே ஒதுங்கி நிற்கிறாருங்க. அதான் பார்த்தேன்!'' என்றார் அம்பலம்.

''அப்படிங்களா?'' என்று ஆச்சரியமாகக் கேட்டுவிட்டு, வாசற்பக்கம் திருட்டி செலுத்தினார் தேவர். பிறகு திரும்பினார். ''நீங்க இத்தனை பேரும் ஒரே தடத்திலே மனசை ஓர்மைப்படுத்திட்டு இப்ப இங்கே ஒண்ணடி மண்ணடியாய்க் கூடி

ராமையா, அவர் முகம் சனி மூலையில் வக்கிரமாகத் திசை மறுகித் திரும்பியிருந்தது.

''ஏ, ராமையா. வா. என் மண்ணுக்கு!'' என்று அழைத்தார் பெரியவர். பற்றறுத்த துறவுப்பண்புகூட அவருக்கு ஆகிவந்த கலையோ?

ராமையா முகம் கொடுத்தால்தானே? - மூச்சுக் காட்டினால்தானே? - மூச்....!

ஆதிமூலம் கொந்தளித்த ஆத்திரத்துக்கு 'அணைகல்'

போட்டுக் கொண்டே, வாய் எச்சிலைக் காறி உமிழ்ந்து விட்டுத் திரும்பினார். ''பஞ்சநதம்! ராமையா மூஞ்சியைக் கூட திருப்பல்லேங்க. அவன் ரோசம் ஊருக்குத் தெரியாதாக்கும்? ஊம்..என்பாடு விட்டிச்சு. சரி, சரி, வந்த காரியத்தைச் சொல்லுங்க,'' என்று தூண்டில் போட்டார் முதிய நாட்டாண்மைக்காரர்.

''பெரியவுக கொஞ்சம் பொறுமையாய் இருக்க வேணும். நம்ம ஆவணத்தாங் கோட்டைக்கு உயர்நிலைப் பள்ளியும் மருத்துவமனையும் வாரத்துக்கு உத்தரவு ஆகியிருக்குதாம். அறந்தாங்கி ஒன்றியத் தலைவர் ராஜன் அவங்க தாக்கல் கொடுத்திருக்காங்க. இந்த ரெண்டு பெரிய காரியங்களுக்கும் .பெருந்தொகையை ஊர் சார்பிலே திரட்டியாக வேணும். ஒன்றியமும் கை கொடுக்கும். ஆனபடியினாலே, ஊர் நலத்தை எண்ணி, ராமையாத் தேவரும் பேச்சிலே கலந்துக்கிட்டால் உபகாரமாக இருக்கும்னு நான் நம்புறேன்.' என்று சொன்னார் தலைவர். கதர்ச் சொக்காயைத் தளர்த்தி அந்திமாலையை நுகர்ந்தவராக, சிந்தனை வயப்பட்டிருந்த வீரமணியை நோக்கினார். உள் நோக்கத்தோடு, பிறகு, பெரியவரை எடை போட்டார். சலனமற்றுத் திகழ்ந்த அவரை கண்டதும், என்னவோ துணிவுடன் வீரமணியை இலக்கு வைத்து விளித்தார். ''தம்பீ நீங்க திரத்தெளியப் படிச்சவங்க. நம்ப சமுதாயச் சீரமைப்பிலேயும் நம்ப ஊரோட முன்னேற்றத்திலேயும் உங்களுக்கு இருக்கக்கூடிய நல்லெண்ணத்தை நம்பி ஒரு வேண்டுதலை உங்ககிட்டே கேட்டுக்கிடப் போறேன். உங்க தாய்மாமனை நீங்களும் ஒரு வாட்டி அழைச்சுப்பாருங்க,'' என்று வேண்டினார்.

நாகரிகப் பண்பு துலங்க, தலையை இணக்கமாக ஆட்டினான் வீரமணி. நடைபயின்றான். ''அம்மான்! ஊர்ப் பொது நன்மையை ரோசத்தோடு மதிச்சு சமுதாயக் கடமையை மனப்பூர்வமாக உணர்ந்து, அதன் பேரிலே உங்களை எங்க வீட்டுக்கு அழைக்கிறேன்; வாங்க!' என்று தலையை கம்பீரமாக நிமிர்த்திக் கேட்டுக் கொண்டான் அவன்.

என்ன ஆச்சரியம்!

ராமையாத் தேவருக்குக் கூடப் புன்னகை புரிய வாய் இருக்கிறதே? மூச்சுக் காட்டாமல் மகுடிக்குக் கட்டுப்படாமல் தப்ப முடியாத கருநாகம் போலே, வீரமணியைப் பின்பற்றித் தொடர்ந்தார்!- யார்? -திருமிகு ராமையாந் தேவர்!

திண்ணை பரபரப்பு அடைந்தது.

பஞ்சநதம் அமைதி செழிக்கச் சிரித்தார். ''ஊம்; மாப்பிள்ளை கூப்பிட்டுத்தான் மாமன்காரர் வரவேணும்னு இருந்திருக்குது. சரி, சரி ராமையாத் தேவரே, வெட்கப்படாத நல்லாக் குந்திக்கங்க,'' என்றார். வெற்றிலைத் தட்டை அவர் பக்கம் நகர்த்தி விட்டார்.

வீரமணி எதிர்த் திண்ணையில் உட்கார்ந்தான். அவன் முகம் தெளிவோடு விளங்கியது

ஆதிமூலத் தேவர் குரலைப் பான்மையோடு சீராக்கிக் கொண்டு, ''வேறே யாரும் வரணுமா? சேரி ஈவுக்கு யாரையும் கண்ணுப்புறத்திலே காணோமே?'' என்று நினைவு கூர்ந்து நினைவு ஊட்டினார்.

''நல்லவேளை, மூத்தவுக யாபகப்படுத்தினீங்க. எலே சன்னாசி, இன்னொரு நடை சேரிக்கு ஓடி, சாம்பனைக் கையோட இட்டுக்கிட்டு வா,'' என்று ஆணையிட்டார் தலைவர்.

''ஒத்தைக்கடை முக்கத்துக் கள்ளுக்கடையிலே விழுந்து கிடப்பான் சாம்பான்!'' என்றான் மதிவாணன்.

வீரமணி இடைமறித்தான். ''சாம்பான் செப்டம்பர் வாக்கிலேருந்து கள்ளுக்கடையை மறந்தாக வேணும் என்கிறது நம்ப அரசோட அதிகாரம். ஆனா, அவர் மே மாசத்திலேயிருந்தே கள்ளை மறந்திட்டார் அவர் நிச்சயமாகப் புது மனிதராக மாறியாச்சு என்கிறதை நீங்களெல்லாம் தாராளமாக நம்பலாம்,'' என்று செய்தி பரப்பினான்.

அவன் சொல்லி வாய் மூடுவதற்குள், அங்கே தோற்றம் தந்தான் சாட்சாத் சாம்பான். ''சின்ன முதலாளி செப்பினது ஒட்டுக்கும் சுத்தமுங்க. அவுகதான் இந்த ஏழை பாழையோட கண்ணைத் திறந்து விட்டாங்க! எலும்பு உடைய உழைச்சு, நெஞ்சு உடையாமல் காசு சேர்த்து, நாறுகுழி நஞ்சை வாங்கிப் போட்டேன். அதிலே இம்மாம் பொழுதாய் தொழி உழுதுகிட்டிருந்தேன். கஞ்சிக் கலயம் சுமந்துவந்த எம் பொஞ்சாதி சேதியை விழுக்காட்டிச்சு. ஓடியாரேன்'' என்றான்; மூச்சு இடறியது.

ஆதிமூலம் பெருமையோடு ''சாம்பான், திண்ணையிலே வந்து குந்திக்க,'' என்று சொன்னார்.

சாம்பானுக்கு இல்லாத இடமா?

கிராமநல ஊழியர் ராமராசன் புளகம் அடைந்தார்.

''எனக்குத் தலைக்கு மேலே சோலி இருக்கு; சுருக்கண் பேச வேண்டியதைப் பேசினால் தேவலாம்,'' என்று குதிகாலில் வெந்நீரை ஊற்றிக் கொண்டு அவசரப்பட்டார் ராமையா.

ராமையாவின் தலைக்கு மேலே எந்தச் சோலியும் காணப்படாததைக் கண்டு தனக்குத் தானே நகைத்துக் கொள்ளவும் பெரியவர் தவறிவிடவில்லை.

தலைவர் அம்பலம் சுறுசுறுப்புப் பெற்றார். ஒரு நோட்டை எடுத்து வைத்தார். ''நான் சொன்ன ஊர்ப்பொது காரியங்களுக்காக, இதிலே கண்ட பத்துபேர் கொண்ட ஒரு குழு அமைச்சிருக்கோம். இந்தக் குழுதான் உயர்நிலைப் பள்ளி மருத்துவமனை சம்பந்தமாக கட்டிடம் முதலான செலவுகளுக்கான அன்பளிப்புத் தொகைகளை வசூலிக்க அதிகாரபூர்வமான அதிகாரம் கொண்டது. அவங்க அவங்க பேருக்கு அடியிலே, முதலிலே கையொப்பம் செஞ்சிடுங்க.'' என்று விளக்கலானார்.

கையொப்பங்கள் பூர்த்தி பெற்றன.

மீண்டும் தொடர்ந்தார் பஞ்சநாதம்.

''நான் குறிப்பிட்ட ரெண்டு பெரிய காரியங்களுக்கு குறைந்த பட்சம் இருபத்தையாயிரமாகிலும் நம் ஊர்ப்பங்குக்குத் தேவைப்படும். முதலிலே, நம்பளுக்குள்ளாற, அவங்க அவங்க மனசுப்படி இந்த நோட்டிலே இனம் தொகைகளைக் குறிச்சிடுவோம். பிறகு குடிக்கணக்கு வீதப்படி வசூல் பண்ணுவோம். அப்புறம், அக்கம் பக்கங்களிலேயும் வெளி

யூர்களிலேயும் ரூபாய் நிதி திரட்டலாம். ஆக, இந்த நல்ல காரியங்களுக்கு நல்லவங்க சகலத்தலை பேரும் தட்டாமல் உதவி செய்வாங்க.'' என்று விவரித்தார். பிறகு ஆதிமூலத் தேவரின் பக்கம் திரும்பி, ''பெரியவுகளே, நீங்கதான் வயசுக்கு மூத்தவங்க. உங்களோட ஆகி வந்த தங்கக் கையினாலே ஒரு தொகையை பிள்ளையார் சுழியாய்ப் போடுங்க,'' என்று தயவுடன் விண்ணப்பித்தார்.

''உங்க விருப்பம் அதுவானால், அப்படியே செய்யக் காத்திருக்கேன்,'' என்று கூறி, பூரிப்புடன் நோட்டை எடுத்தார் பெரியவர். தம் மகனைப் பார்த்தார். வீரமணியின் நிறைவான மனச்சிரிப்பில் திருப்தி கொண்டார். சில கணங்களை யோசனைக்காகச் செலவழித்தார். கடைசியில் நோட்டின் தலைப்பிலிருந்த தம் பெயருக்கு நேராகத் தொகையை எழுதினார்.

ஊராட்சி மன்றத்தின் தலைவர், ''மூத்தவுக ''ஆவன்னா-தீனா' ஆயிரம் ரூபாய் எழுதியிருக்காங்க,'' என்று மகிழ்வுப் பெருக்குடன் அஞ்சல் செய்தார்.

''நான் ஐயாயிரம் ரூபாய் தாரேன் பிரசிடெண்ட் ஐயா!' -தேள் கொடுக்கு மீசைமீது கைபோட்டுக் கருவத்தோடு சொன்னார் ராமையாத் தேவர்

அவரவர்கள் தொகை குறித்தார்கள்.

''நானு ஐம்பது ரூவா குடுத்துப்பிட்றேனுங்க, சாமிகளே! விரலுக்கு தக்கதுதாங்க வீக்கம்!'' என்றான் சாம்பான்-மெலிந்தவன்!

கூடியிருந்தோரை வாஞ்சையுடன் பார்த்தார் ஊராட்சி மன்றத் தலைவர். ''நீங்க எல்லாரும் உங்க உங்களோட சக்திக்கு உகந்த படியும் இஷ்ட பிரகாரமும் நன்கொடை போட்டிருக்கீங்க. என் சொந்த முறைமையிலே உங்களுக்கு நன்றி சொல்லிக்கிடுறேன்; என்னோட பங்குதான் இனி தொடுசு நிற்குது. என் சூழ்நிலைக்கு ஒத்து, நான் ஐந்நூறு ரூபாய் போட்டுக்கிறேன்' என்று தெரியப்படுத்தினார். தொகையை நோட்டிலும் எழுதினார். ''ஆவணி பிறந்தானதும், நீங்க சாடா பேரும் சொன்ன சொல்படி அன்பளிப்புத் தொகையைத் தவறாமல் கொடுத்துப்புட வேணும் நானும் கச்சிதமாய்த் தந்திடுவேன். இன்னொன்னையும் விளம்ப வேணும். வசூலாகக் கூடிய நன்கொடைப்பணத்தை உண்டிப்பெட்டியிலே போட்டுப் பூட்டிச் சாவியோடே நம் பெரியவங்க 'ஆவன்னா-தீனா' கையிலே ஒப்படைச்சி வைப்போம். இந்த லாயக்கான ஏற்பாடு உங்க எல்லாருக்கும் உடன்பாடு தானுங்களே?' என்று அவர்களை விசாரித்தார் பஞ்சநதம்.



சைவ உணவினரை 'அனீமியா' தாக்கும் !

''அசைவ உணவு சாப்பிடுகின்றவர்களைக் காட்டிலும், சைவ உணவு சாப்பிடுகின்றவர்களே, பெருமளவில் ''அனீமியா'' (Anaemia) நோயின் தாக்குதலுக்கு உள்ளாகின்றார்கள்'' என்று இரசாயன இயலில் 'நோபெல் பரிசு' பெற்ற பேராசிரியர் ''டோராத்தி காட்ஜ்கின்'' (Dorothy Hodgkin) குறிப்பிட்டுள்ளார். உலகப் புகழ் பெற்ற விஞ்ஞான மேதையாகிய இந்த அம்மையார், ''பி–12 என்னும் உயிர்ச்சத்தினைப் (வைட்டமின்) போதிய அளவில் வழங்கி, 'அனீமியா' நோயாளிகளுக்கு நீண்ட ஆயுளை அளித்திட முடியும்!'' என்றும் கூறியுள்ளார்.



ராமையாத் தேவரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் வெளிப்படையான நிறைவுடன் தலையை அசைத்து, 'சரி' சொல்லிச் சம்மதம் கொடுத்தார்கள்.

ஆனால், ராமையாத் தேவர் மறுப்பு எதுவும் சொல்லாமல், மௌனப் பிண்டமாக நகர்ந்து தன் பக்கம் இருந்த தாம்பூலத் தட்டை, முகச்சுளிப்போடு நகர்த்திவிட்டு எழுந்தார்.

தேவரும், தேவர் மகனும் மட்டிலும்தான் இப்போது மிச்சம்.

விருந்தாடி வந்தது சீதளத் தென்றல்.

வெறுமையைச் சூறையாடி விட்டு, வீரமணியைக் கூப்பிட்டார் தேவர்.

''தம்பி! ஊர்ப்பொதுநலக் காரியம் என்கிறதைத் தொட்டுத்தான் உன் அம்மான்மேலே உள்ள மனச்சடவை, சங்கடம் எல்லாத்தையும் அப்போதைக்கு மறக்கடிச்சுட்டு, பெருந்தன்மையோடே போய் உன் அம்மான் தேவனைக் கூப்பிட்டேன் நான், வரல்லே அவன்!— சின்னப் புத்திக்கார அற்பன் அவன்! வினையும் கூச்சமும் பிடுங்கித்தின்னிருக்கும்! சரி: தலைவர் கெஞ்சுதலாய்ச் சொல்லி, அதன் பேரிலே, நீ உன் அம்மான்காரனை ஒரு சொந்த உரிமையோட 'வாங்க அம்மான்'! அப்படின்னு அழைச்சே. வாய் திறக்காமல் வந்திட்டான். எனக்கேகூட மலைப்புத் தட்டிப் போச்சுதான் அதுவும் சரி. ஆனா, அப்படி அழைச்சு வந்த உன்கிட்டே யாகிலும்; அவன் பயணம் கட்டின சமயத்திலே 'போயிட்டு வாரேன், மாப்பிள்ளை!' அப்படின்னு ஒப்பனைக்காச்சும் ஒரு வாய்ப்பேச்சு விழுக்காட்டிட்டு தொலைஞ்சானா உன்னோட அம்மான் ராமையா? ஆக ஒரு சங்கதி. உன்னையும் என்னையம் கைவிலங்காக இறுக்கிக்கட்டிப் போடாமல் இருக்காதாக்கும்! ஊருக்காக வேண்டி, அப்பனும் மகனும் கீழே விழுந்திட்டு, மீசையிலே மண்ணு ஒட்டலேண்ணு இட்டுக்கட்டிப் பேச வேண்டிய இக்கட்டிலே மாட்டிக்கிட்டு முழிக்கச் சோதிப்பு நேர்ந்தாச்சு! இல்லையாப்பா, வீரமணி?''

மௌனப்பிண்டமென உரு மாறி, உருக்கொண்டு, உருக்காட்டும் சோதனைப் பொறுப்பு இச்சமயம் வீரமணியின் தலையிலே சோதனையாய் விடிந்தது போலும்!

ஆனால்.......

வீரமணியின் மௌனத்தை-விடுகதைப் புதிரென விளங்கிய மௌனத்தைக் கோழைத்தனம் என்று கருதியோ, அல்லது அசட்டுத்தனம் என்று நினைத்தோ, அல்லது அகம்பாவத்தனம் என்று எண்ணியோ, பெரியவர் ஆதிமூலம் அட்டகாசமாகவும் ஆவேசமாகவும் நிர்த்தாட்சண்யமாகவும் சிரித்தார்; சிரித்தார்; அப்படிச் சிரித்தார்!

வளரும்.

காசுகள் சேர்த்திடக் கம்பு பயிரிடுவீர்!



குறுகிய காலத்தில் காசு பணம் சேர்த்திட விரும்பும் உழவர் பெருமக்களுக்கும், உணவு உற்பத்தியைக் குறுகிய காலத்தில், குறைந்த செலவில் பெருக்கிட விரும்பும் உழவர் பெருமக்களுக்கும், பயிர்ச் சுழற்சியை மேற்கொண்டு ஒரே ஆண்டில் மூன்று போகம் பயிரிட விரும்புகின்ற உழவர் பெருமக்களுக்கும் எச். பி. கம்பு இரகங்கள் பேருதவியாக உள்ளன! எச். பி. கம்பு இரகங்கள் தமிழ்நாட்டில் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்ட பிறகு பல உழவர் பெருமக்கள் பணக்காரர்களாகி உள்ளனர் என்பது உண்மை! இதனுலேயே, எச் .பி. கம்பு இரகங்களின் பரப்பு தமிழ் நாட்டில் ஆண்டிற்கு ஆண்டு அதிகமாகி வருகிறது. குறிப்பாகச் சொல்லப் போனுல் கோயம்புத்தூர், சேலம், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் உள்ள பல உழவர் பெருமக்கள் கடந்த 5 அல்லது 6 ஆண்டு களுக்குள் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு முன்னேறியுள்ளார்கள், இதற்குக் காரணம் அவர்கள், எச். பி. கம்பு இரகங்களை இறைவையில் பயிர் செய்ததே என்ருல் மிகையல்ல!

எச். பி. 1, எச். பி. 3, எச். பி. 4 ஆகிய கம்பு இரகங்களை மார்ச்சு-ஏப்ரல் மாதங்களில் ஏக்கருக்கு ரூபாய் 300 முதல் ரூபாய் 350 வரை செலவிட்டுச் சாகுபடி செய்து, ஏக்கருக்கு 750 முதல் 1,000 ரூபாய் வரை நிகர இலாபம் பெற்றுள்ளனர்! இந்த இலாபத்தை மூன்றே மாதத்தில், குறைந்த பாசனத்தில், குறைந்த செலவில், மிகுந்த பாடுபடாமல் பெற்றுள்ளனர் என்பது குறிப்படத்தகுந்ததாகும்.

எனவே, குறுகிய காலத்தில், மிகுந்த இலாபம் பெற்று, காசு பணம் சேர்த்திட விரும்பும் உழவர் பெருமக்களை, பின்கண்ட சாகுபடி முறைகளை மேற்கொண்டு மார்ச்—ஏப்ரல் மாதங்களில் எச். பி. கம்பு இரகங்களை இறைவையில் பயிரிடுமாறு, ''தமிழரசு'' இதழ் சார்பில் கேட்டுக் கொள்கின்ரேும்!

இறைவைக் கம்பு சாகுபடிக் குறிப்புக்கள்

பருவம் :

இறைவையில் கம்பு பயிரிட மார்ச்சு—ஏப்ரல் முதல் ஜூன்—ஜூலை வரையான பருவம் மிகவும் சிறந்தது!

ஏற்ற இரகங்களும், வயதும் :

இறைவையில் கம்பு பயிரிட எச். பி. 1, எச் .பி. 3, எச். பி. 4, எச் .பி. 5 ஆகிய இரகங்களைப் பயிரிடலாம். இவைகளின் வயது பின்வருமாறு உள்ளன.

இரகம்		வயது (நாட்கள்)
எச்.பி.1	...	80 முதல் 85
எச்.பி.3	...	75 முதல் 80
எச்.பி.4	...	80 முதல் 85
எச்.பி.5	...	80 முதல் 85

விதை அளவு :

ஒரு ஏக்கர் இறைவைக் கம்பு சாகுபடி செய்ய விரும்பினுல், 1 கிலோ விதையை 3 சென்ட் நாற்றங்காலில் நாற்று விட வேண்டும்.

விதையுடன் மருந்து கலக்குதல் :

ஒரு கிலோ விதையுடன், 2 கிராம் 'அக்ரசான்' மருந்தையும், 2 கிராம் 'டீ.எம்.டீ.டி.' மருந்தையும் சேர்ந்து நன்ருகக் கலந்து விட வேண்டும்.

நாற்று விடுதல் :

3 சென்ட் பரப்பை நன்கு உழுது, அதில் 3 வண்டி தொழு எரு இட்டு, நாற்றங்கால் தயாரிக்கவும். நாற்றங்காலை 4 அடி அகலமுள்ள மேடைப் பாத்திகளாக அமைத்துக் கொள்ள வேண்டும். பாத்திகளின் மேல் விதைகளைச் சீராக விதைத்து, இலேசாக மண்ணைக் கிளறி விதைகளை மூடிவிட வேண்டும். விதைத்தவுடன் நாற்றங்காலில் உள்ள பாத்திகளுக்குத் தண்ணீர் விடவும். விதைத்த 3-வது நாள் மூளை நீர் விட வேண்டும். பிறகு 5 முதல் 7 நாட்கள் இடைவெளியில் நாற்றங்காலுக்குத் தண்ணீர் பாய்ச்சி வர வேண்டும்.

விதைத்த 10 முதல் 12 நாட்களில் நாற்றங்காலுக்கு 2.5 கிலோ அமோனியம் சல்பேட் உரத்தை மேலுரமாக இடுவதால், நாற்றுகள் நன்கு வளர்ந்து பருமனுகக் கூடும்.

நாற்றுப் பறித்தல் :

நாற்று விட்ட 18-ஆம் நாளில் நாற்றுக்களைப் பறித்து நட வேண்டும்.

நடவு வயல் தயாரித்தல் :

நிலத்தை இரும்புக் கலப்பையால் 3 முறை நன்கு உழுது புழுதியாக்க வேண்டும். ஏக்கருக்கு 20 வண்டி தொழு எரு விட்டு, 4-வது முறை உழுது, தொழு எருவை மண்ணுடன் நன்கு கலக்கச் செய்ய வேண்டும். பிறகு நிலத்தில் 45 சென்டி மீட்டர் (1.5 அடி) இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும். பாத்திகள் அமைப்பதை விட, பார்கள் அமைப்பதே இறைவைக் கம்புக்கு ஏற்றது. சிக்கனமாகத் தண்ணீர் பாய்ச்சுவதற்கும், நிறைய தூர் கிளைப்பதற்கும் பார்கள் அமைப்பதே சிறந்தது.

அடியுரம் இடுதல் :

பொதுவாக இறைவைக் கம்பு இரகங்களுக்கு ஏக்கருக்கு 18 கிலோ தழைச் சத்து, 14 கிலோ மணிச் சத்து, 9 கிலோ

சாம்பல் சத்து கொடுக்கக் கூடிய இரசாயன உரங்களை அடியுரமாக இட வேண்டும். இந்த அளவு சத்து அளிக்க பின்கண்ட அளவில் உரமிடலாம்.

அமோனியம் சல்பேட் 90 கிலோ + சூப்பர் பாஸ்பேட் 90 கிலோ + மியூரியேட் ஆப் பொட்டாஷ் 15 கிலோ.

அல்லது

யூரியா 40 கிலோ + சூப்பர் பாஸ்பேட் 90 கிலோ + மியூரியேட் ஆப் பொட்டாஷ் 15 கிலோ.

அல்லது

டைஅமோனியம் பாஸ்பேட் 30 கிலோ + அமோனியம் சல்பேட் 65 கிலோ அல்லது யூரியா 30 கிலோ + மியூரியேட் ஆப் பொட்டாஷ் 15 கிலோ.

அல்லது

14 : 14 : 14 'காம்ப்ளெக்ஸ் 65 கிலோ + யூரியா 20 கிலோ + சூப்பர் பாஸ்பேட் 30 கிலோ

அல்லது

15 : 15 : 15 'காம்ப்ளெக்ஸ்' 60 கிலோ + யூரியா 20 கிலோ + சூப்பர் பாஸ்பேட் 30 கிலோ.

அல்லது

9 : 9 : 9 கலப்பு உரம் 100 கிலோ + யூரியா 20 கிலோ + சூப்பர் பாஸ்பேட் 30 கிலோ.

அல்லது

12 : 6 : 6 கலப்பு உரம் 150 கிலோ + சூப்பர் பாஸ்பேட் 30 கிலோ.

இரசாயன உரமிட பார்களின் ஒரு பக்கச் சரிவில், அடிப்பாகத்திலிருந்து சற்று உயரத்தில் அதாவது சுமார் 2 அங்குல உயரத்தில் ஒரு கூரிய குச்சியால் கோடு இழுக்க வேண்டும். அவ்வாறு செய்வதால் ஏற்படும் பள்ளத்தில் இரசாயன உரத்தை வரிசையாக இட்டு மூடிவிடுதல் வேண்டும்.

நாற்று நடுதல் :

விதைத்த 18-வது நாளில் நாற்றுகளைப் பறித்து, அன்றே நட்டு விட வேண்டும். பார்களுக்கு இடையில் தண்ணீர் விட்டு, பாரின் ஒரு பக்கச் சரி

வில் உரமிட்ட வரிசைக்கு மேலே 2 அங்குல தூரத்தில் நாற்றுகளை வரிசையாக நட வேண்டும். வரிசையில் குழிக்கு குழி 6 அங்குலம் இடைவெளி விட்டு நட வேண்டும். தடிப்பான, நன்கு வளர்ந்த நாற்றாக இருந்தால், குழிக்கு ஒரு நாற்று வீதம் வைத்து நடுவதே போதுமானது. நாற்று நன்கு பருமனாக இல்லாமல் மெலிந்து இருந்தால், குழிக்கு 2 நாற்று வீதம் வைத்து நடவேண்டும்.

பின்செய் நேர்த்தி :

நடவு செய்த பிறகு கீழ்க் கண்டவாறு குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட முறையில் செய்தல் சிறந்தது.

3-வது நாள் : உயிர் நீர் விடவும்.

10-வது நாள் : தண்ணீர் விடவும்.

17-வது நாள் : தண்ணீர் விடவும்.

20-வது நாள் : களை எடுத்து 'என்ட்ரின்' (Endrin) 'மெட்டாசிஸ்டாக்ஸ்' ஆகிய மருந்துகளை 3 : 2 விகிதத்தில் கலந்து தெளிக்கவும்.

25-வது நாள் : 10 கிலோ தழைச் சத்துக் கொடுக்கக் கூடிய 50 கிலோ அமோனியம் சல்பேட் அல்லது 22 கிலோ யூரியாவை பயிர் வரிசைகளுக்கு 3 அங்குல தூரத்தில் வரிசையாக இட்டு, மண்ணால் மூடி, தண்ணீர் விட வேண்டும்.

குறிப்பு : அண்மையில் நடைபெற்ற சோதனைகளில் இருந்து ஏக்கருக்கு 14 கிலோ தழைச் சத்தை மேலுரமாக இடலாம் என்பது தெரிய வருவதால், முன்னேறிய உழவர் பெருமக்கள் இந்த அளவில் உரமிடலாம்.

32-வது நாள் : 400 கிராம் டைத்தேன் இசட், 78 மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

35-வது நாள் : தண்ணீர் கட்டவும்.

42-வது நாள் : 5 கிலோ 'பி.எச்.சி.' 10 சதத் தூளையும் 5 கிலோ 'டி.டி.டீ.' 5 சதத் தூளையும் கலந்து கம்புப் பூக்களில் தூவவும்.

45-வது நாள் தண்ணீர் விடவும்.

அறுவடை :

நாற்று நட்ட 62 முதல் 67 நாட்களுக்குள் மேற்கூறிய இரகங்கள் அறுவடைக்கு வந்து விடும். கதிர்களை நன்கு காய வைத்து, மாடுகளைக் கொண்டு பிணையடித்து அல்லது கதிர் அடிக்கும் இயந்திரம் கொண்டு கம்பு தானியங்களைப் பிரித்து எடுக்கலாம்.

மகசூல் :

மேற்கூறிய முறைகளில் சாகுபடி செய்தால் சராசரியாக ஏக்கருக்கு 1,500 கிலோ முதல் 1,750 கிலோ வரை மகசூல் பெறலாம்.

எனவே ''காசு பணம் சேர்த்திடக், கம்பு பயிரிடுவீர்!'' என்று தமிழக உழவர் பெருமக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

—**ஆர். எம்.**

சிறு துளி பெரு வெள்ளம்



''ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?''

இதற்குப் பதில் கிடைப்பது எதிர்மறையில்தான். பள்ளிப் பருவத்திலே பல கலை பயிலும் பொழுதுதான் பசுமரத்தாணி போல் கற்ற கல்வி நிலை பெறும் பழக்க வழக்க ஒழுக்கங்களும் படிவது பள்ளிப் பருவத்தில் தான். அறியாமையால் விளையும் தீமைகளினின்றும் விடுதலை பெறவே அறிவு புகட்டப்படுகிறது. அதேபோன்று, பணத்தை விரயமாக்குவதால் வாழ்வில் ஏற்படும் சிக்கல்களும் தீமைகளும் நீங்க, பணத்தைச் சிக்கனமாகக் கையாண்டு சேமித்து வருங்காலத்தை வளமாக்க, வல்லவர்களாக விளங்க இன்றையச் சிறார்களை இளமையிலேயே உருவாக்க வேண்டியது கல்வி நிறுவனங்களின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும். இவ்வுயரிய குறிக்கோளுடன் இயங்கி வருவதுதான் சிறுவரால் நடத்தப்படும் சாலச் சிறந்த சேமிப்பு வங்கி.

வருங்காலம் வளம் பெற....

பணம் எதற்குத் தேவைப்படுகிறது?

பணத்தைத் தனிநபரும் சமூகமும் எவ்வாறு உபயோகப்படுத்துகின்றனர்?

பணம் எப்படிப் பாதுகாக்கப்படுகிறது?

பணத்தை ஏன் சேமிக்க வேண்டும்?

பணத்தைப் புழக்கத்தில் விடுவதிலும் சேமித்து வைப்பதிலும் வங்கிகளின் பங்கென்ன?

ஆகியவை போன்ற கேள்விகள் நம் குழந்தைகள் மனத்தில் அடிக்கடி எழுகின்றன. பெரும்பான்மையான இக்கேள்விகளுக்கு உரிய பதிலளிக்கமுடியவதில்லை. ஆனால், தெளிய வைப்போமானால், வருங்காலத்தில் அவர்கள் பொறுப்பு வாய்ந்த மற்றும் நாட்டிற்கு உபயோகமுள்ள குடிமக்களாகத் திகழ்வார்கள் என்பதில் ஐயமில்லை. இத்தேவைகளை நிறைவேற்றச் செய்வதே பள்ளிச் சேமிப்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

மாணவர் நலம் பெற....

பள்ளி மாணவர்களின் நலனுக்காகப் பள்ளி மாணவர்களாலேயே நடத்தப்படும் சேமிப்பு வங்கிக்குத்தான் 'பள்ளிச் சேமிப்புத் திட்டம்' என்று பெயர். வங்கி மேலாளர், பணம் வழங்கும் மற்றும் பெறும் எழுத்தர், கணக்கர் ஆகிய யாவரும் மாணவர்களே. பணத்தை ஒழுங்கான முறையில் சேமிக்கவும், கையாளவும் சிறு வயதிலேயே கற்றுக் கொள்ளவும். பழக்கப்படுத்திக் கொள்ளவும் இப்பள்ளிச் சேமிப்பு வங்கி உதவுகிறது. மேலும், வங்கித் தொழிலில் சம்பந்தப்பட்ட காசோலை (Cheque) முறை, கொடுக்கல் வாங்கல் முறைகள் (Pass Book System) ஆகியவற்றைக் கற்றுக் கொள்ளவும் இவ்வங்கி உதவுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக வருங்காலத்தில் தலைவர்களாகும் பண்பினைச் சிறுவயதிலேயே பெறும் திறனையும் இது அளிக்கின்றது.

துவக்குவது எப்படி?

இந்தத் திட்டத்தைத் துவக்குவது மிகச் சுலபம். கீழே கொடுக்கப்பட்டுள்ள அமைப்பு விதிகளைக் கொண்டு பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியரைக் கொண்ட ஒரு நம்பகக் குழு (Board of Trustees) அமைக்கப்பெற்று, அக்குழுவின் மேற்பார்வையில் இத்திட்டம் இயங்கிவரும். இது குறித்து உதவியோ விவரங்களோ தேவைப்பட்டால் ஒவ்வொரு மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திலும் உள்ள மத்திய அல்லது மாநில மாவட்டச் சேமிப்பு அலுவலரை அணுகலாம். சென்னை மாநகரில், 34, அண்ணாசாலையிலுள்ள தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத் துறையுடனோ அல்லது 1/18, அண்ணாசாலையிலுள்ள மத்திய அரசின் தேசிய சேமிப்பு நிறுவனத்துடனோ தொடர்பு கொள்ளலாம்.

தேவையான மாதிரி அமைப்பு விதிகள்

(1) மாணவர்களாலேயே நிருவகிக்கப்படும் பள்ளிச் சேமிப்புத் திட்டம் இது.

(2) இது நடைமுறையில் உள்ள பள்ளியைச் சார்ந்த எந்த மாணவ, மாணவியும் இத்திட்டத்தில் சேரலாம்.

(3) இத்திட்டத்தின் விவகாரங்கள் அனைத்து பள்ளியின் முதல்வர் அல்லது தலைமை ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியை, இரண்டு ஆசிரியர்கள் மற்றும் இரண்டு மாணவர்கள் அடங்கிய ஒரு நம்பகக் குழுவினரால் நடத்தப்படும். ஆசிரிய மற்றும் மாணவ உறுப்பினர்கள் பள்ளி மாணவ மாணவியரால் ஒரு கூட்டத்தில் வைத்துத் தேர்தெடுக்கப்படுவார்கள். இக்கூட்டத்திற்குப் பள்ளியின் முதல்வர் அல்லது



தலைமை ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியை தலைமை வகிப்பார். இது குறித்து அவருடைய முடிவே இறுதியானது. நம்பகக் குழுவின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவியில் இருப்பர். நம்பகக் குழுவின் உறுப்பினர் பதவியில் ஏதேனும் காலியாகிவிட்டால் தற்காலிகமாக ஒருவரை நியமிக்க மேற்கண்டவர்களுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் கூடிய சீக்கிரம் பொதுத் தேர்தல் வைத்து காலியான இடத்தை நிரப்ப ஆவன செய்ய வேண்டும்.

(4) 1965-ஆம் ஆண்டின் அஞ்சலகச் சேமிப்பு வங்கிகள் விதிகளின் 3-வது விதியின் கீழ் துணைவிதி 3-ன்படி, பள்ளிக்கு அருகிலுள்ள அஞ்சலக வங்கியில் பள்ளியின் பெயரில் ஒரே ஒரு கணக்குத் துவக்கப் பெற வேண்டும். பள்ளியின் பெயரில் ஏற்கெனவே ஒரு கணக்கு இருந்து வந்தால், இத்திட்டத்தின் பெயரிலேயே கணக்கைத் துவங்கலாம்.

(5) இப்படித் துவக்கப் பெற்ற கணக்கினை நம்பகக் குழுவின் தலைவரின் கையெழுத்து மீதாவது அல்லது யாராகிலும் இரண்டு நம்பகர்கள் கையெழுத்து மீதாவது இயங்கலாம். இத்திட்டம் ஆரம்பிக்கப் பெற்றவுடன் இது குறித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதன் நகல், நம்பகக் குழுவின் தலைவர் அல்லது அனைத்து நம்பகர்களும் கையெழுத்திடப்பட்டு, குறிப்பிட்ட அஞ்சலகத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

(6) இத்திட்டத்தில் சேர விரும்பும் மாணவர்களுக்காக மாதத்தில் ஒரு குறிப்பிட்ட நாள் அல்லது நாட்களை நம்பகக் குழுவினர் நிர்ணயித்துக் கொள்வார்கள். இந்நாட்களில் மாணவர்கள் தங்கள் சேமிப்புப் பணத்தை இத்திட்டத்தில் சேர்க்கலாம். கொடுக்கல்—வணங்கல் வேலை, முறையாகவும் ஒழுங்காகவும் நடைபெற ஒரு செயல்மேடை (Counter) அமைத்துக் கொள்ள வேண்டும். செயல்மேடை எழுத்தர்களாக (Counter Clerks) பணியாற்ற மாணவர்கள் வரிசைப்படி நம்பகக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இவர்கள் பணத்தைச் சேமிப்பு வங்கிப் பற்று-வரவுப் (Pass Book) புத்தகத்தில் பதிவு வைத்துக் கொள்வார்கள்.



இப்பணியில் இம்மாணவர்களுக்கு உதவவும், வழிகாட்டவும் ஆசிரியர்கள் உடன் இருப்பர்.

(7) ஒவ்வொரு நாளும் சேமிப்பில் போட்ட பணத்தின் விவரங்கள் அனைத்தும் ஒரு பேரேட்டில் (Ledger) குறித்துக் கொள்ளப்பட வேண்டும். இந்த வேலையையும் ஆசிரியர்களின் மேற்பார்வையில் செயல்மேடை எழுத்தர்களே செய்வர். கணக்குகள் ஒத்துப் பார்க்கப்பட்ட பிறகு (Tallied) நம்பகக் குழுவினைச் சார்ந்த யாராவது இரண்டு நம்பகர்கள் கணக்குகள் சரி பார்க்கப்பட்டதற்குச் சான்றாகப் பேரேட்டிலும், ஒவ்வொரு நபரின் பற்று-வரவுப் புத்தகத்திலும் கையொப்பமிட வேண்டும். பிறகு, பற்று—வரவுப் புத்தகங்கள் சேமிப்பவரிடம் திருப்பித் தரப்படும்.

(8) கீழே விதி 10-ல் கூறப்பட்டுள்ளவை நீங்க, ஒவ்வொரு சமயத்திலும் சேர்க்கப்பட்டுள்ள பணத்தைப் பள்ளிச் சேமிப்பு வங்கி பெயரில் உள்ள அஞ்சலக வங்கிக் கணக்கில் அவ்வப்போது முதல்வர் அல்லது தலைமை ஆசிரியர் அல்லது தலைமை ஆசிரியை அவர்களால் செலுத்தப்பட்டு, பற்று—வரவுப் புத்தகம் முதல்வர் தலைமை ஆசிரியரின் நேரடிப் பொறுப்பில் வைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(9) இத்திட்டத்திலிருந்து பணத்தை, உறுப்பினர் தேவைப்படும்பொழுது ஒரு தொகையை எடுக்க வசதியாக முதல் மாதத்தில் சேர்க்கப்பட்டுள்ள தொகையிலிருந்து ரூ. 25-க்கு மிகுதியாகாமல் ஒரு தொகையை நம்பகக்குழு ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும். இத்தொகையை முன்பணமாக வைத்துக் கொண்டு கணக்கிலிருந்து பணம் எடுக்க விரும்புவோருக்குத் தேவைப்பட்ட தொகையை வழங்கலாம. இப்படி வழங்கப்பட்ட தொகை வரும் மாதங்களில் சேர்க்கப்படும் முதலீடுகளிலிருந்து ரூ. 25 வரை ஈடு செய்து கொள்ளலாம்.

(10) இவ் வங்கியிலிருந்து பணத்தை உறுப்பினர் தேவைப்படும்பொழுது எடுக்கும் விதிகளை அவ்வப்போது நம்பகக் குழு நிர்ணயித்துக் கொள்ளலாம்.

(11) ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாத முடிவில் பள்ளிச் சேமிப்பு வங்கிப் பெயரிலுள்ள கணக்கிற்கு அவ்வாண்டின் வட்டித் தொகையை, அஞ்சலக வங்கியால் கணக்கிடப்பட்டுச் சேர்க்கப்படும். இப்படிக்கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினை ரூ. 10-க்குக் குறையாமல் ஆண்டு முழுவதும் கணக்கில் இருப்பு வைத்துள்ள இவ்வங்கி உறுப்பினர்கள் அனைவருக்கும் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும். ஆண்டு நடுவில் சேரும் மாணவர்களும் பயனடையும் விதத்தில் வட்டித் தொகை ஒவ்வொரு காலாண்டு முடிவிலும் கணக்கிடப்பட வேண்டும். இப்படிப் பிரித்தளிக்கப்பட்ட வட்டித் தொகை அந்தந்தப் பற்று-வரவுப் புத்தகத்தில் குறிக்கப்பட்ட பிறகு மிகுதி ஏதேனும் இருந்தால், பள்ளிச் சேமிப்பு வங்கிக் கணக்குடன் சேர்த்து விடலாம். அல்லது இத்தொகையினை நம்பகக் குழுவின் முடிவின்படி வங்கிக்குப் பயனுள்ள விஷயங்களுக்காச் செலவிடலாம்.

(12) பள்ளியைச் சார்ந்த இந்த வங்கிக் கணக்குள்ள ஒரு மாணவர் அப்பள்ளியை விட்டு விலகும்போது, அவர் கணக்கில் உள்ள தொகையினை அவர் எந்தப் பள்ளிக்கு செல்கிறாரோ அப்பள்ளியின் வங்கிக் கணக்கிற்கு மாற்றி விடலாம் அல்லது அவர் பெயரில் ஒரு அஞ்சலக வங்கிக் கணக்கு ஆரம்பித்துக் கொடுக்கலாம் அல்லது சேமிப்புப் பணத்தை ரொக்கமாக அவருக்குத் திருப்பி வழங்கி விடலாம்.

(13) வங்கியை நடத்தத் தேவையான எழுதுபொருள்களையும் மற்றும் கீழ்க்கண்ட படிவங்கள், புத்தகங்கள் ஆகியவற்றையும், மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்தில் உள்ள மத்திய தேசிய சேமிப்பு நிறுவனத்தைச்

சார்ந்த மாவட்ட சேமிப்பு அலுவலராலும், சென்னை மாநகரத்தில் 1[18, அண்ணா சாலையிலுள்ள மத்திய சேமிப்பு நிறுவனத்தாராலும் வழங்கப்படும்.

அ. கணக்கை ஆரம்பிக்கத் தேவையான படிவம்

ஆ. பற்று-வரவுப் புத்தகம்

இ. பணத்தைத் திரும்ப எடுக்க வேண்டிய படிவம்

ஈ. காசோலைப் புத்தகம்

உ. கணக்குகள் வைத்துக் கொள்ளத் தேவையானபேரேடுகள்

ஊ. தினசரி கணக்குத்தாள்

(14) வங்கியின் வரவு-செலவுக் கணக்குகளை அவ்வப்போது தணிக்கை செய்யப் பள்ளியைச் சேர்ந்த இரு ஆசிரியர்களை கவுரவ தணிக்கையாளர்களாக நம்பகக்குழு அமர்த்திக் கொள்ளலாம்.

இத்திட்டத்தில் சேருவது எப்படி ?

இந்த வங்கியில் சேர விரும்பும் மாணவ மாணவியர் அதற்காக உள்ள விண்ணப்பத்தாள்களை நிரப்பிக் கொடுக்க வேண்டும். விண்ணப்பத்தாள் இலவசமாக விநியோகிக்கப்படும்.

இந்த வங்கி அமைப்பு விதிகளில் உள்ளபடி மாணவ மாணவியர் தங்கள் கணக்குகளிலிருந்து ஒரு சிறு தொகையை வேண்டும்போது திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். பணத்தை இரு வழிகளில் வங்கியிலிருந்து பெறலாம். (1) பணம் எடுக்கும் விண்ணப்பத்தாளை நிரப்பிக் கொடுத்தாவது அல்லது (2) காசோலை எழுதிக் கொடுத்தாவது பணம் எடுக்கலாம்.

இந்த வங்கியில் ஏற்கெனவே கூறியுள்ளதுபோல் வங்கியின் நோக்கம் பணத்தைச் சேமிக்கக் கற்றுக்கொள்வது மட்டுமன்று. அதைக் கையாளவும், தகுந்தவாறு உபயோகிக்கவும், மாணவ மாணவியர் தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் வங்கியில் சேர்ந்துள்ள மாணவ மாணவியருக்குப் பணத்தை எடுக்கும் வாய்ப்பும் அளிக்கப்படவேண்டும். மேலும், பெரியவர்களைப் போல் வங்கியில் கணக்கு வைத்துக் கொள்வதும், காசோலை மூலம் பணத்தைப் பெறுவதும் மாணவ, மாணவியருக்கு மிகவும் உற்சாகமும் உவகையும் அளிக்கும்.

ஆனால், மிகவும் தேவைப்பட்டாலொழிய பணத்தை எடுக்க அனுமதிக்கக்கூடாது. மேலும்; இப்படிப் பணத்தைத் திரும்பப் பெறுவதை மிகவும் குறைத்துக்கொள்ள வேண்டும். இதைக் கருத்தில் கொண்டுதான் ஒவ்வொரு முறையும் பணத்தை எடுக்க விண்ணப்பிக்கும்போதும் முதல்வர்/தலைமையாசிரியர் ஆசிரியை அவர்களின் அனுமதியைப் பெற வேண்டுமென விதி உள்ளது. இதனால், தவிர்க்கக்கூடிய செலவினங்களைத் தவிர்க்கும் பயிற்சியை மாணவர் பெறுகின்றனர். பணத்தைத் திரும்ப எடுக்கக் கோரும் விண்ணப்பத்தாள்களும், காசோலைப் புத்தகங்களும் தேசிய சேமிப்பு நிறுவனத்தினரால் இலவசமாக வழங்கப்படும்.

வங்கியை அமைத்துக் கொள்வது எப்படி ?

உங்கள் பள்ளி வங்கி, ஒரு வங்கியைப் போலவே அமைய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள் அல்லவா? அதற்குத் தேவையான ஒரு செயல் மேடையை (Counter) அமைத்துக் கொள்ள வேண்



டும். செயல்மேடையை அமைத்துக் கொள்வது மிக எளிது. அட்டையால் ஒரு செயல் மேடையை அமைத்துக் கொண்டு அதன் மீது தெளிவாக உங்கள் பள்ளியின் பெயர் எழுதிக் கொள்ள வேண்டும். பள்ளி வங்கியின் மேலாளரும் எழுத்தர்களும் இதற்கு அருகில் அமர்ந்துகொண்டு செயல்பட வேண்டும். பார்வைக்கு ஒரு அசல் வங்கிபோல் காணப்பட்



டால்தான் சிறுவர் சிறுமியர் மனத்தில் உற்சாகமும் ஊக்கமும் ஏற்பட்டு இத்திட்டம் வெற்றியடைய ஏதுவாகும்.

வட்டி எவ்வாறு கணக்கிடப்படுகிறது?

பள்ளி வங்கியின் மூலம் சேர்க்கும் பணத்திற்கு அஞ்சலக வங்கியில் 4 சதவிகிதம் அல்லது 4·5 சதவிகிதம் வட்டி அளிக்கப்படுகிறது. இவ்வட்டி மாதா மாதம் சேமிப்புத் தொகையின் மீது கணக்கிடப்படுகிறது. வட்டி ஆண்டிற்கு 4 சதவிகிதம் என்று எடுத்துக் கொண்டால், ஒரு காலாண்டிற்கு (Quarter) 1 சதவிகிதம் அல்லது ரூபாய்க்கு ஒரு காலாண்டிற்கு 1 காசு எனக் கணக்கிடப்படுகிறது. வங்கிக் கணக்கில், முழுவதும் குறைந்த அளவு எவ்வளவு தொகை இருந்து வந்ததோ, அத்தொகையின்மீது ரூபாய்க்கு 1 காசு வீதம் கணக்கிடப்பட்டு வங்கிக் கணக்குடன் சேர்க்கப்பட்டு விடுகிறது. வட்டித் தொகையைக் கணக்கிடக் கீழ்க் கண்டவாறு காலாண்டுகள் வரையறுக்கப்பட்டுள்ளன:

முதல் காலாண்டு: ஏப்ரல் முதல் ஜூன் முடிய.

இரண்டாவது காலாண்டு: ஜூலை முதல் செப்டம்பர் முடிய

மூன்றாவது காலாண்டு: அக்டோபர் முதல் டிசம்பர் முடிய

நான்காவது காலாண்டு: ஜனவரி முதல் மார்ச் முடிய.

வட்டி எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதைக் கீழ்க் கண்ட எடுத்துக் காட்டின் மூலம் விளக்கலாம்:

ஒரு குறிப்பிட்ட பள்ளிச் சேமிப்பு வங்கிக் கணக்கில், ஒரு குறிப்பிட்ட ஆண்டின்

முதல் காலாண்டில் ரூ. 11-ம், இரண்டாவது காலாண்டில் ரூ. 12-ம், மூன்றாவது காலாண்டில் ரூ. 14-ம், நான்காவது காலாண்டில் ரூ. 10-ம் அந்தந்தக் காலாண்டு முழுவதும் குறைந்த அளவு தொகை நிலுவையில் உள்ளதாக வைத்துக்கொள்வோம். ஆண்டு இறுதியில் கிடைக்கும் வட்டித் தொகை, 11+12+14+10 =47 எனக் கணக்கிடப்பட்டுக் கணக்குடன் சேர்க்கப்படும். 4 சதவிகிதம் வட்டி பெறும் வங்கிக் கணக்குகளில் மிகுதியாகக் கிடைக்கும் சதவிகிதம் வட்டித் தொகையைச் சிறந்த சேமிப்புக்காகப் பரிசுகள் வழங்க வைத்துக் கொள்ளலாம்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு பள்ளியும் இந்தச் சீரிய சேமிப்புத் திட்டத்தைத் துவங்கித் தங்கள் பள்ளி மாணவ மாணவியர் பெருமளவில் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையச் செய்யலாம். இத்திட்டத்தைத் துவக்கவும், வழிகாட்டவும், வேண்டிய வசதிகள் செய்து தரவும், மத்திய அரசின் தேசிய சேமிப்பு நிறுவனக் களப்பணியாளர்களும், தமிழ்நாடு அரசின் சிறுசேமிப்புத்துறையின் களப்பணியாளர்களும் காத்து நிற்கின்றனர்!

ஸ்டாக்கிஸ்டுகள் தேவை

விஞ்ஞான ரீதியில் நவீன இயந்திரங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் **மாட்டுத் தீவனம், கோழித் தீவனம்** ஆகியவைகளை விற்பனை செய்ய டிபாசிட் கட்டக்கூடிய வியாபாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஸ்டாக்கிஸ்டுகளுக்கு ஆதாயம் அளிக்கக் கூடிய கமிஷன் தரப்படும். விவரங்களுக்குக் கீழ்க்கண்ட விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

நிர்வாக இயக்குநர்

ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிட்.,

வட புதுப்பட்டு அஞ்சல் (635821)

வெண்பாப் போட்டி 72

பரிசுக்குரிய வெண்பா எழுதியவர்:
இரா. ஈகவேந்தன், பி.ஏ.,
பனையடிக்குத்தகை அஞ்சல்,
கத்திரிப்புலம்,
தஞ்சை மாவட்டம்.

ஈற்றடி: புத்துணர்வு சேர்க்கும் புகழ்

ஆண்டுபல வந்தாலும் ஆவதென்ன? பண்டுதொட்டு
மீண்டுவராப் புத்தாண்டை மேதியினில்—வீண்புகழால்
தித்திக்கும் என்றுசொல்லிச் செல்லுவதேன்? தொண்டு
புத்துணர்வு சேர்க்கும் புகழ்! [செய்உன்

—இரா. ஈகவேந்தன், பி.ஏ.
பனையடிக்குத்தகை.

''ஆகா இவனோர் அருங்கவி! இத்தரையில்
சாகாப் புகழிவனைச் சாருமென''—வேகாமல்
வித்தகர்கள் பாராட்டும் வேளையிலே உள்ளத்தில்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—சண்முக. தாயுமானவன்,
பொன்மலை.

சங்கத் தமிழ்ப்பாக்கள் சாற்றுகின்ற நற்செயலைச்
சிங்கத் தமிழர்நாம் சிந்தித்துத்—தங்கமெனப்
புத்துள்ளம் பூண்டென்றும் பூவாழத் தொண்டாற்றும்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—புலவர். செல்வி பூங்குழலி,
பொருளூர் அஞ்சல்.

நாட்டின் நிலையறிந்து நல்லதோர் திட்டமிட்டுக்
காட்டுக; அங்கே கலகமில்லை—வாட்டிடும்
மொத்த வறுமையினை முன்கூட்டிப் போக்கிவிட்டால்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—இரா. கதிரேசன்,
நாகலாபுரம்.

கட்டபொம்ம னின்வீரம், கப்பல்விட்ட வ.உ.சி.
பட்டசிறைத் துன்பங்கள்; பாரதியார்—பட்டதுயர்;
எத்தனைதாம் நாட்டிற்கே எத்தனைபேர்! அத்தனையும்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—புலவர் கோம்பைச்சீரான்,
கோம்பை அஞ்சல்.

வெற்றிப் பயன்கண்டால் மேன்மேலும் ஊக்கமிகும்
கற்றோர்லே நன்னூல் களிப்பூட்டும்—பெற்றகடல்
முத்தோ மகிழ்வூட்டும்! முப்பால் பொருளூட்டும்!
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—சிவ. கிருட்டிணன்,
கணியூர்.

ஆலயங்கள் பேணுவதும், ஆளுந் தமிழரசைச்
சீலமுடன் காப்பதுவும், சேயிழையே!—கோலமுறச்
சத்துணவுத் திட்டம் தழைத்தோங்கச் செய்வதுவும்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்!

—புலவர் சோ. பாலசுப்பிரமணியம்,
வேதாரண்யம் அஞ்சல்.

மெய்யுணர்வால் மக்களினம் மேதினியெல் லாம்பெருகி
செய்யில் விளைவிக்கச் செய்யுழைப்பைப்—பொய்யாக்கும்
சத்துறங்கும் மெய்யினிலும் சாகாத உள்ளத்தின்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—புலவர் புனிதாமணாளன்.
ஒலைப்பாடி அஞ்சல்.

நன்றி மறவாமை, நால்வருணம் பேசாமை
பொன்றுவதைப்போற்றுமை பொறையை—என்றென்றும்
நத்துதல்செய் வார்க்கு நானிலத்தில் எப்பொழுதும்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—சு. சுந்தரமூர்த்தி,
பாலையம்பட்டி அஞ்சல்.

சமதருமத் திட்டத்தாற் சத்தமின்றிக் காக்கும்
நமதரசு மக்கள் நலனை—அமளியற்ற
இத்தமிழ் நாட்டுக்கே என்றும் வளமான
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—கவிஞர் ப. தண்டபாணி,
சேப்பாக்கம்.

வெண்பாப் போட்டி

''நாடு மொழியினத்தின் நற்காலம் தோற்றுவிக்கப்
பீடு நடைபோட்டுப் போருடற்றி;—வீடுபெற;
சத்துணவாம் என்றமிழின் சார்பகையை வீழ்த்துவதே
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—புலவர் பொன்னியின் செல்வன், திருவேதிகுடி

பண்டைத் தமிழ்நாட்டின் பண்பாட்டை மீண்டும்நாம்
கண்டு களிக்கஜல்லிக் கட்டினையே—கொண்டுவந்து
வைத்தார்! இளைஞர் வலிமைக்கோ இப்போட்டி
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

நெல்லை ஆ. கணபதி, சைதாப்பேட்டை.

நஞ்சளிக்க உண்பதுவே நாகரிகம்; சால்பென்றல்
அஞ்சாமல் இன்னலரை ஆட்படுத்தல்—தஞ்சமென
நத்தி வரும்பகையை நட்பாக்கி, நன்னயஞ்செய்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—புலவர் இரா. சுப்பிரமணியன், காஞ்சி.

நாட்டின் உயர்வுக்கே நாளும் உழைத்துழைத்துக்
கூட்டுறவா லின்பங் குவித்திங்கே—ஊட்டமுள்ள
வித்தாய் பலன்நிறைத்து வேதனை நீக்கயெண்ணும்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—ப. சக்திவேலன், பொன்மலை.

தோல்வி பலகண்டும் துஞ்சா துழைக்குங்கால்
கோள்களையும் வென்றிடலாம் கூர்மதியால்—வேல்விழியே
இத்தரையி லுள்ளோர்க் கினமான மூட்டிவிட்டால்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—மு.க. மூர்த்தி, மானம்புச்சாவடி.

வளமான வாய்ச்சொல்லால் வாகாய்த்தெம் பூட்டி
அளவில்லா நன்மைகளும் ஆற்றி—வளநாடாய்
வைத்த தலைவன் வளர்புகழ் மக்களுக்குப்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—வினோதலீலன், இரா. வெள்ளோடு.

புரியுந் தொழிலைப் புகழ்சேர மண்ணில்
புரிந்திடுக நீவிர்! புகழாய்ப்—புரிந்திட்டால்
அத்துறையில் மென்மேலும் ஆர்வத்தோ டேயுழைக்கப்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—நோடுதிர மதமாடிசீதானு, காளானூரு.

சிந்தனையும் எற்றுக்குச் சேயிழையே, என்னைப்பார்!
நொந்தவென் உள்ளத்தின் நோவகன்று—சொந்தமெனும்
முத்திரையும் தேவையா? மூண்டுவரும் காதலெனும்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—கவிஞர் எழில்இறைவன் கேகூர்.

''அறம்பொருள், இன்பம் உயிரச்சம் நான்கின்
திறந்தெரிந்து'' தேறித் தொடரின்—ஒருவர்க்குச்
சொந்தாம்; சிதையாப் புகழாம்! எனத்தேறும்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—ஜெயமலர், ஓலைப்பாடி அஞ்சல்.

எத்தனையோ புல்லர் எதிர்கொண்டு வந்தாலும்
அத்தனையும் ஓர்நாள் அழிக்ின்ற—புத்திகொண்ட
வித்தகனே வீழ்ந்திட்ட வாழ்வுதரும் பாடமே
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—புலவர் சோ. பாலுச்சாமி, விருதுநகர்.

சொல்லாமல் மண்மேல் குருதியினைச் சிந்தாமல்
எல்லார்க்கும் எல்லாம் எனுமாறு—வல்லவனே!
இத்தரையை மாற்ற இமயத்தோள் தட்டடா! இப்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—பல்லவன். திருக்கழுகுன்றம்.

இத்தரையில் வாழும் எளியோரின் வாழ்விங்கே
புத்தமுதாய் மாறும் பொழுதுக்குச்—சித்தமெலாம்
முத்தனைய கொள்கை; முயற்சிகளில் வெல்லுகின்ற
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—நீ. மனோகரன். அரக்கோணம்.

இத்தரையில் வாழ்வதுவோ இன்னுஞ் சிலநாளே!
மொத்தத்தில் அவ்வாழ்வும் முற்போக்கோ?—ஒத்திடுக!
கத்துகடல் உள்ளளவும், காலங் கருதுகிற
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—புலவர் சிவசங்கரன் திருக்கழுகுன்றம்,

இரவுபகல் பாராமல் இந்நாட்டில் உழைக்கின்றார்
சிரமத்தைச் சிரிப்பாலே வென்றிடுவார்—அரவணைப்பில்
நித்தமுமே அன்னைக்கு நிகராவார் தலைவரவர்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—கவிஞர் கானதாசன், திருவத்திபுரம் அஞ்சல்.

'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றுரைத்த
ஆன்ற தமிழ்க்கவிஞர் ஆய்வுரைக்குச்—சான்றாகப்
புத்துலகைக் காண்பமெனும் எண்ணத்தால் பொங்கிவரும்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—அ. தங்கப்பன், பி.எஸ்ஸி., பி.டி., சிங்கோனு,

கல்விப் புகழினும் கல்லார் குவித்திடும்
செல்வப் புகழினும் சீரியதாம்—இல்லாதார்
இத்தரையில் இல்லையென் றாக்குவோம் என்றெண்ணும்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—உ. அப்துல் ரகுமான், சோலையாறு அணை.

வெண்பாப் போட்டி

எல்லார்க்கும் நன்மை இயன்றனைத்தும் செய்கின்ற
வல்லாண்மை பெற்றநம் வண்டமிழ்—நல்லரசை
எத்துணையும் காப்போம் எனத்தமிழர்—வீறுகொளும்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—புலவர் செ. இராமலிங்கன், புதுச்சேரி-4.

நித்தம் உழைக்கின்ற ஏழையர் தம்வாழ்வில்
குத்துவிளக் கேற்றிக் குதூகலிக்க—இத்தரையில்
சித்தமுடன் நம்தலைவர் சீரியதொண் டாற்றுவதால்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—கா. எழிலன், எட்டுக்குடி அஞ்சல்.

நாட்டுக் குழைக்கின்ற நல்லார் ஒருபோதும்
வீட்டுச் சுகம்நாடார்; வேதனைகள்—காட்டார்; தம்
சொத்தனைத்தும் தோற்றாலும் தொண்டாற்றத் தாம்மறவார்;
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—வை. இரத்தினசாமி, தேத்தாகுடி வடக்கு.

எத்திக்கும் நம்நாட்டின் ஏற்றமாம் மாண்புதனைத்
தித்திக்கும் தீந்தமிழில் தீட்டியிங்கு—முத்திறத்துச்
சத்தியத் திருக்குறளின் சாறெடுத்துத் தந்திட்டால்,
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—அ. பெ. அரங்கநாதன், இராசிபுரம்.

நல்லவைகள் சேர்க்கும் நலமதனை; நல்லதல்லா
அல்லவைகள் சேர்க்கும் அழிவதனை;—எல்லையிலா
முத்தமிழ்தான் சேர்க்கும் முழுமகிழ்வை; சேவையெனும்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—வெண்ணெய் வேலன், ஆனந்தூர் அஞ்சல்.

"அகம்சோர்ந் திடாமல் அயர்வின்றி நாட்டில்
தகவுடைய நல்லாட்சி தன்னின்—மிகநல்ல
தத்துவக்கோட் பாடு தழைக்க உழைத்திடலே
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—வித்துவான் மு. நாராயணன், ஆத்தூர்

மெத்தப் படித்துணர்ந்து மேனிலையில் வாழுகின்ற
உத்தமர்க்கும் ஓர்நாள் உயர்வுகுன்றும்—சித்தமதில்
எத்துணையும் தாழ்வதனை எண்ணா துழைப்பவரின்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—ஆ. ரேணுகாதேவி, கொத்தயம்.

கத்தும் கடல்சூழ்ந்த கன்னித் தமிழகத்தில்
பத்தும் பெருகிடவே பாங்காக—நித்தநித்தம்
புத்தமுதாம் திட்டங்கள் பூக்கும் தமிழரசின்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—புலவர் வி. துரைசாமி, தேவத்தூர் அஞ்சல்.

உழுபவர் கட்கே உரிமை நிலமென்(று)
அழகாகச் சட்டம்அமைத்த—முழுப்பெருமை
அத்தனையும் தொண்டரசின் ஆற்றலெனப் பேணுவதே
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—ஆ. சுப்புலட்சுமி, சென்னை-600017.

ஆக்கம் தரும்பயனை அன்றாடம் செய்துவந்து
பூக்கும் மலர்க்காடாய் இந்நிலத்தை—ஆக்கும்
உத்தமர்கள் செல்வழியை உள்ளத்தில் கொள்கின்ற
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—மா. ஆறுமுகம், அரவக்குறிச்சி.

கண்கெட்ட மாந்தர்க்குக் கண்ணொளி தான்தந்து
புண்பட்ட நோயர்க்கும் புக்களித்த—பண்புள்ள
உத்தமரின் ஆட்சிக்(கு) உயர்ந்தோரின் வாழ்த்தென்றும்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—புலவர் இரா. ஆறுமுகம், சிட்டிலரை அஞ்சல்.

காலத்திற் கேற்பக் கருத்தினை நாமாற்றி
நூலெழுதி மக்கள் நுகர்ந்திட்டால்—ஞாலத்தில்
எத்துணையு மின்றி இடர்நீங்கி வாழ்வார்கள்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—மு. நாராயணன், சத்திரப்பட்டிஅஞ்சல்.

"வாழ்ந்தநிலை எண்ணியெண்ணி வாட்டமுறல்வாழ்வுநல்கா.
தாழ்ந்தநிலை ஏனென்ற தக்கவழி—ஆழ்ந்துணர்ந்து
முத்தமிழ்போல் முக்கனியாய் முக்கொள்கை கொண்டாற்றப்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—கலாவதி காசிநாதன், அமிர்தராயன்கோட்டை,

"இல்லாரை எள்ளாது இருப்பாரே பங்கிட்டால்
எல்லாரும் வாழலாம்; கலிநீங்கும்—தொல்லுகில்
பொன்றுத் துணையாகும்; வசை ஒழியும்;
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—புலவர் நா. கோவிந்த செட்டி, வெங்கட்டம்பட்டி அஞ்சல்.

பூச்சுமந்த கன்னியைப் போல்யானு மிங்கேவெண்
பாச்சுமந்து வந்துள்ளேன் என்பாவின்—வீச்சுக்கு
வித்தே தமிழன்னை; என்வணக்கம் ஏற்றிட்டால்—
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—புலவர் அ. பழனிமுத்து, சோலையார்பேட்டை.

ஏர்முனைக்குத் தண்ணளியும் ஏழைக்குக் கண்ணொளியும்
தேர்ந்தே யரசளித்தல் தேர்வமே—பார்மகிழ
நித்தமும் ஆராய்ந்தே திட்டமிடும் நம்மரசின்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—புலவர் சம்பை. அ. பழனியப்பன். சம்பை அஞ்சல்.

வெண்பாப் போட்டி

''மீனடக்கம் தண்ணீரில்; மின்னடக்கம் கண்ணீரில்;
தேனடக்கம் பூவில்! தினந்தோறும்—நானடக்கம்
நத்தி சிலிர்க்கும் நறும்பெண் ணரவணைப்பில்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—பாலகிருஷ்ணன், பிகானீர் அஞ்சல், இராஜஸ்தான்.

செந்தமி ழன்னையின் சேவடி வீழ்த்தெழுந்து
நந்தமிழ்த் தாய்க்கு நகையணியாய்ச்—செந்தமிழில்
புத்திலக்கி யங்கள் புனைவதொன்றே, நம்மவர்க்குப்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்!''

—சு. சுந்தரராசன், கருங்காலக்குடி.

சுனைநீர் பிணைக்கீந்து சூடாற்றும் ஆண்மான்
தனைக்கண்டு தன்துணையை உள்ளம்—நினைந்திடுமால்
இத்தகைய காட்சி, இலக்கியங்கள் கற்போர்க்குப்
புத்துணர்வும் சேர்க்கும் புகழ்.

—தமிழ்மணி,
வே. கள்ளிப்பாளையம்.

திண்டாதார் வாழ்வு சிறக்கப் பணியாற்றி
மாண்டான்எனச்சொல்லமாச்சிலையொன்—நீண்டிருந்தால்,
சித்திரைப் பொன்நிலவாய் இத்தரை யோர்பலர்க்குப்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—மா.சே. இராசு,
திருப்பூர்.

''புத்தரைப்போல்காந்தியைப்போல்பாசத்தில் அண்ணுபோல்
இத்தரையில் இன்பத்தை யார்படைத்தார்?—சித்தங்கள்
முத்தமிடச் செந்தமிழில் முத்துகளை ஆழ்ந்தெடுப்போம்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—கி.அ. சண்முகம்,
ஒண்ணுபுரம் அ.நி.

தூற்றுவோர் தூற்றட்டும் துஞ்சாமல் தொண்டாற்று
மாற்றுரின் மல்லிகைக்கும் மாண்பளித்தே—தோற்றுலும்
பத்தரை மாற்றுப் பசும்பொன்னும் அண்ணுவின்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.

—தவமுத்து. அண்ணுமலை, பி.ஏ., பி.டி.,
தவசி.

''குற்றங் கடிந்து குணதிசைக் காய்கதிர்போற்
கொற்றம் நடாத்திக் குடியோம்பி—மற்றங்கு
முத்தமிழின் மாட்சியை முற்றும் உயர்த்தியவன்
புத்துணர்வு சேர்க்கும் புகழ்.''

—பெ. குப்பமுத்து,
செல்லப்பம்பட்டி அஞ்சல்.

ஆறே மாதங்களில் அழகிய முத்துக்கள்!



தூத்துக்குடியை ஒட்டியுள்ள முத்துப் பாறைகளில் முத்துவளம் குன்றிவிட்டதால் 1961க்குப் பிறகு முத்துக்குளிப்பு நடைபெறவில்லை. இருந்தபோதிலும், முத்துச்சிப்பிகளை வளர்ப்பதுகுறித்து ஆராய்ச்சி நடந்து வருகிறது.

ஜப்பான் நாட்டில், முத்துச்சிப்பிக்குள் சிறு மணலை வைத்தால் அதிலிருந்து கசியும் நீர், அதை மூடி மூடிப் பிறகு அது முத்தாகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டது. இதுபற்றி ஆராய்ந்துவர மீன்துறையைச் சேர்ந்த அதிகாரி திரு. அழகிரிசாமி ஜப்பான் நாட்டிற்கு அனுப்பப்பட்டார். அவர் அங்கு சென்றுவந்து, தூத்துக்குடி அருகேயுள்ள வேப்பலோடை என்ற இடத்தில் செயற்கை முறையில் முத்துத் தயாரிக்கும் முயற்சியை மேற்கொண்டார். அவர், இதற்காக, 150 முத்துச்சிப்பிகளைப் பிடித்து, அவற்றுள் பிளாஸ்டிக் மணிகளை வைத்தார். இவற்றில் 140 சிப்பிகளில் முத்துக்கள் விளைந்திருந்தன.

ஜப்பான் நாட்டில் முத்து உருவாக 3 ஆண்டுகள் பிடித்தன. ஆனல், தூத்துக்குடியில் ஆறே மாதங்களில் அழகிய முத்துக்கள் விளைந்துள்ளன.



தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள்

பிச்சை எடுத்தலை ஒழிப்பதும், முக்கியமாகத் தொழுநோயால் அவதியுறும் பிச்சைக்காரர்களுக்கு மறு வாழ்வளிப்பதும் குறித்த பிரச்சினை சிறிது காலமாக அரசின் நாட்டத்தை ஈர்த்து வந்திருக்கிறது. 1969-70 ஆம் ஆண்டிற்கான தனது 11-வது அறிக்கையில் மதிப்பீட்டுக் குழு, இம் மாநிலத்தில் உள்ள நகரங்களிலும் மாநகரங்களிலும் பிச்சை எடுப்பதை ஒழிப்பது குறித்துப் பரிவுரை செய்தது. அரசு மதிப்பீட்டுக் குழுவின் பரிவுரைகளை ஆய்வு செய்து, இம் மாநிலத்தில் பிச்சை எடுத்தலை ஒழிப்பதற்கு முதற்படியாக தொழுநோயால் அவதியுறும் பிச்சைக்காரர்களுக்காகச் சிறப்புக்காப்பு மறு வாழ்வு இல்லங்களை அமைக்க முடிவு செய்தது. முதலமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களின் விருப்பத்தின் பேரில், தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கான மறுவாழ்வுப் புரட்சித் திட்டம் முதலமைச்சரின் 48-வது பிறந்த நாளான 3-6-1971 அன்று தொடங்கப்பட்டது. அவரது பிறந்த நாள் விழாவுக்கு மக்கள் அளித்த நன்கொடை நிதியைக்கொண்டு கீழ்க்காணும் இடங்களில் 10 தொழுநோய் பிச்சைக்காரர் மறு வாழ்வு இல்லங்கள் அமைக்கப்பட்டன:

பரனூர் (செங்கற்பட்டு மாவட்டம்). உளுந்தூர்ப் பேட்டை (தென் ஆர்க்காடு மாவட்டம்). பர்கூர் (தருமபுரி மாவட்டம்), புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்). மனையேரிப்பட்டி (தஞ்சாவூர் மாவட்டம்), புதுப்பட்டி (மதுரை மாவட்டம்), மல்லவாடி (வட ஆர்க்காடு மாவட்டம்), விண்ணபள்ளி (கோயம்புத்தூர் மாவட்டம்), தேவியாகுறிச்சி (சேலம் மாவட்டம்), செனலியம்பட்டி (தருமபுரி மாவட்டம்).

பரனூர்

(செங்கல்பட்டு மாவட்டம்)



தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைக் குணப்படுத்தி அவர்களுக்கு மறு வாழ்வு அளிப்பதே இந்த இல்லங்களை அமைப்பதன் தலையாய நோக்கமாகும். அப்பொழுதுதான் அவர்கள் இல்லங்களை விட்டு வெளியேறும்போது, சமூகத்திற்கோ அல்லது அவர்களது குடும்பத்திற்கோ வேண்டப்படாத ஒருவராக இல்லாமல் கவுரவமாகவும், சுயமாகவும் தங்களது வாழ்வை அமைத்துக் கொள்ள இயலும்.

தேவியாகுறிச்சி (சேலம் மாவட்டம்)



இல்லங்களிலுள்ள வசதிகள் :

ஒவ்வொரு இல்லத்திலும் பெரியவர்கள் 400 பேரும் சிறுர் 25 பேரும் தங்குவதற்கு இடவசதி உள்ளது. தம்பதிகளாயிருந்து ஒருவர் தொழுநோயால் பீடிக்கப்பட்டு பிச்சை எடுத்துக் கொண்டிருந்தால் தம்பதிகளிருவருமே இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். அத்தகைய நேர்வுகளில் அவர்களது சிறுர்களை அருகிலுள்ள விடுதிகளிலும் பள்ளிகளிலும் சேர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு இல்லத்திலும் உள்ளவர்களுக்கு இலவசமாக உணவு, உறையுள், உடை. ஆகியவை வழங்கப்படுகின்றன மருத்துவச் சிகிச்சை, வாழ்க்கைத் தொழிற்பயிற்சி, புது வாழ்வு அளித்தல் ஆகியவற்றிற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. பொழுதுபோக்கிற்காக, ஒவ்வொரு இல்லத்திலும் வானொலிப்பெட்டி, அரங்கிற்குள் விளையாடும் கேரம், செஸ் போன்ற விளையாட்டுக்களுக்கும் வாலிபால் போன்றமைதானத்தில் ஆடும் விளையாட்டுக்களுக்கும் வசதிகள் உள்ளன. எல்லா இல்லங்களிலும் மாதத்திற்கு இருமுறை படக்காட்சிகள் காண்பிக்கப்படுவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இல்லத்தில் இருப்போருக்குச் செய்தித்தாள்களும், பத்திரிகைகளும் வழங்கப்படுகின்றன.

உணவு :

வயதுவந்த ஒருவருக்கு அன்றாடம் வழங்கப்படும் உணவுக்கான செலவு ரூ. 1.80. 12 வயதுக்குட்பட்ட சிறுவருக்கு ரூ. 0·90 ஆகும். மாதத்தில் 4 நாட்களுக்கு அதாவது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் இறைச்சி வழங்கவும், எல்லா நாட்களிலும் ஒரு நாளைக்கு இரு முறை மோர் வழங்கவும் உணவு அட்டவணையில் வகை செய்யப்பட்டுள்ளது. இல்லத்தில் உள்ளவர்களுக்கு ஒவ்வொரு நாளன்றும் சிற்றுண்டியும், இரண்டு வேளை சாப்பாடு, மாலையில் வெந்நீரும் வழங்கப்படுகின்றன. நோயுற்றவர்களுக்கும், காசநோயாளிகளுக்கும் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. சுதந்திரதினம், காந்திஜி பிறந்த நாள்போன்ற சிறப்பு விழாக்களின்போது இல்லத்தில் உள்ளவர்களுக்குச் சிறப்பு உணவு அளிக்கப்படுகிறது. இதற்காகும் கூடுதல் செலவு ஒருவருக்கு ரூ. 1-க்கு மேற்படமாட்டாது.

உடை :

இல்லத்தில் இருப்பவர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு இலவசமாக இரண்டு ஜோடி ஆடைகள் வழங்கப்படுகின்றன. இது தவிர, இவர்களுக்குப் படுக்கையும் இலவசமாக வழங்கப்படுகிறது. இவர்களுக்குத் தேங்காய் எண்ணெய், துணிகளைத் துவைப்பதற்குச் சோப்பு, பல்துலக்குவதற்குப் பிரஷ்கள், பற்பசை ஆகியவையும் வழங்கப்படுகின்றன. இவர்களுக்காகத் தனி வகை பூட்சுகளும் வழங்கப்படுகின்றன.

மருத்துவ வசதிகள் :

ஒவ்வொரு இல்லத்திலும் சிறந்த மருத்துவ, அறுவைச் சிகிச்சைகள், இயற்கைமுறை மருத்துவச் சிகிச்சை ஆகியவற்றிற்கு வகை செய்யப்பட்டுள்ளது. 10 இல்லங்களில், உளுந்தூர்ப்பேட்டை, பர்கூர் ஆகிய இடங்களிலுள்ள இல்லங்கள் நீங்கலாக, மற்ற 8 இல்லங்களில் அறுவைச் சிகிச்சைக் கூடங்கள் உள்ளன. இவற்றின் மூலம் அறுவைச் சிகிச்சைக்கான வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. மருத்துவப் பணிகளை மேற்கொள்வதற்கு, ஒவ்வொரு இல்லத்திலும் மருத்துவ அதிகாரிகள் இருவர், பயிற்சி முடித்த செவிலி மருந்தாளுநர்கள் இயற்கை முறை மருத்துவர்கள், துணை மருத்துவப் பணி

விண்ணம்பள்ளி (கோவை மாவட்டம்)



மலையேரிப்பட்டி (தஞ்சை மாவட்டம்)

யாளர்கள் ஆகியோர் உள்ளனர். இவர்களைத் தவிர, தொழில் ஈடுபாட்டு முறை மருத்துவர் ஒருவர் 3 அல்லது 4 இல்லங்களுக்குப் பொறுப்பு வகிப்பார்.

மறுவாழ்வு அளிப்பது குறித்த நடவடிக்கைகள்:

மறு வாழ்வு அளிக்கப்படுவதன் நோக்கம் வருமாறு:—

தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மருத்துவச் சிகிச்சை, அறுவைச் சிகிச்சை ஆகியவை அளிக்கப்பட்ட பின்னர் முதலில் அவர்கள் குணப்படுத்தப்படுவர்; அதே சமயம் வேளாண்மை. நெசவுபோன்ற தொழில்களில் அவர்கள் ஏற்கெனவே ஈடுபட்டிருப்பாராயின் அவற்றில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும் அல்லது புதிய தொழிலில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். மறு வாழ்வுப் பணிகளில் முக்கியமாக பண்ணைத் தொழில், கோழி வளர்ப்பு, பாய் முடைதல், தையல்தொழில், காலணிகள் செய்தல், தச்சு வேலை முதலியவை அடங்கும். பரனூரில் உள்ள இல்லத்தில் இரண்டு விசைத்தறிகளும் சோதனை அடிப்படையில் அமைக்கப்படும். காயங்களுக்குக் கட்டுப் போடும் துணி, பிற மோட்டாரகத் துணிகள் ஆகியவை தவிர செயற்கைப் பட்டுத்துணிகளையும் ஜரிகை துணிகளையும் நெய்வதே இதன் நோக்கமாகும். மேற்கூறிய இல்லத்தில் காட்பாடி, ஸ்வீடன் நாட்டுச் செஞ்சிலுவைச் சங்க மறுவாழ்வு தொழிற்சாலையினரால் நவீனத் தொழிற்சாலை பணிக்களரி ஒன்றும் அமைக்கப்படும். அப்பணிக் களரியில் இல்லத்தில் உள்ளவர்கள் மட்டுமே பணிக்கு அமர்த்தப்படுவர். புதுக்கோட்டையிலுள்ள இல்லத்தில் புத்தகம் கட்டும் பிரிவு அமைப்பதற்கான செயற்குறிப்பு ஒன்றும் பரிசீலனையில் உள்ளது.

ஊதியங்களும் வேலை வாய்ப்பும் :

மேலே குறிப்பிட்ட மறு வாழ்வுப் பணிகளில் இல்லங்

களில் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. வாரந்தோறும் அவர்கள் செய்யும் பணியின் தன்மையைப் பொறுத்து. அவர்களுக்கு ஒரு வாரத்திற்கு 50 காசு முதல் ரூ. 2 வரை ஊதியம் வழங்கப்படுகிறது. இல்லத்தில் உள்ளவர்களுக்கு வரிசை முறைப்படி வேலை அளிக்கப்படும். அவர்கள், இல்லங்களிலேயே துணை மருத்துவப் பணிகளிலும் சமையல்காரர், சமையல் உதவியாளர், அரசு கடைநிலை ஊழியர் பதவிகளிலும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 70 என்ற மொத்தச் சம்பளத்தில் வேலைக்கமர்த்தப்படுவர். ஓட்டுநர், கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் போன்ற சில தொழில் நுட்பப் பதவிகளிலும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100 என்ற மொத்தச் சம்பளத்தில் இவர்கள் அமர்த்தப்படுகின்றனர். இதற்கு இவர்கள் பிற வகையில் உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும். இவர்களை இப் பணிகளில் அமர்த்த வேலை வாய்ப்பகத்தைக் கேட்க வேண்டியதில்லை. இல்லங்கள் அனைத்திலும் இவ்வாறு மொத்தச் சம்பளம் பெறும் பணிகளில் 39 பேர் அமர்த்தப்பட்டுள்ளனர்.

குணமடைந்த தொழுநோய் பிச்சைக்காரர்களை அவர்களது குடும்பங்களிடம் திரும்பச் சேர் சேர்ப்பதற்குச் சமூகப்பணியில் கல்வித் தகுதி பெற்ற சமூகப் பணியாளர் ஒருவர் ஒவ்வொரு இல்லத்திலும் இருப்பார். சமூகப் பணியாளர், பிச்சைக்காரர்களின் குடும்பங்களுடன் தொடர்பு கொள்வர். முடிவில் பிச்சைக்காரர்களைத் திரும்பவும் சேர்த்துக் கொள்ள அவர்களது குடும்பத்தினர் ஒப்புக் கொள்வர்.

இல்லங்களில் சேர்த்துக் கொள்ளுதல்:

தாமே விரும்பி முன்வரும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களை இந்த இல்லங்களில் சேர்த்

மல்லவாடி (வ. ஆ. மாவட்டம்)



உளுந்தூர்ப்பேட்டை (தெ. ஆ. மாவட்டம்)



துக் கொள்வதே இதுவரை அரசின் கொள்கையாக இருந்து வந்துள்ளது. எனினும் சட்டத்தின் கீழ், பிச்சை எடுப்பது ஒரு குற்றமாகும். எனவே, பிச்சை எடுத்தலுக்காகத் தண்டிக்கப்படும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு இந்த இல்லங்கள் அனைத்தும் ''காப்பு இல்லங்கள்'' என்று அறிவிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக இவ்வில்லங்களுக்கு வர விரும்பாத தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைக் கண்டு பிடித்து தண்டனை வழங்கிய பின்னர் இந்த இல்லங்களில் காலவரையறையின்றி நிறுத்தி வைப்பதற்குச் சட்டத்தில் வகை செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் முனைப்பான பரிசீலனையில் உள்ளது.

நிர்வாகம் :

நன்னடைத்தைக் கண்காணிப்புத் துறையின் கண்காணிப்பாளர் மாவட்டத் துணை ஆட்சித் தலைவர், ஒருவரும் கீழ்க்காணும் பணியாளர்களும் ஒவ்வொரு இல்லத்தின் நிர்வாகத்திற்கும் பொறுப்பாக உள்ளனர்:—

இரண்டு மருத்துவ அதிகாரிகள்; பயிற்சி முடித்த செவிலியர்; துணைச் செவிலியர்; இயற்கை முறை மருத்துவர்; ஆய்வுக்கூடத் தொழில் நுட்பப் பணியாளர்; மருந்தாளுநர் : செவிலிப்பணி உதவியாளர் (ஆண்); செவிலிப் பணி உதவியாளர் (பெண்); துப்புரவுத் தொழிலாளர்: சமையற்காரர் சமையல் உதவியாளர்; அலுவலகக் கண்காணிப்பாளர்; பண்டகசாலைக் காப்பாளர்-கணக்காளர்; இளநிலை உதவியாளர்; காவலர்; சமூகப் பணியாளர்கள்; அரசு கடைநிலை ஊழியர்.

மாநில அளவில், சுகாதாரப் பணிகள்-குடும்ப நலத் திட்ட துறை இயக்குநர் இதற்குத் தலைவராவார். அவருக்கு தனி அதிகாரி ஒருவரும், மருத்துவத் துறையில் ஒருவரும், புது வாழ்வுத் துறையில் ஒருவருமாக இரண்டு தனி உதவி அதிகாரிகளும் உதவி செய்வர். இல்லங்கள் அனைத்திலும் மேற்கொள்ளப்படும் புதுவாழ்வு நடவடிக்கைகளை விரிவாகத் தயாரிப்பதில் தனி அதிகாரிக்கு உதவச் சென்னையில் உள்ள தலைமையிடத்தில் தொழில் ஈடுபாட்டு முறை மருத்துவர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இல்லங்களில் கட்டுதலும் பராமரித்தலும் :

இந்த இல்லங்கள் ஒவ்வொன்றையும் கட்டுவதற்குச் சராசரியாகச் சுமார் ரூ. 10 லட்சம் செலவாகிறது. இந்த இல்லங்கள் ஒவ்வொன்றையும் நடத்துவதற்கு ஆண்டொன்றுக்குத்



புதுப்பட்டி (மதுரை மாவட்டம்)

புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்)

தொடர் செலவாக ரூ. 5 லட்சம் ஆகும்.

இல்லங்களில் உள்ள பிச்சைக்காரர்கள்:

இல்லங்களில் 28-2-74-ல் உள்ளவர்களின் எண்ணிக்கை வருமாறு:

செங்கற்பட்டு மாவட்டம் பரனூரிலுள்ள இல்லத்தில் ஆண் 252-ம் பெண் 131-ம் சிறுர் 65-ம் மொத்தம் 448 பேர்.

தென்ஆர்க்காடு மாவட்டம் உளுந்தூர்ப் பேட்டையிலுள்ள இல்லத்தில் ஆண் 260-ம் பெண் 78-ம் சிறுர் 20-ம் ஆக மொத்தம் 358 பேர்.

தர்மபுரி மாவட்டம் பர்கூரிலுள்ள இல்லத்தில் ஆண் 139-ம் பெண் 56-ம் சிறுர் 10-ம் ஆக மொத்தம் 205 பேர்.

புதுக்கோட்டை மாவட்டம் புதுக்கோட்டையிலுள்ள இல்லத்தில் ஆண் 256-ம் பெண் 80-ம் சிறுர் 20-ம் ஆக மொத்தம் 356 பேர்.

தஞ்சை மாவட்டம் மனேயேரிப்பட்டியிலுள்ள இல்லத்தில் ஆண் 162-ம் பெண் 46-ம் சிறுர் 11-ம் ஆக மொத்தம் 219 பேர்.

மதுரை மாவட்டம் புதுப்பட்டியில் உள்ள இல்லத்தில் ஆண் 286-ம் பெண் 96-ம் சிறுர் 28-ம் ஆக மொத்தம் 410 பேர்.

வடஆர்க்காடு மாவட்டம் மல்லவாடியிலுள்ள இல்லத்தில் ஆண் 213-ம் பெண் 56-ம் சிறுர் 23-ம் ஆக மொத்தம் 292 பேர்.

கோவை மாவட்டம் விண்ணபள்ளியிலுள்ள இல்லத்தில் ஆண் 126-ம் பெண் 35-ம சிறுர் 7-ம் ஆக மொத்தம் 168 பேர்.

சேலம் மாவட்டம் தேவியாகுறிச்சியிலுள்ள இல்லத்தில் ஆண் 234-ம் பெண் 89-ம் சிறுர் 26-ம் ஆக மொத்தம் 340 பேர்.

தருமபுரி மாவட்டம் செல்லியம்பட்டியிலுள்ள இல்லத்தில் ஆண் 89-ம் பெண் 34-ம் சிறுர் 11-ம் ஆக மொத்தம் 134 பேர்.

மேற்கூறிய பத்து இல்லங்களிலும் உள்ள மொத்த ஆண்கள் 2017; பெண்கள் 892; சிறுர்கள் 221 ஆக மொத்தம் 2930 பேர்.

அரிசன நலத்துறை அமைச்சர் திருமதி. சத்தியவாணிமுத்து சட்டமன்றத்தில் அளித்த சமூகநலத்துறை 1974–75 மானியக் கோரிக்கை.

பர்கூர் (தருமபுரி மாவட்டம்)

விலைவாசியைக் கட்டுப்படுத்த உதவுங்கள்



அதிக விலை கொடுக்காதீர்கள்

சங்கர் சிமெண்ட் தரம் நிறைந்த சிமெண்ட். ஆனாலும் கூட அதற்கு நீங்கள் அதிக விலை கொடுக்க வேண்டியதில்லை.
அங்கீகாரம் பெற்ற எங்கள் விற்பனையாளர்களிடமிருந்தே வாங்குங்கள். எங்கள் விற்பனையாளர்களிடம் கம்பெனி கொடுத்துள்ள சான்றிதழ் இருக்கிறதா என்று பாருங்கள்.
எங்கள் விற்பனையாளர்களின் கடைகளில் அமுலில் உள்ள நிர்ணய விலை பட்டியல் இருக்கும். அதன்படி நிர்ணய விலையே கொடுத்து வாங்குங்கள்.

SANKAR IC CEMENT

இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்
175/1, மவுண்ட் ரோடு, சென்னை 2

ISI மார்க்குடன் உத்தரவாதம் கொண்டது.

சங்கர் சிமெண்ட்
தயாரிப்பாளர்கள்

FDSIC/1813TMA

இலக்கியங்களுக்கு
இறவாப் புகழ் தருவது...

கா்கிதம்

ஹோமர் முதல் ஹெமிங்வே வரை,
காளிதாசர் முதல் காஃப்காவரை,
ஆதிசங்கரர் தொட்டு அரிஸ்டாடில் வரை,
திருவள்ளுவர் தொட்டு தோரூவரை......

தரமான காகிதம், சிந்தனையாளர்களின் எண்ணங்களும், கருத்துக்களும் காலத்தால் அழிவுறா வண்ணம் காத்து எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கி உதவுகிறது.

சேஷசாயி பேப்பர் அண்ட் போர்ட்ஸ் லிமிடெட்

பள்ளிப்பாளையம்,
சேலம் மாவட்டம்
தமிழ்நாடு

SPB
The Watermark of Quality

எழுத, அச்சிட, உறையிட
உன்னதமான காகிதங்கள்

இளம்பிள்ளை வாதம்

பரவக்கூடிய நோயாகிய இளம் பிள்ளை வாதம், முக்கியமாக சிறு குழந்தைகளைத்தான் பீடிக்கிறது. சிறு குழந்தைகளின் மத்திய நரம்பு மண்டலத்தைத் தாக்கும் இந்நோய், மிக விரைவில் பரவக்கூடியதாகும். மூன்று வகை நச்சுக் கிருமிகளால் இந்நோய் ஏற்படுகிறது. வெப்பம், ஃபார்மலீன், குளோரின் போன்றவற்றின் மூலமாகவும், புற ஊதா நிறக் கதிர்களைப் பாய்ச்சுவதன் மூலமாகவும் இந்நோய்க் கிருமிகளை அழித்துவிட முடியும்.

இந்நோய்க்கான நச்சுக்கிருமி முதலில் சிறு குழந்தைகளின் உடலில் உள்ள உணவுப்பாதையில்தான் காணப்படுகிறது. பின்னர், ஏழத்தாழ 17 நாட்களில் இனப்பெருக்கம் செய்து மூட்டுக்களைத் தாக்குகிறது. இந்த நச்சுக்கிருமி, ரத்த ஓட்டத்தில் கலந்து, மத்திய நரம்பு மண்டலத்தில் சென்று தங்கும்வரை, நோய்க்கான எந்தவித அறிகுறிகளும் காணப்படுவதில்லை. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களில் சிலருக்கு மூளைப் பாதிப்பும் ஏற்படுகிறது என்பது ஆய்வுக்கூட ஆராய்ச்சியிலிருந்து தெரிய வருகிறது. ஒரு குழந்தைக்கு இளம் பிள்ளை வாத நோய் பீடித்துள்ளதா, இல்லையா என்பதை அக்குழந்தையின் மலத்தில் காணப்படும் நோய்க்கிருமியைக் கொண்டு பரிசோதனைக் கூடத்தில் கண்டு பிடித்து விடலாம். இளம்பிள்ளை வாத நோயினால் ஏற்படும் முடக்கு வாதத்திற்குக் குறிப்பிட்ட சிகிச்சை எதுவும் கிடையாது. மிகவும் அதிகமாகப் பரவக்கூடிய நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக மேற்கொள்ளப்படும் பொதுவான நடவடிக்கைகளைத் தவிர, இளம் பிள்ளை வாதநோயினால் அவதிப்படுவோர்க்கு, எந்த உறுப்புப் பாதிக்கப் பட்டிருக்கிறதோ அந்த உறுப்பிற்கு உடலியல் மருத்துவம் உடனடியாக அளிக்கத் தொடங்க வேண்டும். இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காது, மூக்கு, தொண்டை ஆகிய பகுதிகளில் அறுவை சிகிச்சைகள் செய்வதை ஒத்திப்போட வேண்டும். உடல் சுகாதாரம், ஜனநெரிசலைத் தவிர்த்தல், திடீரென உடல் குளிர்ச்சியடைதல் போன்றவற்றின் மூலம் பாதிப்பைத் தடுக்கலாம். இளம் பிள்ளை வாத நோய் குணமாகும் காலத்தில், உடலியல் மருத்துவம் தொடங்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இதை எக்காரணம் கொண்டும் மறந்து விடக்கூடாது.

குழந்தைகளுக்கு, வாயில் இளம் பிள்ளை வாத நோய்த் தடுப்பு மருந்து அளிப்பதன் மூலம் இந்நோய் வராமல் தடுக்க முடியும். இந்த மருந்துக்கு நோய் போக்கும் குணம் கிடையாது. மூன்று முதல் 6 மாதக் குழந்தைகளுக்குக்கூட இந்த மருந்து அளிக்கலாம். குழந்தைகளுக்குப் பரவும் நோய், அல்லது அதிகமாகக் காய்ச்சல், அல்லது வாந்தி, அல்லது வயிற்றுப் போக்கு ஏற்பட்ட காலத்தில், இம்மருந்து அளிக்கக்கூடாது. பொதுவாக ரத்தப் போஷாக்குக் குறைவான குழந்தைகளுக்கும், ரத்தத்தில் புற்று நோய் பீடித்த குழந்தைகளுக்கும் இந்த மருந்து அளிக்கக் கூடாது. இளம் பிள்ளை வாத நோய்த் தடுப்பு மருந்து அளிப்பதற்கு முன்னரும் அளித்த பின்னரும், குறைந்த பட்சம் 3, 4 மணி காலத்திற்கு தாய்ப் பால் கொடுக்கக்கூடாது. இந்த மருந்து அளித்த நாளன்று, வேறெந்தத் தடுப்பு மருந்தும் அளிக்காமல் இருப்பது சாலச் சிறந்ததாகும். இந்த தடுப்பு மருந்து அளித்த அரைமணிக்குள், சூடான நீர் எதுவும் பருகக்கூடாது.

இந்தத் தடுப்பு மருந்தில், மூன்றுவித நோய்த் தடுப்புக் கிருமிகள் உள்ளன. இவற்றின் திறன், இந்தத் தடுப்பு மருந்தை எவ்வாறு குழந்தைகளுக்குக் கொடுக்கிறோம் என்பதில் அடங்கியுள்ளது. இந்தத் தடுப்பு மருந்தில் உள்ள மூன்றுவித நோய்த்தடுப்புக் கிருமிகளில் ஏதேனும் ஒன்றின் வீரியம் குறைந்தாலும், இம்மருந்து தனது நோய்த் தடுப்புத் தன்மையை இழந்துவிடும். இத்தகைய மருந்தைக் கொண்டு, இளம் பிள்ளைவாத நோய்த் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டால் சில குழந்தைகள் மட்டுமே பயனடையும்.

இந்த நோய்த்தடுப்பு மருந்தின் வீரியம் மட்டும் குறைந்து விடாமல் இருப்பதற்காக, இதைக் குளிர்ப்பதனப் பெட்டிகளில் இந்த நோய்த் தடுப்பு மருந்து வழங்குகின்றவர்களும், விநியோகஸ்தர்களும், மருத்துவ நிலையங்களும் இந்த மருந்தை 20 டிகிரி சென்டிகிரேடு குளிர்ப்பதனப் பெட்டிகளில் வைத்திருக்கின்றனர். இந்த மருந்தை, திடக் கார்பன்-டை-ஆக்ஸைடில் வைத்து எடுத்துச் செல்ல வேண்டும். அல்லது உறைக் கலவையில் வைத்து எடுத்துச் செல்ல வேண்டும்.

இளம் பிள்ளை வாத நோய்த் தடுப்பு நிலையங்களில் உள்ள நோய்த் தடுப்பு மருந்து, உறைந்துவிடாமல் இருக்க வேண்டும். அதற்காக இந்த மருந்து உள்ள புட்டிகளை அவ்வப்போது குலுக்கி வைக்க வேண்டும். அப்போதுதான் இந்த மருந்து தனது வீரியத்தை இழக்காது. குழந்தைகளுக்கு இந்த மருந்தை அளிக்கும் நேரத்தில், இதைப் பனிக் கட்டியில் வைத்திருந்தால் மிகவும் நல்லதாகும். ஒவ்வொரு குழந்தைக்கும் தேவையான அளவு இந்த மருந்து அளிக்க வேண்டியது அவசியமாகும். இந்த மருந்து அளிக்கும் நர்சுக்கு, ஒவ்வொரு குழந்தைக்கும் எந்த அளவுக்கு இந்த மருந்து கொடுக்க வேண்டும் என்பதை நன்றாக தெரிந்திருக்க வேண்டும். இந்த மருந்தைக் குழந்தைகளுக்கு அளிக்கும் முன்னர் தேக்கரண்டியை கொதிக்கும் நீரில் சிறிது நேரம் வைத்திருந்து பின்னர் குளிர்ந்த நீரில் குளிரச் செய்ய வேண்டும். டெட்டால், லைசால் போன்ற நோய்க்கிருமி ஒழிப்பு மருந்துகளை உபயோகித்து இத்தேக்கரண்டியைக் கழுவக்கூடாது.

சதுரங்கம் எப்போது தோன்றியது?

சதுரங்க ஆட்டம் கி. பி. 570-ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் தோன்றி, பின்னர் பாரசீகம், மத்திய ஆசியா, அரேபிய நாடுகள், ஐரோப்பா ஆகிய நாடுகளுக்குப் பரவியதாக அண்மைக் காலம் வரை கருதப்பட்டு வந்தது. பேராசிரியர் ஜி. புகசென்கோவாவின் தலைமையில் உஸ்பெக் புதைபொருள் ஆய்வாளர்கள் அண்மையில் கண்டுபிடித்த முயற்சிகளிலிருந்து பழங்காலம் தொட்டு இருந்து வந்த இந்த எண்ணம் மாறிவிட்டது. சர்கான்—தார்யாப் பகுதியில் சுர்ச்சி மாவட்டத்தில் பழங்குடியிருப்பு ஒன்றை அகழ்வாய்வு செய்யும்போது, அவர்கள் பண்டைய இந்தியர்களின் சதுரங்கக் காய்களைப் போன்ற தந்தத்தினால் செய்யப்பட்ட சதுரங்கக் காய்களைக் கண்டுபிடித்துள்ளனர். கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் ஆண்டுவந்த குசான் அரசன் குவிசுகாவின் காலத்தியச் செம்பு நாணயத்தையும் அவர்கள் அதே இடத்தில் கண்டுபிடித்துள்ளனர்.



இந்தச் சதுரங்கக் காய்கள் குவிசுகாவின் காலத்தைச் சேர்ந்தவைகளாகவோ, அதற்கும் முற்காலத்தியதாகவோ இருக்க வேண்டும். கி. மு. இரண்டாவது, முதலாவது நூற்றாண்டுகளைச் சேர்ந்ததாகக் கருதப்படும் புதிர் நிறைந்த சில சதுரங்கத் தடயங்கள் ஏர்தாம் என்னும் இடத்தில் 1965-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றிற்கும் தற்போதைய கண்டுபிடிப்புக்கும் தொடர்பு இருக்கக்கூடும் என்று நம்பப்படுகிறது.

இந்த விவரங்களனைத்தையும் ஆராய்ந்த பி. துர்குனோவ், இந்தியாவிலிருந்து பரவிய இந்த "அறிஞர்களின் விளையாட்டை" மத்திய ஆசிய மக்கள், கிறித்தவ சகாப்தத்தின் முன்னரே அறிந்திருந்தார்கள் என்று மெய்ப்பித்துள்ளார். ஆகவே இதற்கு முன்னர் கூறப்பட்டு வந்ததைப் போலன்றி, அதற்கு 500—700 ஆண்டுகளுக்கு முன்னரே இந்த விளையாட்டை இந்தியர்கள் அறிந்திருந்தனர்.

புகழ்பெற்ற புதைபொருள் ஆய்வாளரான செர்க்கி சம்யாத்னின் 80 நூற்றாண்டுகளுக்கு முன்னரே சதுரங்க விளையாட்டு மக்களிடையே பரவியிருந்ததாகக் கூறினார். அந்தக் காலத்திலிருந்த வேட்டையாளர்கள், இந்த விளையாட்டின் மூலமாகத் தங்களது வேட்டைக் களங்களைப் பற்றிய அறிவைப் பெற்றிருக்கக்கூடும், என்பது சம்யாத்னினது எண்ணம். எனவே, பழங்கால இந்தியாவில் உருவான சதுரங்க விளையாட்டுத் தத்துவத்தின் அடிப்படையாக, வேட்டையாடும் தந்திரம் அமைந்திருக்கக்கூடும் என்று கருத முடிகிறது.